

கல்கி
KALKI 29.4.2001
ரூ. 5.00
ஆண்டிப்பட்டியில்
'ஜெ'. எஸ்.எல்.வி.
டேக் ஆஃப்!
பிரபலங்களின்
பிரசார 'ரூட்'!





2001 ஏப்ரல் 29
விஷு சித்திரை 16
மலர் : 59
இதழ் : 39

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



ஜெயலலிதாவின் வெற்று முழக்கம்


தி.மு.கவின் தேர்தல் அறிக்கை, 'ஊழலற்ற அரசு அமைப்போம்' என்று உறுதியளிக்கவில்லை.

அவ்வாறு கொட்டி முழக்குவதற்கு அவசியமின்றி கடந்த ஐந்தாண்டு கால ஆட்சி பெரிய அளவிலான லஞ்ச - ஊழல் புகார்களின்றி நடந்திருக்கிறது. இதை ஜெயலலிதா, வைகோ நீங்கலாக அனைத்து தரப்பினருமே ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

மாறாக, அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை பிரகடனப்படுத்துவது ஊழலற்ற ஆட்சி என்பதைத்தான்.

'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்று கதறுவது போல் அமைந்திருக்கிறது இந்த அறைகூவல்.

'தனி நீதிமன்ற வழக்குகள் யாவுமே கருணாநிதி அரசு வேண்டுமென்றே புனைந்தவைதான்; பழி வாங்கும் நோக்குடையவை' என்று வாதிட்டு வந்தார் ஜெயலலிதா. ஆனால் ஊழலற்ற ஆட்சியை உறுதி செய்து அவர் தேர்தல் அறிக்கை வெளியிட்ட மறுதினமே, லஞ்ச ஒழிப்புத்துறை (மத்திய அரசு) சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில், அ.தி.மு.க தலைவிக்கு சம்மன் அனுப்பப்பட்டிருக்கிறது! 43.98 கோடி ரூபாயை ஜெ. சட்டவிரோதமாக அயல்நாடுகளுக்கு அனுப்பி ஹவாலா முறையில் டாலர்களாக்கி பிரிட்டனில் இரண்டு ஹோட்டல்கள் வாங்கியதாகக் குற்றச்சாட்டு! இவ் வழக்கில் ஜெ.வுக்கு நெருக்கமான



டி.டி.வி. தினகரனும் ஆஜராகும்படி நீதிமன்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

43.98 கோடி ரூபாய் கொடுத்து வாங்கிய ஹோட்டல்கள், 1998ல் 121.53 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு விட்டன! எவ்வளவு லாபம் என்பதைக் கணக்குப் போடுவதோடு, இத்தனை பெரிய தொகையை ஹவாலா முறையில் வெளியே அனுப்புவதற்கு ஆகியிருக்கக்கூடிய கமிஷன் செலவுகள் என்ன, கையூட்டு எவ்வளவு என்றெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சராசரி இந்தியன், கனவிலும் கருத முடியாத கோடிகளைச் சர்வ சாதாரணமாக நாடு கடத்தியதாக குற்றச்சாட்டு சுமப்பவர்கள்தான் நாளை ஊழலற்ற ஆட்சி வழங்குவதாக சூளுரைக்கிறார்கள். இதை இந்தத் தேர்தல் சீசனின் தலை சிறந்த ஜோக் என்பதற்கு மேலாக என்ன சொல்ல முடியும்!

தி.மு.க அறிக்கையில் இப்படிப்பட்ட ஜோக்குகள் எதுவும் இல்லை. அ.தி.மு.க அறிக்கையைப் போல் எதிரணியின் குற்றங் குறைகளை வரிசைப்படுத்துவதையே முக்கிய காரியமாகக் கொள்ளவும் இல்லை. மாறாக, தொலைநோக்குடன் திட்டங்களைப் பட்டியலிடுகிறது தி.மு.க அறிக்கை.

விவசாயம், தொழில்துறை, வேலை வாய்ப்பு, கிராமப்புறங்களில் அடிப்படை வசதிகள் பெருக்கம் என்று அனைத்து தரப்பிலும் கவனம் செலுத்துகிறது. நீர் நிலைகளைக் குடி மராமத்து முறையில் பராமரிக்க ஆவன செய்யப்படும் என்கிறது. மக்களிடத்தில் அதிகாரம் வழங்கத் தயாராயிருக்கிறது. சமுதாய நலப்பணிகள், சோஷல் செக்யூரிட்டி திட்டங்கள் போன்றவையும் மறக்கப்படவில்லை. பெண்களை ஆயத்தப்படுத்தும் இந்த 2001ம் ஆண்டில் **(women's empowerment year)**, முதுகலை வரையில் அவர்களுக்கு இலவசக் கல்வி வாய்ப்பை அளிக்க முன் வருகிறது.

விளைச்சலையும் உற்பத்தியையும் அதிகரித்து ஏற்றுமதியை அதிகரிக்க இலக்குகள் குறிக்கிறது தி.மு.க அறிக்கை.

அ.தி.மு.க அறிக்கையோ, தி.மு.க ஆட்சியின் குறைகளையும் வீரப்பன் விவகாரம், காவிரிப் பிரச்னை, தமிழ்த் தீவிரவாதப் பிரச்னை போன்றவற்றில் முடிவுகள் காணப்படாதிருப்பதையும்



கடுமையாகச் சாடுகிறது. இந்தப் பிரச்னைகள் யாவுமே ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நிலவி வருபவை. அ.தி.மு.க ஆட்சியின்போதும் இவை இருக்கவே செய்தன. எனவே இன்றைய ஆட்சியை மட்டுமே இவற்றுக்குப் பொறுப்பாக்க முடியாது.

அ.தி.மு.க தேர்தல் அறிக்கையில் தி.மு.க எதிர்ப்புப் பிரசார நெடி அதிகமாயிருப்பதில் ஆச்சர்யமில்லை. ஆனால், கருணாநிதி ஆட்சியில் பணப் புழக்கம் குறைந்துபோய்விட்டது என்று சுட்டும் அவ்வறிக்கை, அ.தி.மு.க ஆட்சியில் அக்குறை நிவர்த்தியாகும் எனவும் பகிரங்கமாகக் கூறுகிறது.

பணப்புழக்கம் அபாயகரமாகக் குறைந்து போயிருந்தால் கடந்த ஐந்தாண்டுகளில் தொழில்துறை வளர்ச்சியுற்றிருக்காது. எனவே பணப்புழக்கம் ஆரோக்கியமான எல்லைகளுக்கு உட்பட்டிருப்பதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.

ஜெயலலிதா ஆட்சிக் காலத்தைய பாணியில் பணப்புழக்கம் தி.மு.க ஆட்சிக் காலத்தில் இல்லாதிருக்கலாம். ஆனால் ஜெ. ஆட்சியில் மட்டும் அத்தனை பணப் புழக்கம் நிலவ காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால் அதிர்ச்சியூட்டும் முடிவுகளை நாம் அடையக்கூடும்.

ஒரு ரூபாய் சம்பளமே வாங்கிய ஒரு முதல்வர் 43.98 கோடி ரூபாயை எவ்வாறு சட்டவிரோதமாக அயல்நாட்டுக்கு அனுப்பினார்...?

உள்நாட்டில் எவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை வாங்கினார்?

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறக்கூடிய ஒரு பகட்டுத் திருமணத்தை எவ்வாறு நடத்திக் காட்டினார்?

தொழில்துறையில் பலர் முதலீடு செய்து உழைத்தால் பணப்புழக்கம் மெள்ள மெள்ள பரவலாகப் பலரிடம் அதிகரிக்கும். ஆனால் ஜெ ஆட்சிக் காலத்தில் அவரிடமும் அவரைச் சார்ந்த சிலரிடமும் பல கோடிகள் புழங்கியிருக்கின்றன என்பது நிதர்சனம். அவர்கள் அதை வாரி இறைக்கவே, தமிழகத்திலும் ஆரோக்கியமான எல்லைகளை மீறி பணம் புழங்கியிருக்கிறது.

தேர்தல் அறிக்கைகள் தராத இந்த விடையை வாக்காளர்கள் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது! ○

உறுமினார் வைகோ; உதிர்ந்தது கூட்டம்!

கோவையில் எங்கு பார்த்தாலும் ம.தி.மு.க கொடிகள், தோரணங்கள், பதாகைகள், கட்-அவுட்கள், 'வைகோவின் வரிப்புலிகளே வருக' என்று போஸ்டர்கள். ஆனால் கட்-அவுட்டுகளுக்கும், பதாகைகளுக்கும், தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று காலை பதினோறு மணி அளவில் ஆபத்து வந்தது. அவை தேர்தல் கமிஷனின் விதிமுறைகளுக்கு மாறாக அமைக்கப் பட்டிருப்பதாகச் சொல்லி மாவட்ட நிர்வாகம் அப்புறப்படுத்தி விட்டது!

ம.தி.மு.கவினர் ரத்தம் சூடாகி மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாடிக் கொண்டிருந்த வைகோவின் கவனத்துக்கு விவகாரத்தைக் கொண்டு போக...

"திருச்சியில் முதல்வர் கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் நாம் வைத்தது போன்ற கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டதே; அவற்றை அங்குள்ள நிர்வாகம் அகற்றவில்லையே!" என்று கொதித்துப் போனார் வைகோ.

"அது அந்த மாவட்ட விவகாரம்; எங்கள் மாவட்டத்தில் நாங்கள் தேர்தல் கமிஷனின் உத்தரவுகளைக் கண்டிப்பாக அமுல் நடத்துவோம்" என்று பதிலடி கொடுத்தது மாவட்ட நிர்வாகம். ம.தி.மு.க மாவட்டச் செயலாளர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மீது புகார் பொழிந்து தள்ளி விட்டார்.

பதாகைகளையும் கட் அவுட்டுகளையும் போலீஸ் அப்புறப்படுத்தியது ம.தி.மு.க.வினரின் உற்சாகத்தை எள்ளளவும் பாதிக்கவில்லை. மாலை நான்கு மணி முதலே மைதானத்தில் வந்து குவியத் துவங்கி



• வைகோ

னார்கள். புலி படம் கொண்ட பனியனுடன் கலந்து கொண்ட இளைஞர்களும் உண்டு. தனித்துப் போட்டியிட நேர்ந்தது குறித்து சிறிதும் வருத்தமில்லை என்று அவர்களிடம் பேசியபோது தெரிந்தது.

"தி.மு.க அணியில் இருந்திருந்தால் பத்து எம்.எல்.ஏக்கள் வரை



• தேர்தல் அறிக்கை வெளியிடுகிறார்

வெற்றி பெற வாய்ப்பிருந்தது உண்மைதான். ஆனால் 1996க்குப் பிறகு கட்சி எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பது தெரியாமல் போயிருக்கும்; அதற்கு இது ஒரு வாய்ப்பு'' என்றார் பேரூர்



• பொருளாளர் கண்ணப்பனுடன்

பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரன்.

"நாங்கள் போயிருக்கக் கூடாது. நன்றாக அவமானப்படுத்தி விட்டார்கள். எங்களை விட பொறுமையாக யாரும் இருந்திருக்க முடியாது; ஏதாவது சிறு பிரச்னையைக் காரணம் காட்டி எங்களைத் துரத்தி விடுவதிலேயே குறியாக இருந்தது தி.மு.க தலைமை'' என்று எரிச்சலுடன் சொன்னார் குன்னூரைச் சேர்ந்த சந்திரன்.

"ஒட்டுமொத்த திராவிட இயக்கமும் வைகோ தலைமையில் எதிர்காலத்தில் அணி வகுக்க இருப்பதற்கான முதல் படி இது'' என்றார் கோவையைச் சேர்ந்த நாகராஜன்.

பிரசாரத்தைத் துவக்குவதற்குக் கோவையை ஏன் தேர்ந்தெடுத்தார் வைகோ? இரண்டு காரணங்கள். ஒன்று கட்சியின் பொருளாளர் கண்ணப்பன் கோவைப் பகுதியைச் சேர்ந்தவர்; நல்ல அமைப்பாளர். அடுத்து வைகோ மீது பாசம் கொண்ட தொண்டர்கள் இந்தப் பகுதியில் அதிகம்.

வ.உ.சி பூங்காவில் மாலை ஐந்து மணிக்குத் துவங்கியது மாநாடு. மேடையின் மேலே மெகா சைஸ் பம்பர சீரியல் லைட். முதலில் சென்னை துரையரசனின் கலைநிகழ்ச்சி. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் தொண்டர்கள் டான்ஸ் ஆடுவதற்கு நல்ல வாய்ப்பு. அதிலும் கலைஞரைக் கிண்டல் செய்யும்விதமாக 'மஞ்சத் துண்டு சாமி' என்ற பாட்டிற்கு ஒரே ஆரவாரம். கூட்டத்தின் நடுவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பா.ஜ.க கொடிகளும் அசைந்தன.

சரியாக ஏழு மணிக்கு மேடைக்கு வந்தார் வைகோ. தொண்டர்களின் உற்சாகம் பல மடங்கு எகிறியது. அம்பேத்கர் உட்பட இரா



• மேடையில் தலைவர்கள்

விட இயக்கத் தலைவர்களின் படங்கள் திறந்து வைக்கப்பட்டன. முதலில் பேசினார் கொள்கைப் பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத்.

"குஜராத் பூகம்பத்தில் இடிபாடுகளிடையே சிக்கினார் புருலா தேசாய் என்ற சிறுமி. அற்புதமாக ஓவியம் வரைவாள். ஆனால் வலது கையை எடுக்க வேண்டியதாகி விட்டது. 'இனி நம்மால் ஓவியம் வரைய முடியாதே' என்று அவள் மூலையில் உட்கார்ந்து விடவில்லை. இடது கையால் ஓவியம் பழகினாள். வலது கையால் எத்தனை சிறப்பாக வரைந்தாளோ அத்தனை சிறப்பாக இப்போது இடது கையால் ஓவியம் வரைகிறாள் அவள். கலைஞர் எங்கள் வலது கரத்தை வெட்டி விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார். இடது கரத்தால் நாங்கள் வெற்றி ஓவியத்தை வரைவோம்'' என்றார் சம்பத்.



வரும் அவசர, அவசரமாகப் பேசிவிட்டு, எட்டரை மணிக்கு மைக்கை வைகோவிடம் கொடுத்து விட்டார்கள். ஒன்றரை மணி நேரத்தில் பேசி முடித்து, தேர்தல் அறிக்கை மற்றும் வேட்பாளர் பட்டியல் வெளியிட்டாக வேண்டும். சென்ட்ரலில் மெதுவாக நகரத் துவங்கும் சதாப்தி எக்ஸ்பிரஸ் திருவள்ளூரைத் தாண்டும்போது எத்தனை விரைவாகச் செல்லுமோ, அப்படித் துவங்கி வேகம் + விறு விறுப்புடன் தொடர்ந்து தொண்டர்களின் நாடி நரம்புகளை முறுக்கேற்றி விட்டார் வைகோ!

"எங்கள் நெஞ்சில் பகை இல்லை. இந்தப் 'பிரிவு' இயற்கையே உருவாக்கிவிட்டது போல அமைந்து விட்டப் பிரிவு. மலைச் சரிவில் பாயும் வெள்ளத்தில் சந்தன மரங்களும் சரியத்தான் செய்யும். பாண்டவர்கள் இறுதியாக துரியோதனனிடத்தில் ஐந்து வீடுகளையாவது கொடுக்கும்படி கேட்டார்கள். ஆனால் இம்மி நிலம் கூட தர முடியாது என்றான் அவன். குருக்ஷேத்திர யுத்தத்தில் என்ன நடந்தது? தர்மம் வென்றது. வீடு கட்ட ஆகாது என்று தூக்கி எறிந்த கல், மூலைக்கல் (கார்னர் ஸ்டோன்) ஆயிற்று. கூட்டணி தர்மத்தைக் கடைசிவரை கடைபிடித்தவன் இந்த வைகோ. ஆனால் கலைஞரிடம் கனிவு இல்லையே; பரிவு இல்லையே.

நாங்கள் பீனிக்ஸ் பறவைகள். சுட்டி பாய்ந்தாலும் மார்பு காட்டும் கூட்டம் எங்கள் கூட்டம். ஊழலையும் குடும்ப அரசியலையும் விரட்டி அடியுங்கள். சாதிக் கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்து தமிழகத்தை பீகாரைவிட மோசமாக மாற்ற முயல்கிறார் கலைஞர். மாறுதல் தருகிற சமுதாயமே முன்னேற முடியும். எதையும் எங்களால் சாதிக்க முடியும்" என்று கர்ஜித்தார் வைகோ...

வானத்தில் கருமேகங்கள் பயமுறுத்திக் கொண்டிருந்தாலும் இயற்கை கருணை காட்டியது. ஆனால் வைகோவின் பேச்சில் அன்று இடி மின்னல், உருக்கமான மழை! மகுடியின் முன்னால் படமெடுத்து ஆடும் நாகம், இடதும், வலதுமாக தலையை ஆட்டிச் சீறுமே, அது போன்று இடையிடையே சீறினார் வைகோ. ஒலிபெருக்கி முன்னால் நின்று அவர் உறுமிச் சீற கூட்டத்தின் கட்டுப்பாடு சிதறி எல்லா பக்கங்களிலும் இருந்தும் 'வைகோ...வைகோ' என உற்சாகக் குரல்கள். ஒரு துடிப்பு மிக்க இளைஞர் கூட்டம் வைகோ பின்னால் இருப்பதைப் பார்க்க முடிந்தது.

"ஜெயலலிதா, கலைஞர் என்று இருவரின் ஆட்சியையும் பார்த்து சலித்து விட்டோம்; மக்கள் கறை படியாத கரத்துக்குச் சொந்தக்காரரான வைகோவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வன்னி காடுகளை வலம் வந்த வேங்கை; பழிக்கு அஞ்சா பண்பாளர் வைகோ" இது கண்ணப்பன்!

மேடையில் ஈசல் பூச்சிகளின் ஆதிக்கம் காரணமாக அனைவரும் வளைந்தும் நெளிந்தும் சமாளிக்க வேண்டியிருந்தது.

தேர்தல் கமிஷன் விதிமுறைகளின்படி பத்து மணிக்குள் கூட்டத்தை முடித்து விட வேண்டுமாதலால் முக்கியப் பொறுப்பாளர்கள் அனை

— ப்ரியன் ஸ்ரீநிவாசன்

படங்கள்: ராஜன்

"நம்ம டாக்டர் 'மாற்று அறுவை சிகிச்சையிலே நிபுணர்'ங்கிறது உண்மைதான்..."

"எப்படி?"

"ஆறுமுகத்துக்குப் பண்ண வேண்டிய ஆபரேஷனை ஏழுமலைக்குப் பண்ணிட்டாரே!"

— தஞ்சை தாமு

அண்மையில் சாகித்ய அகாதமி விருது பெற்ற தி.க.சி, ''அடுத்த சாகித்ய அகாதமி விருது (தமிழில்) ஒரு பெண் எழுத்தாளருக்குத் தரப்பட வேண்டும்'' என்று விழா மேடையிலேயே வெளிப்படையாக வேண்டுகோள் விடுத்தார்.

'எழுத்தில் ஆணென்றும் பெண்ணென்றும் இனம் பிரிப்பது சரியா? ஒரு பெண்ணுக்கு விருது தரவேண்டும் என்று கேட்பது நியாயமா...?' என்ற கேள்விகளுடன் பிரபல எழுத்தாளர்களை அணுகினோம்.



ஆணும் பெண்ணென்று விருது கொடுப்பதா?

ஜெயகாந்தன்:

பொறுப்புமிக்க இலக்கிய விமர்சகரான தி.க.சி, இப்படியொரு யோசனையை சாகித்ய அகாதமிக்குப் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது பெண்களைக் கௌரவிப்பதாக யில்லை. விருதுக்குரிய படைப்புகளைத் தேர்வு செய்வதும், விருது தருவதும், விருதுக் குழுவினரின் வேலை. அதில் தலையிடும் உரிமை நமக்குக் கிடையாது. மற்றபடி பெண் எழுத்தாளர்களுக்கு விருது தரப்படுவதில் எனக்கு எந்த வித ஆட்சேபணையுமில்லை. ஏற்கெனவே பல பெண் எழுத்தாளர்களுக்கு விருது தரப்பட்டுள்ளது.

'என்னை, என் எழுத்துக்களை யாரும் அங்கீகரிக்கவில்லையே' எனப் புலம்புவதே, எழுத்தாளர்களின் சுயமரியாதைக்கு இழுக்கு. படைப்பாளிக்கு விருது பற்றிய ஆதங்கம் என்றைக்குமே இருக்கக் கூடாது.

திலகவதி:

பெண் என்பதால் பரிதாபப்பட்டு சிபாரிசு செய்யப்படுவதோ, சிறப்பு ஒதுக்கீடு தருவதோ அவசியமேயில்லை. அழுத்தமான, தரமான எழுத்துக்களைக் கௌரவியுங்கள். அதுதான் விருதுக்குக் கௌரவம். எழுத்தாளருக்குக் கௌரவம்.

நான்கைந்து வருடங்களாகவே, விருதுகள் சரியான நபருக்குத்தான் தரப்பட்டு வருகின்றன

என்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

பெண் எழுத்தாளர் என்றாலே அடுப்படி, வரதட்சணை, குடும்ப வாழ்க்கை என்று குறுகிய வட்டத்துக்குள் அடைந்து போகும். ஆனால் ராஜம் கிருஷ்ணன், வாஸந்தி போன்ற வர்கள் அதையும் தாண்டி நிறைய விஷயங்களை எழுதி வருகிறார்கள். வாஸந்தி எழுதிய 'யுகசந்தி' அருமையான படைப்பு. விருதுக்குரிய அத்தனை அம்சங்களும் உள்ள நூல். ஜாதீய அரசியல், தாமிரபரணித் துப்பாக்கிச் சூடு, கோவை வெடிகுண்டு என சமகால அரசியல் நிகழ்வுகளை, தெளிவான அரசியல் பார்வையோடு பதிவு செய்திருக்கிறார். அதில் இடம் பெறும் சின்ன கதாபாத்திரம் கூட முழு வடிவம் பெறும் வகையில் மிகவும் நுணுக்கத் தோடு எழுதியிருக்கும் வாஸந்திக்கு விருது தரப்படவேண்டும்.

• ஆண்டாள் ப்ரியதர்ஷினி



ஆண்டாள் ப்ரியதர்ஷினி:

இ.க.சியின் கருத்து ஏற்புடையதே. பெண் எழுத்தாளர்களுக்குச் சலுகை காட்டப்படவேண்டும். ஆண் எழுத்தாளர்களின் நட்பு வட்டம் பெரியது. ஒருவரையொருவர் பரிந்துரை செய்து கொள்கிறார்கள். 'பக்கத்து இலைக்குப் பாயசம் போடு' ரீதியில் முனைந்து வாய்ப்புகளைத் தேடிக் கொள்கிறார்கள். ஆனால் பெண் எழுத்தாளர்களின் சிறந்த எழுத்துக்களை எடுத்துச் சொல்ல யாருமில்லை. அதனால் லாபியிங் தேவைப்படுகிறது.

• ஜெயகாந்தன்



நல்ல எழுத்து வீச்சு கொண்ட மூத்த பெண் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். சிவசங்கரி மிகவும் தகுதியானவர். மிகவும் சீரியஸான எழுத்துக்குத்தான் விருது என்ற விதிமுறையை 'சாகித்ய அகாதமி' கடைபிடிப்பதால், அம்பைக்குத் தரலாம். அவருடைய 'காட்டில் ஒரு மான்' சிறுகதைத் தொகுப்பு சிறந்த படைப்பு.



• இந்திரா பார்த்தசாரதி

இந்திரா பார்த்தசாரதி:

பிரிட்டனில் 'அன்ரிட்டன் கான்ஸ்ட்டிடியூஷன்' இருக்கும். அதுபோலவே 'சாகித்ய அகாதமி'யிலும் 'இந்த வருஷம் பெண் எழுத்தாளருக்குத் தரலாம். ஆணுக்குத் தரலாம்' என்றெல்லாம் சீரியஸான விதிமுறைகளை அமைக்காமல், நெறிமுறையைத் தளர்த்திக்கலாம்.



• திலகவதி

'ஆயுட்கால சாதனை' என்ற முறையில் விடுபட்டுப் போன சீனியர் எழுத்தாளருக்கும், 'இவ்வாண்டு விருதுக்குரியவர்' என்ற பிரிவில் அண்மைக் கால எழுத்தாளருக்கும் என இரண்டு விருதுகள்கூட அறிவிக்கப்படலாம்.

சூடாமணி, அநுத்தமா, வாஸந்தி, சிவசங்கரி போன்ற தரமான எழுத்தாளர்கள், பொதுப்பிரிவிலேயே கௌரவிக்கப்பட வேண்டும்.

— அனு

நீங்கள் கேட்டவை—தராசு!

● ரு. கணேசன்,
பனங்கோட்டூர்

? 27 தொகுதிகள் கேட்டு வந்த புதிய நீதிக் கட்சி இறுதியில் ஐந்து தொகுதிகளில் அடங்கிவிட்டதே! இதிலிருந்து என்ன தெரிகிறது?

! எவ்வளவு கேட்டால் எவ்வளவு கிடைக்கும் என்பது கேட்பவர்களுக்கும் தெரியும்; கொடுப்பவர்களுக்கும் தெரியும்.

● மஞ்சுகதேவன், தானே ●

? என்னங்க, விளையாட்டுத் துறையிலயும் இந்தியா திடீர்னு அசத்த ஆரம்பித்துவிட்டதே? செஸ், பாட்மின்டன், டெஸ்டுகள், டென்னிஸ், கால்பந்து...?

! இந்தியாவில் இது இளைஞர்கள் யுகம். அதனால்தான் எல்லா துறைகளிலும் இளைஞர்களே சாதனை புரிந்து வருகிறார்கள். விளையாட்டுத் துறை விதிவிலக்கல்ல.

● ஆர். வேணுகோபால்,
பெரியகுளம்

? தேர்தலில் வன்முறை பின்னணி கொண்ட ஜாதிக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்த மூப்பனாரைக் கண்டித்த தராசு, இன்று அதே ஜாதிக் கட்சிகளுடன் கலைஞர் கூட்டணி அமைத்திருப்பதைக் கண்டு கொள்ளாததன் மர்மம் என்ன?

! மூப்பனார் மட்டும் சரியான சமயத்தில் சரியான முடிவை எடுத்திருந்தால் 'ஜாதிக் கட்சிகளுக்கும் பெப்பே, ஜெயலலிதாவுக்கும் பெப்பே' காட்டியிருக்கலாமே...! வாய்ப்பைத் தவறவிட்டுவிட்டு விழிக்கிறாரே...! மறுபடியும் அவரைக் குறை கூற நேர்வதில் வருத்தமாயிருக்கிறதே!

● ஆர். சீதாராம், கோவை-1

? தற்போது நிலவும் அரசியல் சூழலில் எந்த கட்சிக்கும் வோட்டுப்போட விருப்பமில்லை. அதே சமயம் என் பேரில் வேறு யாரும் கள்ள வோட்டுப் போடவும் கூடாது... என்ன செய்யலாம்?

! வோட்டுப் போடும்போது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் குறிக்கிட அனுமதிக்கக் கூடாது. இன்று நிலவும் அரசியல் சூழலில் நாட்டுக்கு எது நல்லது என்று சிந்தித்து வோட்டைப் போட்டு விடுங்கள்.

● ஷோபனாதாசன்,
நாட்டரசன் கோட்டை

? ஊழல் அரசியல்வாதிகளைத் தாக்குபிடிப்பது எப்படி....?

! எதற்காக அவர்களைத் தாங்கிப் பிடிக்க வேண்டும்? மக்கள் ஏமாறத் தவாராக இல்லாத பட்சத்தில் ஊழல் அரசியல்வாதிகளால் தாக்குப்பிடிக்க முடியுமா என்ன!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நாட்டரசன்
கோட்டை


? மக்கள் தலைவர் என்று எல்லோராலும் பாராட்டப்படும் மூப்பனாரை அம்மா இப்படி ஏமாற்றலாமா...?

! இந்நாட்டு மன்னர்களையே கரண்டி ஏமாற்றியவருக்கு இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா!

● இராம பார்த்திபன்,
சேத்துப்பட்டு

? சாதனை எது...?

! விவசாயக் கட்டுரைகள் எழுதி பெரும் புகழ் பெற்ற எஸ்.எஸ். நாகராஜன் இலக்கியப் பீடம் விருதைப் பெற்றிருப்பது (ரூ.10,000 பரிசு) விவசாயக் கட்டுரைகள் என்ற பிரிவு இதுவரை இலக்கியமாக அங்கீகாரம் பெறவில்லை.



• அரங்கேறிய விரயம்!

மாறன் விலகல் பேரிழப்புதானே?

● வி. கவிதா ராஜேஸ்வரி, எசனை

? 'உயிருள்ளவரை நான் ஜெ. விசுவாசி' என்கிறாரே தாமரைக்கனியின் மகன்...? இது சரியா...?

! அப்பா விசுவாசியாக இல்லாதபோது, மகன் விசுவாசியாகத் தானே இருந்தாக வேண்டும்!- அதுதானே ஜெ. பாலிட்டிக்ஸ்!


• மக்கள் தலைவர்...




• ...ஏமாற்றல் தலைவர்!



• முதல் அங்கீகாரம்




• மிரட்டும்...



• ...மௌனம்!



• குழப்படி கமிஷனர்!



● ரேவதி சங்கர், சென்னை - 13

? அரசியலிலிருந்து விலக முரசொலி மாறன் முடிவு செய்திருப்பது பேரிழப்பு தானே?

! ஆம். அதன் பரிமாணம் எத்தகையது என்பது கலைஞரின் மௌனத்தால் அடிக் கோடிட்டுக் காட்டப்படுகிறது.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்

? 'தீயவைகளைப் பார்க்காதே, கேட்காதே, பேசாதே என்று மகாத்மா காந்தி சொன்னதை அப்படியே பின்பற்றாமல் தீயன கண்டால், கேட்டால் அதிரடி நடவடிக்கையில் உடனடி இறங்குங்கள்' என்று தேர்தல் பார்வையாளர்களுக்குத் தலைமை தேர்தல் ஆணையர் கில் உத்தரவிட்டிருக்கிறாரே?..

! தேர்தல் கமிஷனர் குறிப்பிடுவது அநீதிகளை; காந்திஜி குறிப்பிடுவது புலன்களை அடிமை கொள்ளும் அவலட்சணங்களை... தேர்தல் கமிஷனர் காந்தியை இழுத்து குழப்பத் தேவையில்லை.

● வி.எஸ்.கோவிந்தன், மதுரை-1

? ஜெ.வை விட்டு கலைஞரிடம் வந்த வைகோவைப் பாராட்டியும் கலைஞரிடமிருந்து ஜெயலலிதாவிடம் சென்ற மூப்பனாரைத் தூற்றியும் சொன்னீர்கள். இப்போது கலைஞரிடமிருந்து வெளிவந்துள்ள வைகோ பற்றி...?

! ஸ்டாலினுக்கும் அவருக்கும் இடையே உள்ள தனிநபர் ஈகோ போராட்டம் தமிழக நலனைப் பின்னுக்குத் தள்ளி விட்டது.

● குட்டிபிரசன்னா, கரூர் ❒

? அனாதை குழந்தைகள் இல்லம், முதியோர் இல்லம், ஊனமுற்றோர் இல்லம் என ஆயிரக் கணக்கில் இருக்கும் போது, சிலபேர் தங்கள் பிறந்தநாள் அன்று ஜெயில் கைதிகளுக்குப் போய் இனிப்பு வழங்குகின்றனரே.. இது சரியா?

! ஜெயில்கைதிகளும் மனிதர்கள்தானே! உண்மையில் அனாதை குழந்தைகளிடமும் ஆதரவற்ற முதியோரிடமும் நாம் பரிவு காட்டுவது ஆச்சர்யமில்லை. கைதிகளிடம் அதே அன்பு செலுத்துவதுதான் கடினம்; ஆச்சர்யம். வரவேற்கப்படவேண்டிய முயற்சி.

● தி.மகராசன், கடமலைக்குண்டு

? தமிழகத்தில் 30-40 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் தியாகம் செய்திருக்கிறது என்கிறாரே மூப்பனார்...?

! பாவம்! தோல்வியைத் தியாகமென்று வேஷங்கட்டினால் மக்கள் ஏமாறுவார்கள் என்று நினைக்கிறார்.

● ப. இராம்முருகன், சென்னை-68

? சென்னையில் விஜய்யின் எழுபது அடி உயர கட் அவுட்டுக்கு 200 குடம் பால், 200 குடம் பன்னீர் கொண்டு அபிஷேகம் செய்தது பற்றி...?

! இத்தகைய அபத்தங்களுக்குத் தடைபோட சம்பந்தப்பட்ட நடிகர்களே முன்வந்தால்தான் உண்டு. இல்லையேல் ஆட்டு மந்தை புத்தியும் ஆராதனை கலாசாரமும் இணைந்து இப்படிப்பட்ட வீண் விரயங்களைத்தான் அரங்கேற்றும்.

● சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? அபாரமான இசை என்று நீங்கள் கருதுவது...?

! அதிகாலை எழுப்பிவிடும் குயில், குருவி, கிளி, மைனா, இன்னும் பெயர் தெரியாத பல இசைப் பேரரசர்கள்; அரசிகள். ஒரு நாளைப் போல என்ன உல்லாசம்; நமக்குப் புத்துணர்ச்சி தரும் உற்சாகம்! ○

❒ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஆர். குட்டிபிரசன்னா,
EL91, TNHB,
காந்திகிராமம்
கரூர்-639004

• ரூ. 25 பரிசு பெறுபவர்:
மஞ்சுதேவன்,
A/102, அஷிஷ் பாலஸ்
எஸ்.வி.ரோடு கிராஸ்,
நவகர் ரோடு,
பயந்தர் கிழக்கு.
தானே – 401 105.



‘பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க’ என்பார்கள். அதேபோல் பதினாறு கூட்டணிகளோடு இணைந்திருக்கிறோம். இதை சாதிக் கூட்டணி என்று சிலர் விமர்சிக்கிறார்கள். இது சாதிக் கூட்டணி அல்ல; சாதிக்கும் கூட்டணி!

– தமது கடைசித் தேர்தலுக்கான முதல் பிரசாரத்தை சைதாபேட்டையில் இப்படி ஆரம்பித்தார் முதல்வர் கலைஞர்.

கூட்டம் 2.30 மணிக்கு ஆரம்பிக்கும் என்று அறிவித்திருந்தாலும் கலைஞர் வந்தது என்னவோ 3.30க்கு. போலீசார் என்னதான் தடுப்புகளை வைத்திருந்தாலும் தொண்டர்கள் கூட்

நீலம் என்றால் ஊனம்





டம் முட்டி மோதியது. பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்த தமிழ் தெரியாத மத்திய ரிசர்வ் போலீசார் தொண்டர்களை ஒழுங்குபடுத்த பட்டபாடு சரியான தமாஷ்! கொளுத்தும் வெயிலில் டி.வி. கேமராமேன்களும், செய்தியாளர்களும் உட்கார வைக்கப்பட்டதுதான் சரியான கொடுமை!

பரிதி இளம்வழுதி, அமைச்சர் சற்குணபாண்டியன், தி.நகர் வேட்பாளர் ஜெ. அன்பழகன் ஆகியோர் 2.20க்கு வந்து மேடையில் காத்திருந்தனர். அவர்கள் முன்பு, ''அங்க போங்க, இங்க போங்க, உட்காருங்க, பேனரை மடக்குங்க, பென்னி உட்காரு, பாய் இப்ப பாட முடியாது; அங்கேயே நில்லுங்க'' என்று உரிமையாய் ஒரு மணி நேரமாய் இதையே பேசிக் கொண்டிருந்த அந்த கவுன்சிலருக்குப் பத்து பாட்டில் பெப்ஸி பரிசளித்திருக்கலாம்! (தொண்டை கரகரத்து வெறுத்துப் போயிருந்த நிலையில் கலைஞர் வந்து காப்பாற்றினார் அவர் தொண்டையை!)

கலைஞருடன் அவர் நிழல் ஆற்காட்டார், அன்பழகன், துரைமுருகன், டி.ஆர். பாலு, கிட்டு ஆகியோர் வந்திருந்தனர். மேயர் ஸ்டாலின் வந்திருந்தும் மேடையில்



ஏறவில்லை. தேர்தல் அறிக்கையை வெளியிட்டுப் பேசிய முதல்வர்,

"முதல் கட்ட பிரசாரத்தை



ரணம் என்றால்...

முடித்துவிட்டு, வரும் 21ம் தேதி நான் வேட்புமனு தாக்கல் செய்வேன்; அந்த வேட்புமனு நிச்சயம் செல்லும்" என்றதுமே தவுஸண்ட் தவுஸண்ட் வாலாக்களை ஒரே நேரத்தில் கொளுத்திப் போட்ட மாதிரி கைதட்டல்! "சில பேர் வேலி இருந்தாலும் தாண்டிப் பார்ப்போம் என்கிறார்கள்; தடுப்புச்சுவர் இருந்தாலும் ஏறிக் குதிப்போம் என்கிறார்கள். இரண்டாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றிருந்தால் அவர்கள் தாக்கல் செய்த வேட்புமனு செல்லாது என்று பல்வேறு தீர்ப்புகளில் வெளிவந்திருக்கிறது. இது தெரிந்தும் சிலர் சட்டத்தை வளைக்க நினைக்கிறார்கள். எப்படி வளைக்கப் போகிறார்கள், வளைப்பார்களா? என்பது போகப் போகத்தான் தெரியும். அல்லது வளையப் போகிறார்களா என்பது சட்டம் வழங்குகின்ற தீர்ப்பாக இருக்கும்" என்றதும் மீண்டும் கைதட்டல்.

கிளம்பும் நேரத்தில் ஒரு குழந்தைக்கு 'வெற்றிச் செல்வி' என்று பெயரும் வைத்தார் கலைஞர்.

குழந்தை கணவருடன் பிரசாரத்துக்கு வந்த கனிமொழி சைதாப்பேட்டையிலேயே அப்பாவுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

இந்தக் கூட்டத்தை முடித்துவிட்டு கலைஞர் சென்றது பல்லாவரத்துக்கு. ஆலந்தூர் தொகுதி வேட்பாளரான ஆர்.எம்.வீரப்பன், கலைஞர் வருவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பே மேடைக்கருகில் காத்திருந்தார்.

"1967ம் ஆண்டு இந்தத் தொகுதியில் திமுக சார்பாக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட எம்.ஜி.ஆருக்காக வோட்டு கேட்டு இங்கு வந்தேன். 34 ஆண்டுகள் கழித்து இப்போது அவரின் உண்மையான சீடர் ஆர்.எம்.வீயை வெற்றி பெறச் செய்ய வேண்டும்



என்று கோரி வந்துள்ளேன்" என்று கலைஞர் சொன்னதும் ஆர்.எம்.வீ முகத்தில் ஆயிரம் வாட்ஸ் பிரகாசம்!

(எம்.ஜி.ஆரின் சீடர் ஆர்.எம்.வீயை எதிர்த்து அ.தி.மு.க சார்பில் நிறுத்தப்பட்டிருக்கும் வேட்பாளரான வளர்மதி, ஆர்.எம்.வீயின் சீடராம்!)

அடுத்து தாம்பரம், கூடுவாஞ்சேரி என்று வழி நெடுக தொண்டர்களும் கட்சிப் பிரமுகர்களும் கலைஞரை வரவேற்க, செங்கல்பட்டு வந்து சேர்ந்தார் கலைஞர். பிரசாரத்தைப் பத்து நிமிடத்தில் முடித்து விட்டாலும் நாற்பத்தைந்து நிமிடம் ரெஸ்ட் எடுத்தார்!

இந்த இடைவேளை குறித்து மதுராந்தகத்தில் தொண்டர்களிடையே அடிபட்ட பேச்சு சுவாரஸ்யமானது:

மதுராந்தகம் ஆறுமுகத்துக்கும் தற்போதைய திமுக வேட்பாளரான உக்கம்சந்துக்கும் பாம்புக்கும் கீரிக்குமான உறவு. சீட் கிடைக்குமென்று எதிர்பார்த்த மதுராந்தகத்தார் ஏமாற்றமடைந்ததால் தமது ஆதரவாளர்களுக்குக் கூட்டத்துக்குச் செல்ல 144 போட்டார். இதனால் கூட்டம் டல்லடிக்க, தகவல் கலைஞருக்குப் போனதாம். 'சீக்கிரம் கும்பலைக் கூட்டுங்க' என்று ஆற்காட்டாரிடமிருந்து தகவல் வந்ததையடுத்து பத்து நிமிடத்தில் எப்படியோ கும்பல் வந்து சேர்ந்தது. பிறகுதான் கலைஞர் செங்கல்பட்டிலிருந்து கிளம்பினாராம்.

மதுராந்தகத்தில் கூட்டத்தைப் பார்த்த போதே அப்படித்தான் தெரிந்தது. 'தாலி எப்ப கட்டுவாங்க; பந்தி எப்ப போடுவாங்க' என்று காத்திருக்கும் ஈடுபாடற்ற கும்பலாகத் தென்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலைஞர் ஜெ. ஆட்சியின் விலைவாசியையும் இப்போதைய விலைவாசியையும் ஒப்பிட்டுப் பட்டியலிட்டார்.

அடுத்த கூட்டம் திண்டிவனத்தில். கலைஞர் வருவதற்குப் பத்து நிமிடங்கள் முன்பு வரை புது பாலத்திற்குக் கீழே போடப்பட்டிருந்த மேடையில் கர்ஜித்துக் கொண்டிருந்த விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன், திடீரென்று பேச்சை முடித்துக்கொண்டு பறந்தார்.

உடனே மேடையை ஆக்கிரமித்தது ஒரு போதைக் கும்பல்! (சின்ன மேடையில் இருபது பேர்!) இஷ்டத்துக்குப் பேசிக் கொண்டிருக்க, கலைஞர் வந்தார். பிரசார வேனில் இருந்துகொண்டே பேசுவதாகத்தான் இருந்தது. கூட்டத்தையும் தொண்டர்களின் உற்சாகத்தையும் பார்த்ததும் மேடையில் ஏறினார் கலைஞர்.

"உதயசூரியன் சின்னத்துக்கு முத்திரையிடுங்கள் என்று சொல்ல மாட்டேன். இப்போது மின்னணு வாக்குப்பதிவு. அதில் நீலப் பொத்தான் இருக்கும். அருகிலேயே உதயசூரியன் சின்னம் இருக்கும். பொத்தானை அழுத்தி நமது சின்னத்திலே வாக்களிக்க வேண்டுகிறேன். நீலம் என்றால் வானம்; வானம் என்றால் உதயசூரியன். மறந்து விடாதீர்கள்" என்ற கலைஞர், இந்தக் கூட்டத்திலேயே செஞ்சி வேட்பாளரான தமிழ் பா.ம.க தீரனுக்கும் வாக்கு கேட்டார். செஞ்சிக்குக் கலைஞர் வராததால் தீரன் அப்செட்டாம்!


— செ. ஏக்நாத்

படங்கள்: **ஜரிஸ்**

● பிரசாரத்துக்கு, கலைஞருடன் ராஜாத்தி அம்மாள், மகள் செல்வி, மருமகன் செல்வம், தமிழரசு, அவர் மனைவி மோகனா, குடும்ப டாக்டர் கோபால் ஆகியோர் செல்கின்றனர்.

● ஒவ்வொரு கூட்ட மேடையிலும், 'தலைவர் இன்னும் பல ஊர்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால்...' என்று ஆரம்பித்து நேரிடையாக கலைஞரிடம் மைக்கைக் கொடுக்கும் பணியை ஆற்காட்டார் செய்து வந்தார்.

● ஜெ.வின் வேட்புமனு செல்லுமா? செல்லாதா? சட்டத்தை மீறுகிறார்; அவர் ஆட்சி விலைவாசி இப்போதைய விலைவாசி – இதை மட்டுமே பிரசாரத்தில் முதன்மைப்படுத்துகிறார் கலைஞர். வேறு எந்த அட்டாக்கும் பிரசாரத்தில் இல்லை.



இரத்த தானம் அளிப்பது நல்லது.

அனுமதிக்கப்பட்ட இடத்தில் அளிப்பதே முறையானது.

உரிமம் பெற்ற அனைத்து இரத்த வங்கிகளிலும் இரத்த தானம் செய்யலாம்.

எனினும் இரத்ததான முகாம்கள் நடத்துவதற்கு கீழ்க்கண்ட இரத்த வங்கிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன.

- அனைத்து அரசு மருத்துவமனை இரத்த வங்கிகள் (64 இரத்த வங்கிகள்)
- இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தால் நடத்தப்படும் இரத்த வங்கிகள்
- லயன்ஸ் இரத்த வங்கி மற்றும் ஆய்வுமையம், மார்ஷல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை
- வாலண்டரி ஹெல்த் சர்வீசஸ் இரத்த வங்கி, அடையாறு, சென்னை
- இரத்த தானம் அளிப்போர் சங்கம், ஆஸ்பத்திரி சாலை, கடலூர்
- ஜீவன் இரத்த வங்கி மற்றும் ஆய்வு மையம், ஜெகந்நாதன் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை
- மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் ரிசர்ச் ட்ரெய்னிங், முகப்பேர், சென்னை
- விருதுநகர் இந்து நாடார் ப. தனசாமி பரிமளாதேவி மெடிக்கல் ட்ரஸ்ட் இரத்த வங்கி, வடக்குத் தேரடித் தெரு, விருதுநகர்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
ஹாட் லைன் : 8256882. இலவசமாக தொடர்பு கொள்ள: 1097

Elegant

எச்சரிக்கை: பணத்திற்காக இரத்த தானம் அளிக்கும் முறையை 1.1.98 முதல் இந்திய அரசு தடை செய்துள்ளது.

✉ வாமனாவதாரத்தில் திருமாலின் அழகைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் என்பதுதான் எத்தனை உண்மை! மனக் கண்ணில் பார்த்தும் மகிழலாம், பத்மவாசனின் ஓவியத்திலும் பார்த்து ரசிக்கலாம். பார்க்கப் பரவசமூட்டும் அழகு!

கரூர், ஆர். ராஜலட்சுமி

✉ தலையங்கம் படித்தேன். தமிழக தேர்தல் கூட்டணி நிலை பற்றிய உங்களது கவலையை வெளிப்படுத்தியிருந்தீர்கள். சரியான கவலைதான். ஆனால் அது தலைவர்களுக்குத்தான் இல்லவே இல்லையே. அதே சமயம் ஜெயலலிதாவின் வெற்றியால் தமிழ்நாடு மிகவும் மோசமான நிலைக்குப் போய்விடும். வழக்குகள் காணாமல் போய் விட்டால் பெரும் கேடு வரும் என்கிற உங்கள் கவலை சற்று விசித்திரமானது, விபரீதமானது மட்டுமல்ல, பயப்படுத்துவதாகவும், தி.மு.க.வுக்கு ஆதரவு கேட்பது போலவும் இருக்கிறது.

க.தே.க. புதூர், வி. துரைசாமி

✉ அ.தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பதாக ஒரு வாசகரும், தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பதாக மற்றொரு வாசகரும் கடிந்து கொள்ள, அதன் அருகிலேயே 'சொல்லாமல் சொல்கிறீரோ?' என்ற தலைப்பு! உண்மைதான். கல்கி என்றுமே நடு நிலைதான் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டீர்!

பெரியகுளம், ஆர். வேணுகோபால்

✉ 'சவால்களைச் சந்திப்போம்' தலைப்பில் வெளியான ஜனா. கிருஷ்ணமூர்த்தியின் பேட்டி படித்தேன். கட்சி நிதிக்காக பங்காரு பணம் வாங்கியது உண்மையெனில் அதை நாலு பேருக்கு முன்பாகக் கொடுத்திருக்கலாமே. ஏன் அப்படிச் செய்யவில்லை? சந்தேகத்திற்கிடமான முறையில் பணம் வாங்கியதை பா.ஜ.க. தலைவர் நியாயப்படுத்துவது நல்லதல்ல.

ஈரோடு-4, கன்னி. சுப்பிரமணியன்

✉ எளிமையான வார்த்தைகள்... ஆனால் அருமையான தகவல்கள்... யோசனைகள். மொத்தத்தில் 'கிச்சன் கிளினிக்' ருசித்து சுவைத்த கிளினிக்!

திருச்சி-14, இரா. திலீப்



✉ 'ரிமோட்' பகுதியில், சீதா துரைஸ்வாமி என்ற ஜலதரங்க விற்பன்னரை, 'வெளித் தோற்றத்தில் வசதி இல்லாதவர் போல' என்று எழுதியிருப்பது அந்த மூதாட்டியை இழிவு படுத்துவதாகும். எழுதுபவர், அந்த பெண்மணியின் கலையை மாத்திரம்தான் விமர்சிக்க வேண்டுமே தவிர தோற்றத்தை அல்ல.

பெங்களூர்-34, விஜயா ராஜன்

✉ தலையங்கம் அருமை! பிடியுங்கள் பாராட்டை!

திருவண்ணாமலை, எஸ்.ஏ. ராஜாராம்

✉ அதிக பக்கங்கள் - ஹாலிடே ஸ்பெஷல் என செய்திகளைக் குவித்து விட்டீர். லீவு போட்டுவிட்டுக் கிளம்பலாம் என்று குடும்ப உறுப்பினர்கள் தொல்லை பண்ணுகிறார்கள்!

சென்னை-26, சி. மகேஷ்.

ஆண்டிப்பட்டியில் 'ஜெ'.எஸ்.எல்.வி. டேக் ஆஃப்!

மதுரை மாநகரத் தொகுதிகளில் தேர்தல் பணிகள் மந்தமோ மந்தம்! மாநகர எல்லைக்குள் வைக்கப்பட்டிருந்த விளம்பரத் தட்டிகளையும், மெகா கவர் விளம்பரங்களையும் மாநகராட்சி அப்புறப்படுத்தி, அழித்துவிட்ட நிலையில், மதுரை தூங்கி வழிந்து கொண்டிருக்கிறது. இதனால் ஜெயலலிதாவின் பிரசாரத் திட்டத்தில் தடாலடி மாற்றம்! மதுரையில் பிரசாரம் செய்யும் திட்டத்தைக் கைவிட்டு, வேட்பு மனு தாக்கல் செய்ய ஆண்டிப்பட்டிக்குச் சென்று விட்டார்.

இராகுகாலம் தொடங்கும் முன்பாக காலை 11.15 மணிக்கு





உ.பி.ச சசிகலா சகிதம் டாட்டா சியரா காரில் மதுரை அசோக் ஹோட்டலிலிருந்து புறப்பட்டது "ஜெ'.எஸ்.எல்.வி'. அவரது வாகனத்தைப் பின்தொடர்ந்து பெரியகுளம் தொகுதி அ.தி.மு.க எம்.பி. தினகரன், மாநிலப் பொருளாளர் சீனிவாசன் என்று பிரபல கட்சிப் பிரமுகர்கள் பவனி!

ஆண்டிப்பட்டியை நெருங்கும் முன்பாக 'கணவாய்' என்ற இடத்தில் ஜெயலலிதா கார் நின்றது. அருகிலேயே சாஸ்தா கோவில். ஒரு நூறு பெண்கள்; ஒவ்வொருவர் கையிலும் ஆரத்தி தட்டு! தட்டிக் கழிக்காமல் தாய்க்குலத்தின் மரியாதைக்குத் தலை

வணங்கி விட்டு, சசிகலாவுடன் கோவில் உள்ளே சென்று தரிசனம்! அரை மணி நேரம் கரைந்து போனது.

ஆண்டிப்பட்டி வந்து சேர்ந்தபோது பேருந்து நிலையம், கடைவீதியென்று சாலையின் இருமருங்கிலும் மக்கள் வெள்ளம். அவர்களுக்குக் கையசைத்தபடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றார்.

தேனி கலெக்டர் அலுவலகத்தை நெருங்குவதற்கு முன்பாக, எஸ்.எஸ்.புரத்தில் ஜெயலலிதாவின் கார் நின்றது. இவரது வாகனத்தை வால் பிடித்துச் சென்றால் மிகப் பெரிய கௌரவம் என்று கருதிய காஸ்ட்லி தொண்டர்கள், சுமோக்களில் ஆங்காங்கே இணைந்து கொண்டதால் வாகனங்களின் எண்ணிக்கை நூறைத் தாண்டி விட்டது! நூறு கார் பவனியென்றால் ஊர்வலமாகியிருக்குமே! ஊர்வலமாக வந்து வேட்புமனு தாக்கல் செய்ய தேர்தல் கமிஷன் தடை இருப்பதை மறவாமல், ஜெ., பெரும்பாலான வாகனங்களை, தேனி நோக்கிச் செல்லுமாறு உத்தரவு போட, போலீசார் உதவியுடன் 'சர் சர்' என்று ஓட்டிப் போனார்கள்.

எஞ்சிய இருபது இருபத்தைந்து வாகனங்களோடு வந்த ஜெயலலிதா, இடது பக்கம் இருந்த கலெக்டர் அலுவலகத்திற்குள் நுழையாமல் நேரே தேனி சாலையில் சிறிது தூரம் சென்று பிறகே திரும்பி வந்தார். காரணம் என்னவென்று கட்சிப் பிரமுகர் ஒருவர் கிசுகிசுத்தார்:

"மேற்கு பக்கத்திலிருந்து கிழக்கு நோக்கி வர வேண்டும் என்று விரும்புகிறார்'' என்று அவர் சொல்லி முடிப்பதற்குள், ஜெயலலிதாவின் வாகனம் திரும்பி வந்தது.

சரியாக 1.55 மணிக்கு உள்ளே நுழைந்தார் ஜெயலலிதா. வேட்புமனுவை ஜெயலலிதாவே நிரப்பி கையெழுத்திட்டார். அருகிலிருந்த முன்னாள் அரசு அதிகாரி மலைச்சாமியிடம் கையெழுத்துக்குக் கீழே தேதி போட வேண்டுமா என்று ஜெ. கேட்க, 'போடுங்களேன்' என்றார். உடனே தேதியைப் போட்டு 1.58 மணிக்கு வேட்பு மனுவைத் தேர்தல் அதிகாரியிடம் கொடுக்க... கேமராக்கள் கிளிக்கித் தள்ளின. அதன்பிறகு "சட்டவிதிகளுக்கு இணங்கி, இந்திய அரசியலமைப்பின் விதிகளுக்குட்பட்டுச் செயல்படுவேன்'' என்று மெல்லிய குரலில் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். பிறகு வேட்பாளர் பின்பற்ற வேண்டிய விதிமுறைக் கையேட்டை ஜெவுக்கு, தேர்தல் அதிகாரி ஜெயா கொடுக்க அங்கிருந்து நகர்ந்தார்.



ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஒருவேளை ஜெயலலிதா போட்டியிட முடியாத சூழ்நிலை வந்தால்...? அதற்காக நியமிக்கப்பட்டுள்ள டம்மி வேட்பாளர் தமிழ்ச்செல்வன் (அதிமுக மாணவரணிச் செயலாளர்) மனுத்தாக்கல் செய்தார். ஆனால் அபிடவிட் பாரத்தில் அவர் கெஜெடெட் அதிகாரியிடம்



கையெழுத்து வாங்காமலேயே வந்துவிட்டதால் மறுநாள் அபிடவிட்டை வாங்கி வந்து தந்தால்தான் வேட்புமனுவை ஏற்க முடியும் என்று அதிகாரி சொன்னதும் அதற்கு அவர் தலையாட்டி விட்டுப் புறப்பட்டார்.

தேர்தல் அதிகாரியை நிருபர்கள் சூழ்ந்து கொண்டனர். "ஜெயலலிதாவின் வேட்புமனுவில், தாம் தண்டனை பெற்றவர் என்று குறிப்பிட்டுள்ளாரா? வேட்புமனுவைக் காட்ட முடியுமா?'' என்று துளைத்தனர். "அவர் மனுவைப் பூர்த்தி செய்துள்ளார். தகவல்கள் ரகசியமாக வைக்கப்பட வேண்டியவை'' என்று பதில்

சொல்லிவிட்டு வேட்புமனு இருந்த பைல் மீது பத்திரமாக கைவைத்து அணைத்துக் கொண்டார் தேர்தல் அதி காரி!

மைக் பொருத்தப்பட்ட பிரசார வேனில் சகோதரி சகிதம் ஏறிக் கொண்டு பேசினார். "கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டு, தீவிரவாதம் தலை தூக்கி விட்டது. கள்ளச் சாரா



யம் பெருக்கெடுத்தோடுகிறது. பொது விநியோகம் சீரழிந்து விட்டது. ரேஷன் அரிசிக் கடத்தலில் 1400 கோடி கொள்ளை. இலவச வேட்டி சேலையை டெல்லியில் விற்ற கொடியவர்களுக்கா உங்கள் வோட்டு?" என்று கேள்வி கேட்டபடி தேனித் தொகுதி வேட்பாளரை ஆதரித்துப் பேசினார்.

ஆண்டிப்பட்டி எல்லைக்குள் நுழைந்து குன்னூர் கிராமத்தில் கொடியேற்றி வைத்துப் பேசினார். ஆனால் ஜெ ஏற்றிய கொடி பறக்காமல் முரண்டு பிடித்ததால், உடனடியாக ஒரு தொண்டர் கொடியை இறக்கி சிக்கலை நீக்கி, பின்பு மறுபடியும் ஏற்றினார்!

அங்கிருந்து அனுப்பபடித் தேவன்பட்டி கிராமத்தில் நுழைந்து ஜெ பிரசாரம் செய்தார். "இந்தத் தொகுதியில் தான் புரட்சித்தலைவரை வெற்றி பெறச் செய்து முதல்வர் ஆக்கினீர்கள். இதே தொகுதியில் உங்களை நம்பித்தான் போட்டியிடுகிறேன்... என்னைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்ய எதிரிகள் சூழ்ச்சி செய்கிறார்கள்" என்று பேசினாரே தவிர, சென்ற முறையைப் போல பாட்டுப் பாடவில்லை!

அடுத்து திருமலாபுரம் கிராமம். ரயில்வே கிராசைத் தாண்டி 'ஜெ'யின் கார் சென்றுவிட, அந்த நேரம் பார்த்து, மதுரை போடிநாயக்கனூர் பாசஞ்சர் ரயில் வந்து விட்டது... அவசர அவசரமாக பாதுகாப்புப் போலீசார் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த கார்களை அப்புறப்படுத்தினார்கள்... ரயில்வே கேட்டுக்கு மறுபக்கம் மாட்டிக்கொண்டார் தினகரன். வாகனத்தில் அமர்ந்தபடியே நமது கேள்விகளுக்குப் பதில் சொன்னார்.

"கடந்த பதினெட்டு மாதத்தில் உங்கள் தொகுதிக்காக என்ன செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டதும், அடுத்த வினாடி "ஒன்றரைக் கோடிக்குத் திட்டப் பணிகளை மேற்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நமது கேள்விக்குக் காத்திருக்காமல் தமது எம்.பி தொகுதி நிதி ரூபாய் நான்கு கோடி, பயன்படுத்தப்படாத முன்னாள் எம்.பி நிதி ஒரு கோடி என்று கணக்கு காட்டியவர், இந்த நிதிகளைச் சமுதாயக் கூடங்கள் அமைக்கவும், கழிவுநீர் வசதிகளை ஏற்படுத்தவும் செலவிட்டோம் என்றார். 'தேனி கரும்பு விவசாயிகளின் பிரச்னையைக் கலைஞர் அரசு கண்டு கொள்ளவேயில்லை' என்றவரிடம், "28 கோடி அபராதம் எப்போதும் கட்டப் போகிறீர்கள்" என்று கேட்டதும் இலேசாய்ச் சிரித்து பதில் சொல்ல வாய் திறப்பதற்குள், வாகனங்கள் நகர்ந்துவிட, தினகரனும் எஸ்கேப்!

ஒவ்வொரு கிராமத்திலும் இரட்டையிலை சின்னம் வரையப்பட்டிருந்தாலும், வேட்பாளர் ஜெயலலிதாவின் பெயர் எழுதப்படாமல் காலியாகவே விடப்பட்டிருந்தது. 'இருபத்து நான்காம் தேதிக்குப் பிறகு வேட்பாளர் பெயரை எழுதிக் கொள்ளலாம் என்று கட்சி மேலிடம் கட்டளையிட்டுவிட்டது' என்று சொன்னார் ஒக்கரைப்பட்டி அதிமுக தொண்டர் ஒருவர்!

51 கிராமங்களில் பிரசாரம் செய்யத் திட்டமிட்டிருந்தாலும் கன்னியப்பிள்ளைபட்டி கிராமத்துடன் சேர்ந்து மொத்தம் பத்து கிராமங்களில்தான் பிரசாரம் செய்தார் ஜெ.

மறுநாள் மதுரை மாநகர் தொகுதிகளில் பிரசாரம். இங்கே 'கொப்பரை கொள்முதலில் ஊழல்' என்பதைத் தவிர அவரது பிரசார பேச்சில் எந்தப் புதுமையும் இல்லை.

தமிழக மக்களையும், தமிழ்நாட்டையும் காப்பாற்ற உறுதி எடுத்துள்ளதாகக் கூறிய ஜெயலலிதா, "கோர்ட் தீர்ப்பைவிட மக்கள் தீர்ப்பையே நான் மதிக்கிறேன்" என்று ஒவ்வொரு இடத்திலும் சொன்னார்.

— மதுரையிலிருந்து ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள்: **ராஜன்**



ஸ்டுடியோவில் ஆயத்த நீதிமன்றம் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. துணை நடிகர்கள் மற்றும் துணை நடிகைகள்தான் பார்வையாளர்கள்.

"இப்ப எல்லாரும் சிரியுங்க. சிரிப்பிலே ஒரு கேலி இருக்கட்டும். கேமிரா ஆக்ஷன்."

அனைவரும் எள்ளலாகச் சிரித்தனர்.

''இப்ப உங்க முகத்திலே அதிர்ச்சி வரணும். 'இதென்ன அநியாயம்?'ங்கற மாதிரி ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கணும்.''

புகைப்படக் கருவி ஒளியைப் பாய்ச்ச, உதவி இயக்குனர் வேணுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர் துணை நடிகர்கள்.

''இப்ப விரக்தியா ஒரு லுக் விடுங்க. இப்ப எல்லாரும் சந்தோஷமாய்க் கையைத் தட்டணும்.''

மின்னல் வேகத்தில் காட்சிகள் படச் சுருளில் அடைபட்டன.

காட்சிகளின் எந்தப் பகுதியில் எந்த வசனங்களின் நடுவே இவையெல்லாம் இடம் பெறப் போகின்றன என்பது அந்த நடிகர்களுக்குத் தெரியாது. அது குறித்து அவர்களுக்கு அக்கறையுமில்லை.

இதையெல்லாம் கவனித்தபடி சற்றே தூரத்திலிருந்து அங்கு வந்து கொண்டிருந்தாள் சிவப்ரியா.

இதெல்லாம் அவ்வளவு முக்கியமான பகுதிகள் இல்லை என்று நினைத்தாரோ அல்லது தனது ஜூனியர்களுக்கும் போதிய பயிற்சி அளிக்க வேண்டியது தனது கடமை என்று எண்ணினாரோ, உதவி இயக்குனர் வேணுவுக்கும் அவ்வப்போது சில ஷாட்களை இயக்க வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தது.

வேணுவுக்குப் பின்புறமாக படநாயகி வருவதைப் பார்த்த ஒரு யூனிட்காரர் 'அண்ணே, நம்ம புது ஹீரோயின்...' என்று கூறத் தொடங்க, அதைத் தவறாகப் புரிந்து கொண்டான் வேணு.

''அவனுக்கென்ன?

மனமறிய ஆவல்... 3

அருண் சரண்யா

ரொம்ப ராங்கின்னு சொல்ல வரீங்களா? அது தான் தெரியுதே. முழுங்கால் தெரியக் கூட அம்மா உடுத்த மாட்டாங்களாமே. கொஞ்சம் உட்டா டாக்டருங்க போட்டுக்கற வெள்ளை ஓவர்கோட்டைப் போட்டுக் கிட்டுதான் டுயட் ஆடு வேன்னு கூட சொல்லுவா. புதுச் செருப்பு. கொஞ்ச நாள் கடிக்கட்டும்." தற்செயலாகத் திரும்பி சிவப்ரியாவைப் பார்த்திருக்காவிட்டால் மேலும் கூட அவன் ஏதாவது கூறியிருக்கக் கூடும். இளரத்தம். சிறு வயதிலிருந்தே நச்சுச் சூழலில் வளர்ந்திருந்ததால் மாசுபடுத்தப்பட்ட ரத்தம்!

கடும் கோபத்துடன் அவனைப் பார்த்த சிவப்ரியா, இயக்குனர் இருந்த திசையை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினாள். போகும் வழியில் அவளுக்கே உரிய தடுப்பு சக்தி விஸ்வரூபமெடுத்தது. 'நான் நடிக்கப் போவது ஒரே படத்தில். அதற்குள் ஏன் புகார்களும் கசப்புணர்வும். தவிர வாதங்கள், பிரதிவாதங்களால் யாராவது உண்மையாகவே மனம் மாறியிருக்கிறார்களா என்ன? இதனாலெல்லாம் சலனப்படக் கூடாது.'

ஆனால் ஆனந்தின் அடிபட்ட பார்வைதான் மீண்டும் மீண்டும் மனத்தில் ஆக்ஷன் ரீப்ளே ஆகிக் கொண்டிருந்தது. சலனப் படுத்தியது.

'அவனை இழந்து கொண்டிருக்கிறோமோ?'

'ஐ லவ் யூ' என்று அவனோ அவளோ கூறிக் கொண்டதில்லை. அவர்களிடையே மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது ஏற்பட்ட ஈர்ப்பு அன்பாய்க் கிளைவிட்டு காதலாய்ப் பழுத்துவிட்டது.

ஒருமுறை சற்றே தயக்கத்துடன் 'ஆனந்த் தப்பா எடுத்துக்காதே. டாக்டர் ராம்ஷேகர் நம்ம காதலை ஒத்துக்கல் லேன்னா எனக்கு வேறே வழி இருக்காது' என்றபோது மட்டும் கோபப்பட்டான்.

"யாரு மார்லன் ப்ராண்டோவா?"

"என்ன சொல்றே?"

"அவர் உன் 'காட்ஃபாதர்'தானே? அதைச் சொன்னேன். ஒண்ணை நீ தெரிஞ்சுக்கணும். காதல்ங்கிறது இதயம் சம்பந்தப்பட்டது. நீ அறிவாலே மட்டுமே இதை அணுகறே ஷிவ். கட்டுப்பாடுகளை உடைத்து வெளியேறுவதுதான் காதல். நீ நேரெதிராக இருக்கே."

ஒரு கணம்தான் தயங்கினாள் சிவப்ரியா. பிறகு சட்டென்று "இதயம் எதுன்றதை வருங்கால டாக்டர் ஆனந்தைக் கேட்கலாமா?" என்றாள்.

"இதயம்கிறது வெறும் தசைகளாலும் ரத்தக்குழாய்களாலும் வால்வுகளாலும் அமைந்த பம்ப்பிங் ஸ்டேஷன்னு நிகழ்கால மருத்துவக் கல்லூரி மாணவன் ஆனந்த்துக்கே தெரியும் ஷிவ். ஆனா இதயம்னு நான் சொன்னது உருவகம். அது உனக்கும் தெரியும்."

"ஆனா மூளைன்றதோ அறிவுன்றதோ உருவகம் இல்லே. நிஜம். நிஜத்தைக் கற்பனைங்கற கிரகணம் பிடிச்சு முழுங்க நான் அனுமதிக்க மாட்டேன்."

அன்று அவமானப்படுத்தப்பட்டது போல வெளியேறினாலும் 'நீ சொன்னது நியாயம்தான்' என்றான் அடுத்த நாளே வந்து.

"யோசிச்சுப் பார்த்ததிலே உண்மை விளங்கிடுச்சா?"

அவனது புன்னகையே அவன் எங்கே வருகிறாள் என்பதை ஆனந்துக்கு உணர்த்தியது.

"யோசிக்கவே விடலே என் இதயம். ஷிவா சொன்னா கரெக்டாகத்தான் இருக்கும்னு தீர்ப்பு சொல்லிடுச்சு."

இருவருக்



கதைகளை அனுப்பியாச்சா?

மிகச் சிறந்த சிறுகதைகளை அதிக அளவில் வெளியிடும் கல்கி, ரசனைக்குரிய எழுத்துக்களை ஊக்குவிக்கும் கல்கி, தரமான எழுத்தாளர்களை உருவாக்குவதன் பொருட்டு நடத்துவதுதான் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி.

உங்கள் எழுத்துத் திறனுக்கு வெளிச்சம் போட நல்லதொரு வாய்ப்பு!

இவ்வாண்டு போட்டிக்கான கதைகள் அனுப்ப கடைசித் தேதி ஜூன் 15 என்பதை நினைவூட்டுகிறோம்.

முழு விவரங்கள் சென்ற அல்லது அடுத்த இதழில்...

(–ஆர்)

குமே சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

ஒரு நாள் உடற்கூறியல் வகுப்பு முடிந்து உணவு இடைவேளைக்காக கலைந்து கொண்டிருந்தபோது அவன் கேட்டான்.

''உன்கிட்டே கொஞ்சம் தனியாப் பேசணும் ஷிவ்.''

''சாயந்திரம் க்ளாஸ் முடிஞ்சதும் பேசலாமே ஆனந்த்.''

"காலேஜிலே வேணாம் ஷிவ்."

பின் எங்கே பேச? ஆனந்த்தின் இருப்பிடத்திற்குப் போக முடியாது. அது பிரம்மச்சாரிகள் தங்கும் புறாக்கூண்டு வரிசை என்றும் ஒவ்வொன்றிலும் குறைந்தது மூன்று ஆண் புறாக்கள் என்றும் ஆனந்த் கூறியிருக்கிறான். அவள் தங்கியுள்ள கல்லூரி விடுதியில் ஆண்களுக்கு அனுமதியில்லை. பூங்கா, கடற்கரை என்று போக கூச்சம். பிறர் குறித்துக் கவலையில்லை. ஆனால் தங்கள் காதலை டாக்டர் ராம்ஷேகரிடம் கூறாத நிலையில் அவர் காதுக்கு இந்த விஷயம் யார் மூலமாவது கசிந்தால் நிலைமை சிக்கலாகிவிடும். என்ன செய்ய?

"நம்ம காலேஜாகவும் இருக்கக் கூடாது. உட்கார்ந்து பேசக்கூடிய இடமாகவும் இருக்கணும். அதே சமயம் நம்மைப் பார்க்கறவங்க யாரும் தப்பாகவும் நினைக்கக் கூடாது. அவ்வளவுதானே. கவலையே வேண்டாம். நம்ம காலேஜ்கிட்டேயே அப்படி ஓர் அற்புதமான இடம் இருக்கு. சாயந்திரம் அங்கே போகலாம்" என்றான் ஆனந்த் உற்சாகமாக.

பல வரிசைகளில் அசைக்க முடியாத நாற்காலிகள். சுற்றிலும் இடைவிடாத இரைச்சல். அவரவருக்கு அவசர வேலைகள். எங்கும் பரபரப்பு. யாரும் சுண்டல் முறுக்கு என்று இடைஞ்சல் செய்ய மாட்டார்கள்.

"அட, கடைசியிலே சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன்தான் உன் சாய்ஸா?" என்று சற்று உரத்தே சிரித்தாள் சிவப்ரியா.

"சரி, என்ன சொல்ல நினைச்சே?"

மிகவும் இயல்பாகக் கேட்பதுபோல வினவினாலும் அவனது அருகாமை பரவசத்தைத் தந்து கொண்டிருந்தது. துறுதுறுப்பான புத்திசாலி இளைஞன். தனது முதல் கவனம் எப்போதும் டாக்டர் தொழிலில்தான் என்பதையும், அதைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் வருங்காலத்தில் அவன் எந்த விதத்திலும் ஆளுமை செலுத்தக் கூடாது என்பதையும் நிபந்தனையாகவே போட்டபோதும் புரிந்து கொண்டு ஆதரிப்பவன். அம்மா மறுக்குமளவுக்கு இவனைப் பொருத்தவரையில் எந்த வேறுபாடும் இல்லை. பேராசிரியர் டாக்டர் ராம்ஷேகருக்கும் கூட ஆனந்த 'பெட்' மாணவன்தான்.

ஆனந்த் அங்குமிங்கும் கண்களை அலையவிட்டான். பிறகு தனது உள்ளங்கையை விரித்து அதையே உற்று நோக்கினான். சிவப்ரியாவைப் பார்த்துவிட்டு உடனே பார்வையைத் திருப்பிக் கொண்டான். 'எதைச் சொல்லத் தவிக்கிறான் இவன்?'

"ஷிவா, நாளைக்கே நமக்குக் கல்யாணம்

ஆச்சுன்னு வச்சுக்க..."

"நோ. நாளைக்கு இல்லே. எம்.பி.பி.எஸ். முடிச்சு, எம்.எஸ். முடிச்சு, ரெண்டு வருஷமாவது ப்ராக்டிஸ் செய்து முடிச்சு, அப்புறம் தான் மூணு முடிச்சு. டாக்டராகி இந்த சமூகத்துக்கு நிறைய செய்யணும்கிற ஆர்வங்களை வளர்த்துக்கிட்டிருக்கேன் ஆனந்த். நம்ம காதலை முதன்மைப்படுத்தி அதைத் திசை திருப்பிடாதே ப்ளீஸ்."

"இதை ஏன் அடிக்கடி சொல்றே ஷிவா. என்கிட்டே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"அப்படியில்லே ஆனந்த். இதையெல்லாம் நான் உன்கிட்டே சொல்வதற்காக மட்டும் சொல்லிக்கல்லே. எனக்கும் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்திக்கிறேன். உரத்த சிந்தனைன்னு வச்சுக்க. சரி, நீ சொல்ல வந்ததைச் சொல்லு."

"ஒக்கே. நானும் நீயும் சீனியர் சிட்டிசன்கள் ஆன பிறகுதான் கல்யாணம்னே வச்சுக்குவோம். கல்யாணத்துக்கு அடுத்தது என்ன?"

"ரிசப்ஷன்."

"ஓ, நோ. இப்பல்லாம் கல்யாணத்துக்கு முன் தினமே ரிசப்ஷன் வச்சுக்கறாங்க. நான் கேட்டது அதை இல்லை." எப்படியும் தான் நினைக்கும் பதில் சிவப்ரியாவிடமிருந்து வெளிப்படாது என்று நினைத்திருக்க வேண்டும் ஆனந்த். சட்டென்று குரலைத் தணித்துக் கொண்டு "நம்ம முதலிரவைச் சொன்னேன்" என்றான்.

சிவப்ரியாவின் உடலெங்கும் சட்டென வியர்த்தது. மனத்தைக் கட்டுப்படுத்த பெரு முயற்சி தேவைப்பட்டது. எழுந்திருக்க முயற்சி செய்தாள்.


"ஷிவா, நான் சொல்ல வந்தது சீரியஸான ஒரு விஷயத்தைப் பற்றி."


அவன் முகத்தில் புதிதாகத் தென்பட்ட கலவரத்தையும், குரலில் தெரிந்த தடுமாற்றத்தையும் கவனித்த சிவப்ரியாவின் உள்ளுணர்வு கூறியது. 'முதலிரவு என்ற வார்த்தையின் மூலம் ஆனந்த் கூற வந்தது காதல் லீலைகளைப் பற்றி அல்ல. கவலைக்கிடமான ஏதோ பிரச்னை குறித்துப் பேசத்தான் இங்கு அழைத்து வந்திருக்கிறான்.'

புதிய அக்கறையுடன், அவனை உற்று நோக்கினாள் சிவப்ரியா.

(தொடரும்)

''எதுக்கு நீங்க டைவர்ஸ் கேஸை வாபஸ் வாங்கறீங்க?''
''டைவர்ஸ் கேஸ் போட்டதிலிருந்து என் கணவர் சந்தோஷமா இருக்கார்!''
– அம்பை தேவா





''உங்க கணவர் சாப்பிடும் போது ரசம் குடிப்பார். சாம்பார் அருமைன்னெல்லாம் சொல்றாரே...''
''அவருக்குத் தற்பெருமை ஜாஸ்தி!''
– வந்தவாசி பா. ஜெயக்குமார்

ரிமோட்

‘தமக்கு .... தொகுதியில் சீட் தரவில்லை என்பதற்காகத் தி.மு.க. கூட்டணியைவிட்டுத் திரு... விலகினார்' என்று செய்தி சொல்லி, படத்தோடு அவருடைய பேட்டியைக் கொடுக்கிறது ஜெயா டி.வி. ஆனால் அதே குற்றச்சாட்டுடன் அ.தி.மு.க. அணியிலிருந்து விலகியவரைப் பற்றி மூச்சுப் பேச்சுக் கிடையாது.

'..... தொகுதியில் தனக்கு சீட் தரவில்லை என்பதற்காகத் திரு... அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வெளியேறிப் போர்க் கொடி உயர்த்தினார்' என்ற தகவலைக் கூறி பேட்டியும் படமும் வழங்குகிறது சன் டி.வி. ஆனால் அதே காரணத்தைச் சொல்லித் தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகியவரைப் பற்றி ஒரு வரி கூடக் கிடையாது.

இது சரியா, நடுநிலைமையா, நியாயமா என்று குறுக்கே புகுந்து கேட்க முடியாத சீசன் இது. 'Those who in quarrels interpose must often wipe a bloody nose' என்று ஒரு பழைய இங்கிலீஷ் பாட்டு எச்சரித்திருக்கிறது.

நவரத்தினம், வாஸ்து, பெயர் மாற்றம், எண் மாற்றம் முதலானவற்றில் நம்பிக்கை இல்லை லட்சுமிக்கு. அவற்றின் மூலம் சிலர் நன்றாய்ப் பணம் பண்ணுகிறார்கள் என்றார். (லட்சுமி தாண்டவமாடினால் லட்சுமி ஏன் வருத்தப்பட வேண்டும்?) போனால் போகிறது என்று ரெய்க்கியை மட்டும் ஒப்புக் கொண்டார். அதில் மன அமைதி கிடைக்கிறதாம். (சிறப்பு நையாண்டி தர்பார்.)

'வாஸ்து சாஸ்திரத்தில் புதிதாக ஒரு சீன முறை செய்கிறேன்' என்று சொல்லிக் கொண்டு ஒருவர் அவரிடம் வந்தாராம். வீட்டில் எங்கு பார்த்தாலும் புல்லாங்குழல்களைக் கட்டித் தொங்க விட்டுவிட்டு எட்டாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு போய் விட்டாராம். இதைச் சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார் லட்சுமி. கேட்டுக்



கொண்டிருந்தவர்களும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். (எட்டாயிரம் வாங்கிக் கொண்டு போனவரும் இந்நேரம் சிரித்துக் கொண்டுதான் இருப்பார்.)

வினோத்

அளவான அலங்காரத்துடன் பளிச்சென்று தோன்றிக் கணீரென்று பேசிய லட்சுமியிடம் தலையில் ஒரு மகுடமும் கையில் ஒரு செங்கோலும் இல்லாததுதான் குறை. அரை மணி நேர ஆட்சியில் She exuded a charm of her own.

வருடப் பிறப்பு தினத்தன்று வேறு சேனல்களுக்குப் போய்விடாமல் நம்மைக் கட்டி வைத்துக் கொண்ட வகையில், 'சன்'னின் 'நேற்று இன்று நாளை' வெற்றிகரமான நிகழ்ச்சியே.

'தானி ஏ தானேனே தானி தில் தானேனா' என்ற துள்ளல் பின்னணியில் கொட்டி முழக்கிய குரூப் டான்ஸ் ஜெட் விறுவிறுப்பு. பெண்களின் அணி மடங்கிக் குனிந்த அந்த வினாடி அவர்களுக்குப் பின்னாலிலிருந்து ஆண்களின் அணி குபீரென்று எழுந்தது அருமையான Synchronization. ஆடிக் களைத்த வேகத்தில் வியர்வை முத்திட்டாலும் முகத்தில் சிரிப்பைத் தவற விடவில்லை ஐஸ்வர்யா ரஜினிகாந்த்.



வட்டத்துக்கு வட்டம் ரேவதியும் மாதவனும் வந்து பேசியதில் உப்புமில்லை, உறைப்புமில்லை. ஒரே சவசவ. எனினும் ஆடியன்ஸ் வரிசைகளை ஆகாயக் காட்சியாகக் காட்டியதில், தயாரிப்பாளர்களின் உழைப்பு பிரம்மாண்டமாகப் புலப்பட்டது. Tremendous is the word.

கோடீஸ்வரனா? ஓடீஸ்வரனா?



செய்கிறோமோ இல்லையோ, சமையல் நிகழ்ச்சிகளை டீ.வியில் பார்ப்பது ஒரு சுவாரஸ்யமான பொழுது போக்கு. (பொதுவாக எந்த வேலையையும் நாம் செய்யாமல் பிறர் செய்தால் பார்த்துக் கொண்டிருக்கலாம். அதனால்தான் ஜெரோம் கே.ஜெரோம், 'work fascinates me. I can sit and look at it for hours' என்றார்.)

சென்ற வாரம், வாழைப் பழத்தில் தோசையோ, போளியோ செய்து காட்டினார் ஒரு நங்கை. இறுதியில், 'தேவையான பொருள்கள்' என்ற பட்டியலைக் காட்டியபோது தூக்கி வாரிப் போட்டது. காரணம், தேவையான பொருள்களில் ஒன்றாக, 'பச்சை வாழைப் பழம்' என்று தெரிவித்தார்கள். சரி. அதன் கூடவே அடைப்புக் குறிக்குள் 'தோலை நீக்கி' என்று ஏன் சேர்த்தார்கள்?

'இருபத்தையாயிரம் ரூபாய் வரை ஜெயித்திருக்கிறீர்கள். அடுத்து எவ்வளவு?' என்று கேட்டார் சரத்குமார்.

'ஐம்பதாயிரம் லட்சம்!' என்று வந்தவர் சொன்னது வாய் தவறித்தான். ஆனால் பதறிவிட்டார் சரத்குமார். கோடீஸ்வரன் ஓடீஸ்வரனாகி விடுவார் போலிருந்தது. 'ஐயோ! அவ்வளவெல்லாம் தரமாட்டாங்க!' என்று ஸ்தலத்திலேயே மறுப்புத் தெரிவித்தார்.

'கணவர் உங்களை அடிப்பாரா, நீங்கள் உங்கள் மனைவியிடம் அடி வாங்கினதுண்டா?' என்பது போன்ற தரக் குறைவான உரையாடல்(!)களுக்கு நடுவே வந்த இந்த வேடிக்கை, சென்னையில் மூன்று நாள் பெய்த மழையைப் போலக் குளுமையான கலகலப்பு கொடுத்தது. ஆகையால் let us applaud them and forgive them their lapses.

"இந்த ஜி.எஸ்.எல்.வி. திட்டத்தின் இயக்குனர் டாக்டர். ஆர்.வி. பெருமாள்" என்று பிரம்மபிரகாஷ் அரங்கில் கூடியிருந்த பத்திரிகையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார் டாக்டர் கஸ்தூரிரங்கன்.



கோவில்பட்டி மாப்பிள்ளை!

பெருமாளுக்கு வயது ஐம்பத்து எட்டு. தமிழ்நாட்டுக்காரர். சொந்த ஊர் கோவில் பட்டி. தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் பி.யு.சி. முடித்து விட்டு, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் இஞ்ஜினியரிங். அறிவியலில் தொடர்ந்து படிக்க ஆர்வம் கொண்டு, பெங்களூர் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸில் எம்.ஈ. முடித்தார். அதன்பின் ஹிந்துஸ் தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனத்தில் மூன்று வருடங்கள் பணி புரிந்தார். எழுபதாம் ஆண்டு, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்தார். கடந்த நாலாண்டுகளாக புராஜக்ட் டைரக்டராகப் பணிபுரிந்து வருகிறார். டாக்டர் கஸ்தூரிரங்கன் டாக்டர் பெருமாளை, "இன்றைக்கு இவர்தான் மாப்பிள்ளை!" என்று குறிப்பிட்டார்.

டாக்டர். பெருமாளிடம் தனியே பேசினோம்.

"கடந்த முறை, கடைசி நிமிடத்தில் ராக்கெட் செலுத்துவது தடை பட்டுப் போன போது உங்கள் மனநிலை எப்படி இருந்தது?"

"வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும், கடைசி நிமிடத்தில் தவறு கண்டு பிடிக்கப் பட்டு, ராக்கெட்டைப் புறப்படாமல் நிறுத்தி விட்ட அளவில் சந்தோஷம்தான்!"

"இன்றைக்கு, டென்ஷன் அதிகமாக இருந்ததா?"

"கடந்த முறை நிகழ்ந்த தவறு, இப்போது ஏற்படாதிருக்க, உரிய நடவடிக்கைகள் எடுத்து விட்டோம். அதிக டென்ஷன் என்று சொல்ல முடியாது. ஆனால் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டபின் பெரும் நிம்மதி ஏற்பட்டது."

"இதன் மூலம் நாம் சாதித்திருப்பது என்ன?"

"இதற்கு முன் நாம் விண்ணில் செலுத்திய பி.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டுகளைவிட பெரிய, அதிக சக்தி வாய்ந்த ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட்கள் மூலமாக, அதிக எடை கொண்ட செயற்கைக் கோள்களை, இந்தியாவால் ஏவ முடியும் என்று நிரூபித்திருக்கிறோம்."

"இதற்காக ஆன செலவு எவ்வளவு?"

"இந்த ராக்கெட்டுக்காக மட்டும் சுமார் நூற்றைம்பது கோடி வரை செலவழிந்துள்ளது. பி.எஸ்.எல்.வி.யை விட, சக்திவாய்ந்த ஜி.எஸ். எல்.வி. ராக்கெட்டை ஏவுவதுதான் நோக்கம். எனவே, சாதாரணமான செயற்கைக் கோளைத்தான் இந்தத் தடவை அனுப்பியுள்ளோம். இந்தச் செயற்கைக்கோள், டிஜிடல் ஒலிபரப்பு, இன்டர்நெட் சேவை, கம்ப்பிரஸ்டு டிஜிடல் டீ.வி. ஒளிபரப்பு சம்பந்தப்பட்ட சோதனைகளுக்குப் பயன்படும்."

"அடுத்த ராக்கெட் ஏவுதல் எப்போது?"

"இன்னும் ஓர் ஆண்டில்..." என்றார் பூரிப்போடு.

ஜி.எஸ்.எல்.வி. விண்ணில் செலுத்திய சாடிலைட், எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என்பது லேட்டஸ்ட் செய்தி. இந்தப் பிரச்னையும் விரைவில் தீர்க்கப்பட வாழ்த்துவோம்!

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து :
எஸ். சந்திரமௌலி
படங்கள் : **மீடியா ராமு**

ADMISSION NOTIFICATION

NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT (NILEM)

Offers the following **Six Months Diploma Courses** by Correspondence

- TOTAL QUALITY MANAGEMENT & ISO 9000
- BUSINESS MANAGEMENT
- PERSONNEL MGMT. & INDL. RELATIONS
- HUMAN RESOURCES DEVELOPMENT
- ENVIRONMENT & POLLUTION CONTROL
- QUALITY CONTROL & ISO 9000
- ENVIRONMENTAL MGMT. ISO 14000 / 14001
- PRODUCTION MANAGEMENT
- SALES & MARKETING MANAGEMENT
- INTERNATIONAL BUSINESS MANAGEMENT
- QUALITY ASSURANCE & ISO 9000
- LABOUR WELFARE
- BUSINESS ADMINISTRATION
- FINANCIAL MANAGEMENT
- MATERIALS MANAGEMENT
- EXPORT & IMPORT MANAGEMENT
- QUALITY ASSURANCE & QS 9000
- INDUSTRIAL SAFETY
- LABOUR LAWS
- OFFICE ADMINISTRATION
- CONTRACTS MANAGEMENT
- FIRE & SAFETY MANAGEMENT
- INDUSTRIAL LAW
- MANAGEMENT DEVELOPMENT

No formal qualification is required for joining the courses. Each diploma has 4 written papers. Tuition Fee Rs. 800/- (Including Study Materials & Model Question Papers). Examination will be conducted in all major centres in India. For detailed Prospectus & Application Form send Rs. 30/- by D.D./M.O./I.P.O. in favour of **NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT** and apply to **NILEM**, No. 59, Second Street, Parameswari Nagar, Adyar, Chennai - 600 020. Phone : 044 - 4911443 E-mail : nilem_india@hotmail.com



ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

தொலைபேசி எண் 5511786 10/1, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை — 600 011

(நாம சங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மீக சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① **25.5.2001** முதல் **1.6.2001** வரை அழகிய அந்தமான் தீவுகள் ஒருவழி கப்பல் பயணம், ஒரு வழி விமானப் பயணம். கட்டணம் ரூ. 14,200/- **28.5.2001** முதல் **1.6.2001** வரை இருவழி விமானப் பயணம் கட்டணம் ரூ. 17,250/-

② **6.6.2001** முதல் **14.6.2001** வரை - *8 நாட்கள்* கர்நாடக மாநில யாத்திரை. சென்னை – பெங்களூர்– சென்னை, ரயில் மூலமாக பயணம் பெங்களூரிலிருந்து இதர இடங்களுக்கு 35 இருக்கைகள் கொண்ட 2x2 டிலக்ஸ் பஸ் மூலமாக பயணம், ரயில், பஸ் கட்டணம், இரவு தங்குவதற்கு பொதுஹால், இரண்டுவேளை, காபி, டிபன், சாப்பாடு உட்பட நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 2600/- அட்வான்ஸ் ரூ. 1000/- செலுத்தி இருக்கைகளை முன்பதிவு செய்து கொள்ளவும்.

③ **17.6.2001 -** குரு பெயர்ச்சியினை முன்னிட்டு ஒருநாள் நவக்கிரக ஸ்தலங்களுக்கு யாத்திரை: நவக்கிரக கோட்டை, வள்ளிமலை, தாங்கல் ஆசிரமம். பஸ் கட்டணம், டிபன், காபி, சாப்பாடு உட்பட நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 185/-

④ **21.6.2001** முதல் **26.6.2001** வரை 5 நாட்கள் ஆந்திர மாநில யாத்திரை: நெல்லூர், அகோபிலம், மந்திராலயம், ஸ்ரீசைலம், மகாநந்தி 35 இருக்கைகள் கொண்ட டிலக்ஸ் பஸ், சாப்பாடு, இரவு தங்குவது உட்பட நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ 1400/- அட்வான்ஸ் ரூ. 500/- செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

⑤ **27.7.2001 -** ***11* நாட்கள் சிங்கப்பூர், மலேசியா, பட்டயா, பேங்காக்.**

⑥ **6.9.2001** முதல் **20.9.2001** வரை – *15* நாட்கள் ஸ்ரீ பத்திரிநாத், ஸ்ரீகேதார்நாத், ரிஷிகேஷம், ஹரித்துவார், ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம். ரயில், பஸ் கட்டணம், சாப்பாடு உட்பட நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 4900/- அட்வான்ஸ் ரூ.2000/- செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.



⑦ **நவம்பர் பஞ்ச துவாரகை யாத்திரை – *15* நாட்கள்.**

முழு விவரமறிய சுய விலாசமிட்ட ரூ. 3/-ஸ்டாம்ப் அடங்கிய கவர் அனுப்பவும். விவரங்கள்அனுப்பப்படும்.

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்! விவரங்களுக்கு: **V. சீனிவாசன்** *(அமைப்பாளர்)*

குரு அரவிந்தன்

இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. ஒன்று அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த டி.என்.ஏ ரிப்போர்ட். மற்றது அழகாக குண்டு குண்டாக அவருக்கு நன்கு பழக்கப்பட்ட கையெழுத்தில் முகவரி எழுதப்பட்டிருந்தது. ஊட்டி கான்வென்ட் ஹாஸ்டலிலிருந்து எழுதப்பட்டிருந்த அக்கடிதத்தைத்தான் முதலில் பிரித்துப் படித்தார்.



'அன்புள்ள அப்பா'

பதினைந்து வயது நிரம்பிய மகள் திவ்யாவிடமிருந்து கடிதம் வந்திருந்தது. ஆர்வத்துடன் தொடர்ந்து வாசித்தார்.

அப்பா, இனிமேல் உங்களை உரிமையோடு 'அப்பா' என்று என்னால் அழைக்க முடியுமோ தெரியாது. ஆனாலும் நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் டி.என்.ஏ ரிப்போர்ட் உங்கள் கைக்கு வருமுன் எனக்கும் உங்களுக்கும் இடையே இருந்த உறவைப் பற்றி மனம் விட்டுப் பேச விரும்புகின்றேன்.

அப்பா என்றால் பாசம். அப்பா என்றால் அன்பு. எனக்கு எல்லாமுமாய் நீங்கள்தான் இருந்திருக்கிறீர்கள். அம்மாவின் அலட்சியமும், அசட்டையும் உதாசீனமும் என்னை அவளிடம் இருந்து தூர விலகிப் போக வைத்ததாலோ என்னவோ உங்கள் மீது அதிகம் ஈடுபாடு கொள்ள வைத்தது.

அன்பையும் பாசத்தையும் என் இதயத்தில் விதைத்து விட்டு உங்கள் இதயத்தை மட்டும் எப்படி அப்பா உங்களால் கல்லாக்கிக் கொள்ள முடிந்தது? அம்மாவுக்கும் உங்களுக்கும் இடையே

ஏற்பட்ட மனஸ் தாபம் பூதாகரமாய் வளர்ந்து இப்படி விவாகரத்தில் முடியு மென்று நான் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. 'இவளுக்கு அப்பா நீங்கள் அல்ல, என்று அம்மா ஆவேச மாகக் கத்திக் கூச்சல் போட்டபோதுகூட நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் 'நீ என் பெண்தானா?' என்ற கேள்விக் குறியோடு என்னை நீங்கள் நிமிர்ந்து பார்த்தீர்களே அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை.

பெற்றோருக்குள் ஏற்படும் பிரச்னை களால் பிஞ்சு மனங்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பதை ஏன்தான் பெற்றவர்கள் உணர்ந்து கொள்ள மறுக்கிறார்களோ தெரியாது.

உங்களிடம் அழுது கொட் டித் தீர்க்க வேண்டும் போல இருக்கிறது! உங்கள் பிடிவாதத்தைக் கைவிட்டு என்னைப் பார்க்க ஒரே ஒருமுறையாவது வருவீர்களா?"

அந்தக் கடிதத்தை வாசித்ததும் அவர் இடிந்து போய்விட்டார். கண வன் - மனைவி பூசல் காரணமாக ஒன்று மறியாக் குழந்தை வீணாகத் தண்டிக்கப் படுகிறாளே என்று நினைத்தார். விவா கரத்து கோரும் அளவுக்கு அவர் என்ன தான் தப்பு செய்தார்?

கல்யாணமான புதிதில் அவருக்கு ஏற்றமாதிரி நடந்துகொண்ட மனைவி, காலப் போக்கில் தன் சுயரூபத்தைக் காட்டத்

ஒரு அப்பா, ஒரு மகள், ஒரு நாடகம்!

என் எதிர்காலத்தை நினைக்க எனக்கே பயமாக இருக்கிறது. எல்லோர் பார் வையிலும் நான் ஒரு கேள்விக் குறியாய்த் தெரிகிறேன். என்னைப் பொருத்தவரை எனக்கேற்பட்ட இந்தப் பாதிப்பு ஒரு மாறாத ரணமாய் என் மனத்தில் பதிந்துவிட்டது.

அப்பா, கடைசியாக உங்களிடம் ஒரு வேண்டுகோள்! அம்மா சொன்னது உண்மை என்றால் டி.என்.ஏ ரிப்போர்ட் வந்ததும் நான் உங்கள் பெண் அல்ல என்பது நிரூபணமாகிவிடும். அந்த நிமி டமே நான் உங்களை விட்டு அன்னியப் பட்டு விடுவேன். அப்படி ஒரு நிலைமை ஏற்படுமுன் கடைசியாக ஒருமுறை உங் களைச் சந்திக்க விரும்புகின்றேன். எனக் கென்னவோ உங்கள் தோளில் முகம் புதைத்து மனத்தில் இருப்பதை எல்லாம்

தொடங்கினாள். சிறிது சிறிதாக அவர் களுக்குள் தொடங்கிய பிரச்னை, குழந்தை பிறந்த பின்பும் தொடர்ந்து விசுவரூபம் எடுத்தது.

அவரிடம் பணம் இருந்தது. அவ ளிடம் அழகும் இளமையும் இருந்தன. அவளது விருப்பம் இல்லாமல் அவளது குடும்பத்தினரின் நிர்ப்பந்தம் காரண மாகத்தான் இந்தக் கல்யாணம் நடந்தது என்பது அவளாகச் சொல்லும்வரை அவருக்குத் தெரியாது. ஆனாலும் தனது குடும்பச் சூழ்நிலையை மனத்தில் கொண்டு அவரிடம் உள்ள வசதிகளை அனுபவிப்பதற்காக அவளும் இவ்வளவு காலமும் மௌனமாய் அவரோடு ஒத்துப் போயிருக்கிறாள்.

"உனக்கு விருப்பம் இல்லாமலா இந்தக்

"ஆபரேஷனுக்கு அறுபதாயிரம் செலவாகுமா?... அதுலே ஒரு வீட்டுமனையே வாங்கலாமே டாக்டர்!"

"சரியாச் சொன்னீங்க! நானும் அந்த திட்டம்தான் போட்டிருக் கேன்..."

– தஞ்சை தாமு

கல்யாணம் நடந்தது?"

"ஆமா! என்னை ஒரு பெண்ணாய் யாருமே மதிக்கலே! உங்களுடைய பணத் தைக் குறி வைத்து என் ஆசைகளை, என் காதலை, கடந்த காலத்தை எல்லா வற்றையுமே எங்க அப்பா அடமானம் வைத்து விட்டாரே!" அவள் விசும்பி விம்மலாய் வெடித்தாள்.

"காதலா...?"

"ஆமாம். காதல்தான்! என் காதலனைத் திருமணம் செய்யப் போவதாக நினைத்துத் தான் அவனோடு நான் நெருங்கிப் பழகி னேன். ஆனால் விதிதான் உங்கள் உருவத் தில் வந்து விளையாடி விட்டதே! இனி மேலாவது எனக்கு விவாகரத்து மூலமா விடுதலை கொடுங்க..."

"அப்போ இத்தனை காலமும் என் னோட வாழ்ந்ததெல்லாம்...?"

"வாழ்ந்தது இந்த மீனாவோட உடம்பு மட்டும்தான். மனசல்ல! இனியும் போலி யாய் என்னை நானே ஏமாற்றிக்கொண்டு உங்களோடு வாழ என்னாலே முடி யாது. எனக்கு இந்த நரகத்தில் இருந்து விடுதலை வேணும்!"

"பிரிஞ்சு போகத்தான் வேண்டும் என் றால் அதை யாராலும் தடுக்க முடியாது. ஆனால் நம்ம பொண்ணோட கதி?"

"நம்ம பெண்ணா? யார் சொன்னது அவ உங்க பெண் என்று?"

"நீ... என்ன சொல்கிறாய்?"

"ஆமாம்! திவ்யாவுக்கு அப்பா நீங்க இல்லை!"

"இந்தா பார்! நம்ப குடும்ப வாழ்க் கையோட விளையாடாதே!"

"நான் விளையாடலே. ஆனால் அது தான் உண்மை!"

இடி ஒன்று தாக்கியது போல அவர் அதிர்ந்து போனார்.

"அப்போ திவ்யா என்னோட பெண் இல்லையா?"

"இல்லை..."

"பொய்! என்னை அவமானப்படுத்த பொய் சொல்றே... பிரியணும்னா போய்த் தொலை... எதுக்காக இப்படி சித்ரவதை பண்றே..."

"இப்போ திவ்யா உங்க பொண்ணு இல்லைன்னு நிரூபிக்கணும் இல் லியா...?"

"கடவுளே!...."

"நிரூபிச்சுக் காட்டறேன்!"



மனித மனத்தில் விழும் ஏமாற்றப்பள்ளங்கள் குரூரமாக வக்கிரங்களால் நிரம்பிவிடும் போலும்... அவள் அவனை அவ மானப்படுத்தவே சதி தீட்டி னாள். வீவுக்கு வந்த திவ்யாவைக் கட்டாயப்படுத்தி பரிசோத னைக்கு உட்படுத்தி...

ஹாஸ்டல் விசிட்டர்ஸ் ஹாலில் வாசலில் எதிர்பாராமல் அவரைக் கண்டதும் ஒருகணம் திகைத்துப் போய்விட்டாள் திவ்யா. அப்புறம் சமாளித்துக்கொண்டு,

'நான் உங்களுக்கு ஒரு கடிதம் போட்டேனே கிடைத்ததா?'' என்றாள்.

''கிடைச்சதும்மா...''

''டி.என்.ஏ ரிப்போர்ட் இன்னும் வரலையா?''

''வந்திடிச்சு!''

''வந்திடிச்சா?''

அவள் முகத்தில் ஏமாற்றமும், அதே நேரத்தில் அதன் முடிவை அறிந்து கொள்ளும் தவிப்பும் தெரிந்தன. ''நினைச்சேன், நீங்க தயங்கி நிற்கும்போதே உங்களுக்கு உண்மை தெரிஞ்சிருக்கும் என்று நினைச்சேன்!''

''தெரியும்!''

''அப்போ அம்மா சொன்னது அத்தனையும் உண்மைதானே?''

''இல்லை, அம்மா சொன்னதில் உண்மையில்லை! அம்மாவுக்கு என்னோடு வாழப் பிடிக்கலை. அதனாலே எனக்குக் கோப மூட்டி என்னிடம் இருந்து விவாகரத்து வாங்கத்தான் அப்படிச் சொல்லியிருக்கா!''

''அப்பா! நீங்க என்ன சொல்லுறீங்க?''

''டி.என்.ஏ. ரிப்போர்ட்டைப் பார்த்தேன்! நீ என்னோட பெண்தான்!''

''உண்மையாகவா...?''

''ஆமாம்! யார் என்ன சொன்னாலும் நீ என்னோட மகள்தான்!''

''அப்...பா!'' அந்த ஒரு சொல்லுக்காகவே காத்திருந்தது போல அவள் பாய்ந்து வந்து அவரைக் கட்டி அணைத்து மார்பிலே முகம் புதைத்து விக்கி விக்கி அழுதாள். இன்னும் பெரிதாக நெஞ்சு வெடிக்க ஓலமிட்டு அழ வேண்டும் போல அவளுக்கு இருந்தது.

''அழாதே அம்மா!'' அவர் பாசத்தோடு கண்ணீரைத் துடைத்து விட்டார். சட்டென்று அழுவதை நிறுத்தி அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''இனிமேல் நான் அழ மாட்டேன். எனக்கும் அப்பா இருக்கிறார்!'' அவள் சந்தோஷ மிகுதியால் அவர் கைகளுக்குள் முகத்தைப் புதைத்து வாய் விட்டுச் சிரித்தாள்.

மகளைத் திருப்தி படுத்திய சந்தோஷத்தோடு அவர் வீடு திரும்பினார். வீடு வந்ததும் முதல் வேலையாக பிரித்துப் படிக்கப்படாத அந்த டி.என்.ஏ ரிப்போர்ட்டை அப்படியே கவரோடு சேர்த்துக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டார். மனம் அமைதியாய் இருந்தது இந்த அமைதிக்காக அவர் கொடுத்த விலைகூட அதிகமாகத் தோன்றவில்லை. மீனா கோரிய விவாகரத்தில் 'பரஸ்பர சம்மதம்' என்று மறுபேச்சின்றி கையெழுத்து போட்டுக் கொடுத்திருந்தார். பதிலுக்கு அவளும் டி.என்.ஏ அறிக்கை முடிவை திவ்யாவிடம் வெளியிடுவதில்லை என்று வாக்குறுதி அளித்திருந்தாள்: விவாகரத்து வழக்கு முடிய சிறிது காலம் ஆகலாம்... ஆனால் திவ்யாவின் நிம்மதி ஆயுட்காலத்துக்கும் நீடிக்கும். O

திடீர்ப் பரிசுப் போட்டி — 1 முடிவு

கவிதைக்கு சூப்பர் தலைப்பு சூட்டி ரூ. 100/- தட்டிச் செல்கிறார் :

அரிச்சந்திரன்
55, அனுக்ரஹா
காமராசர் தெரு, காந்திநகர்,
வெட்டுவாங்கேணி,
ஈஞ்சம்பாக்கம்,
சென்னை — 4.



வந்து குவிந்த அஞ்சல் அட்டைகளைப் பரிசீலித்த காட்சி

பரிசுக்குரிய தலைப்பு:-

மூணாங்கிளாஸ் முழுப்பரீட்சை லீவு



தேர்தல் திருவிழா வரப் போகிறதே...! காலையில் ஒரு கூட்டணி, மாலையில் ஒரு கூட்டணி என்று கும்மி ஆடும் நமது தமிழக அரசியல்வாதிகளைப் பற்றியும், அரசியலைப் பற்றியும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு எந்த அளவு தெரிந்திருக்கிறது? சோதித்துப் பார்த்து விட முடிவு செய்தோம். சோதனைக்கு உதவினார்கள் பூங்கா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள். உதவி செய்தார் தாளாளர் டாக்டர் ஏ. ராதாகிருஷ்ணன்.

'காதில் பூ' சுத்தற வயசு!

"இந்த க்விஸ் போட்டியில் கம்ப்யூட்டர் லாக் பண்ணுவதும் 'என்னங்க டென்ஷன் ஆயிட்டீங்களா?' என்று கேட்பதும் கிடையாது. அதே போல கோடீஸ்வரர் ஆகும் வாய்ப்பும் இல்லை'' என்றதும் ரிலாக்ஸ் ஆனார்கள் மாணவ மணிகள். "நாங்க ரெடி...'' என்றதும் முதல் கேள்வியை ஷூட் செய்தோம்.

"தமிழக சட்டமன்ற தேர்தல் நடக்கப் போகும் தேதி?'' என்றதும் எல்லோரும் கோரஸாக 'மே 10' என்று சரியாகச் சொல்லி விட்டார்கள்.

"எங்களுக்கு எக்ஸாம் தள்ளிப் போட்டாங்களே... அது தான்



– கலக்கல் அரசியல் க்விஸ்

தேதி பனிச்சுனு நினைவுக்கு வந்துடுச்சு."

சரி, கொஞ்சம் கிடுக்கிப்பிடி போடலாம் என்று **'பா.ம.க.வின் தலைவர் யார்?** என்று கேட்டோம். நாம் எதிர்பார்த்தபடியே டாக்டர் ராமதாஸ், டாக்டர் அன்புமணி என்று தவறாக பதில் சொன்னார்கள். ஒருவாறு யோசித்து சாய்ஸைக் கேட்டு 'ஜி.கே. மணி' என்று பதில் சொன்னார் விஜயலட்சுமி.

சு. சுவாமியைப் பற்றிய கேள்வி என்றதும் நீனகக்களுக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டுவிட்டது. 'அடிக்கடி வாண வேடிக்கை கிளப்புவார். இப்போ ரொம்ப சைலண்டாக இருக்கிறாரே' என்றவர்களிடம் **'இன்றைக்கு அவரது ஜனதா கட்சி எந்த கூட்டணியில் இருக்கிறது?'** என்றோம்.

"மனிதர் கட்டுசாதத்தில் உள்ள கண்டெலியாச்சே! எதிலும் ஒத்துப் போக மாட்டாரே! கண்டிப்பாக தனித்துத் தான் போட்டி" என்று சரியாகப் பதில் சொல்லி விட்டார்கள்.

ப. சிதம்பரம் துவங்கியுள்ள அமைப்பின் பெயர் தெரியுமா?

'த.மா.கா. ஜனநாயகப் பேரவை; சிதம்பரம் ஜனநாயகப் பேரவை, மக்கள் ஜனநாயகப் பேரவை எது சரி?' ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மகேஸ்வரன் தான் முந்திக் கொண்டு 'த.மா.கா. ஜனநாயகப் பேரவை' என்று சரியாகப் பதில் சொன்னார்.

'அவர் ஒரு ஜென்டில்மேன்' என்று பின்பாட்டு பாடினார்கள் மாணவிகள்.

தமிழகத்தில் உள்ள மொத்த சட்டமன்றத் தொகுதிகள் எவ்வளவு?

224; 234; 214.

மறுபடியும் சரியான விடையான '234' என்று சொல்லி 'மச்சி, தூள் கிளப்பறேடா!' என்று நண்பர்களிடம் பாராட்டுப் பெற்றார் மகேஸ்வரன்.

வாட் கேர்ள்ஸ்!... அரசியல் விஷயங்களில் ரொம்ப பின் தங்கியிருக்கீங்களே... சியர் அப்...

'தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் 1996 தேர்தலில் நின்று வென்ற தொகுதி தெரியுமா?' என்றதும் 'சாய்ஸ் ப்ளீஸ்' என்றார்கள்.

பார்க்டவுன், எழும்பூர், துறைமுகம். பார்க்டவுன், எழும்பூர் தவறென்று தெரிந்ததும் 'துறைமுகம்' என்ற சரியான பதில் மாணவிகளிடமிருந்து வந்தது!

'வெரி புவர்' என்று அடுத்த கேள்விக்குப் போனோம்.

"தி.மு.க. அணியில் விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எத்தனை?"

மண்டை காய்ந்து போனார்கள் மாணவமணிகள். பிறகு 'நான்கு' என்றார்கள் மாணவிகள். ஒன்பதுக்கும், ஏழுக்கும் இடைபட்ட நம்பர் தான் விடை என்றதும் கோரஸாக கேட்டது 'எட்டு' என்ற குரல்!

அடுத்து சுலபமான கேள்வி என்று சொல்லியே விட்டோம். **கண்ணப்பன் துவக்கியுள்ள கட்சியின் பெயர்?** 'மக்கள் தமிழ் தேசம்' என்று சரியாகச் சொன்ன



லோகேஷை 'என்ன உறுப்பினர் ஆயாச்சா?" என்று கிண்டல் செய்தார்கள்.

ம.தி.மு.கவின் தேர்தல் சின்னம்?

'குடை' என்றார் விஜயலட்சுமி. இல்லையில்லை

பரிசுகளை எதிர்பார்க்காமல் கலந்து கொண்டவர்கள்: சுந்தர், லோகேஷ், சிவகுமார், மகேஸ்வரன், சரண்யா, மகேஸ்வரி, விஜயலட்சுமி, சோபியா.

'மாம்பழம்' என்றார் சோபியா. 'சாட்டை இருந்தால் இயக்கலாம்' என்று நாம் க்ளூ கொடுத்ததும், 'ஆஹா... புரிஞ்சு போச்சு, பம்பரம்' என்றார்கள்.

'தயாநிதி, கிருபாநிதி, கருணாநிதி... இந்த மூன்று பெயர்களில் ஒரு பெயரைக் கொண்டவர்தான் தமிழக பா.ஜ.க. தலைவர்... சொல்ல முடியுமா?' என்றோம். 'இல. கணேசன் தானே தலைவர்? என்றார் சிவகுமார். 'அட... இப்போதானே புதுசாப் போட்டாங்க. ஜனா. கிருஷ்ண மூர்த்தி...' என்றார் மகேஸ்வரன். 'நீங்களே சொல்லிடுங்க' என்றதும் 'கிருபாநிதி' என்று சரியான விடையை சொன்னோம்.





சமீபத்தில் அ.இ.அ.தி.மு.கவுக்குத் தாவிய தி.மு.க. அமைச்சர் யார்?

'தமிழ்க்குடிமகன்' என்று டக்கென்று பதில் வந்தது மாணவிகளிடமிருந்து. "கின்னஸில் இடம் பெற வேண்டிய 'தாவல்'" என்று கிண்டலடித்தார் லோகேஷ்.

சமீபத்தில் ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடிய கட்சி எது தெரியுமா?

"ப்பூ... இது கூடத் தெரியாதா! த.மா.கா.தான்."

"ஆறு வயசுதானே... அதான் அம்மா கையைப் பிடிச்சு நடக்குது" என்று நையாண்டி செய்தார் சுந்தர்.

ஏ.சி. சண்முகம் துவக்கியுள்ள கட்சியின் பெயர்?

"இது சம்மராச்சே... ஏ.சிக்கு ரொம்ப கிராக்கியாச்சே" என்ற ஜோக்கடித்தபடி நகத்தைக் கடித்தார்கள். பின்னர் 'புதிய நீதிக் கட்சி' என்று சரியான விடையைச் சொல்லிவிட்டார்கள்.

'பாய்ஸ் அண்ட் கேள்ஸ்... இதுதான் கடைசி கேள்வி...

'இந்தியாவில் வோட்டுப் போடும் வயது என்ன?'

"காதில் பூ சுத்தற வயசைக் கேக்கறாங்கப்பா" என்று கிசுகிசுத்துக் கொண்டு "ஸ்வீட் 18" என்ற மாணவர்களிடம் விடை பெற்றுக் கொண்டோம்.

'இருக்கிறதில் பெட்டர் யார்?' என்று மட்டும் தான் பார்க்க வேண்டியிருக்கிறது." இதுதான் வரும் தேர்தலைப் பற்றி இளைஞர்கள் கொடுத்த க்ளூ.

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: பேஜர் மூர்த்தி



நமது இடைஞ்சலான கேள்விகளுக்கு இடறாமல் பதில் சொன்னார் தேசிய விருது பெற்ற சேரன்.

உங்கள் படங்களில் பல காட்சிகள் பாடம் நடத்துவதைப் போல இருக்கின்றன. நீளமான வசனங்களை நம்பி காட்சி அமைக்கிறீர்கள், சினிமாவுக்கென்று இருக்கிற விஷுவல் மொழியை ஏன் புறக்கணிக்க வேண்டும்?

சமூகப் பிரச்னைகளுக்கு சினிமா வடிவம் கொடுக்கிறபோது ஓர் அளவோடுதான் விஷுவல் மொழியைப் பயன்படுத்த முடியும். இல்லையெனில் நாம் எதிர்பார்த்த சீரியஸ்னெஸ் விஷுவலின் ஆதிக்கத்தால் குறைந்து போய்விட அல்லது பார்வையாளனை லயித்துவிடச் செய்யும் ஆபத்து அதிகமிருக்கிறது. இதைவிட முக்கியமான காரணம், எந்த பிரச்னையை எந்த மக்களுக்காக எடுக்கிறோமோ, அது அவர்களிடம் போய்ச் சேர வேண்டும். அதற்கு அவர்களுக்குப் புரிகிற வெகுஜன சினிமா மொழியில் படமெடுப்பதுதானே நியாயம். அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன்.

இதே ரசிகர்கள்தானே விஷுவலை நம்பிப் படமெடுக்கிற மணிரத்தினத்தையும் ராஜீவ்மேனனையும் ஆதரிக்கிறார்கள்?'

இருக்கலாம். ஆனால் இவர்களெல்லாம் காதலை மையமாக வைத்து படமெடுக்கிறார்கள். காதல் கதையில் பாடம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. காதலைக் காட்டினாலே போதும். மணிரத்தினம் கூட 'பம்பாய்' படத்தின் இறுதிக் காட்சியை வசனத்தை நம்பி அமைத்திருப்பார். ''ஏன்யா சண்டை போடுறீங்க? எதுக்காக அடிச்சுக்கறீங்க?'' என்று அரவிந்த்சாமி வீதியில் நின்று கத்துவார். எத்தனை விஷுவலாக எடுத்தாலும் எந்த இடத்தில், எந்தக் கருத்தை உணர்ச்சிபூர்வமாக வசனத்தில் சொல்ல வேண்டும் என்று இருக்கிறது. அது போன்ற இடங்களில் மட்டும்தான் நான் வசனக் காட்சிகளை அமைக்கிறேன். மற்றொரு நோக்கம்... நாம் கையிலெடுக்கிற சமூகப் பிரச்னை ஆளும், அதிகார

“நான் திமிர் பிடிச்சவனா?”

வர்க்கத்தின் கவனத்தை ஜீரோ புள்ளி ஒரு சதவிகிதமாவது திசை திருப்ப வேண்டும். குடிசையில் வாழ்கிற ஓர் ஏழை, தெருவுக்கு வந்து கத்தினால்தான் அவனது பிரச்னைகள் வெளியே தெரிகின்றன. அவன் குடிசைக்குள் இருக்கிற அவலத்தை நமது அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ வந்து பார்க்கத் தயாராக இல்லை. அவர்களுக்கும் உறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் வசனக் காட்சிகள்.

'தமிழ் ரசிகர்களுக்குத் தரமான ரசனையே கிடையாது, குப்பையான கமர்ஷியல் படங்களைக் கூட விழுந்து விழுந்து பார்க்கிறார்கள்' என்று குற்றம் சாட்டினால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்?

தமிழ்நாட்டு ரசிகர்களை நீங்கள் குறை சொல்லவே முடியாது. சரியான படத்தை அவர்கள் கைகொடுத்து தூக்கிவிடத் தயாராக இருக்கிறார்கள். 'பொற்கால'த்தையும், 'சேது'வையும் வெற்றிப்படமாக்கிய அவர்களின் ரசனை மட்டமாக இருக்கிறது என்று சொன்னால், நான் ஏற்கத் தயாரில்லை. இது போன்ற தரமான படங்களைக் கொடுக்க





சேரன் பேட்டி

நிறைய தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் முன் வருவதில்லை. அதனால் விதியே என்று கமர்ஷியல் படங்களைப் பார்க்கிறார்கள். படமெடுப்பவர்களோடு அதில் நடிக்கும் ஹீரோக்களும் விரும்பினால் மாற்றம் வரும்.

ஹீரோக்கள், இதற்காக என்ன செய்துவிட முடியும் என்று நினைக்கிறீர்கள்?

தமிழ் சினிமாவையும், ஹீரோயிசத்தையும் நீங்கள் அவ்வளவு சீக்கிரம் பிரித்து விட முடியாது. ஹீரோவுக்கு பேனர்கட்டி, ஸ்டார் கட்டி வளர்ந்த கூட்டத்தைக் கொண்டு, அரசியலே உருவாகிவிட்டது. ஹீரோயிசத்தில் கட்டுண்டு கிடக்கிறார்கள். நம்மால் செய்ய

முடியாத பல விஷயங்களை நமது ஹீரோ செய்கிறார் என்கிற உளவியல் சரணாகதிதான் ஹீரோ ஒர்ஷிப் வளர்ந்ததற்கு காரணம். அன்று பணக்கார வீட்டுப் பெண்ணை எம்.ஜி.ஆர். காதலிப்பது போல, கைபிடிப்பது போல காட்டத் தொடங்கியதில் ஆரம்பித்த ஹீரோயிசம் இன்னும் தொடர்கிறது. இதிலிருந்து தமிழ்சினிமாவை மீட்க வேண்டும் என்றுதான் பாலசந்தர் ஓர் அலையை உருவாக்கினார். பாரதிராஜா கவனத்தைத் திருப்பினார். மணிரத்னம், ஷங்கர், விக்ரமன் எல்லாம் புதிய அலைக்காக கஷ்டப்படுகிறார்கள். என்னைப் போன்ற நாலுபேர் வந்து நான்கு படத்தைக் கொடுத்தோம். இதனாலெல்லாம் உடனே ஹீரோயிசத்தை மாற்றிவிட முடியாது... கதைக்காக தன்னை மாற்றிக் கொள்கிற ஹீரோக்கள் வரவேண்டும். நான் விரும்புவது ஒரு நல்ல ஹீரோ! ஒரு நல்ல கதை! 'சேது' படத்தில் விக்ரம் செய்த ரோலைச் செய்ய எத்தனை ஹீரோக்கள் தயாராக இருந்திருப்பார்கள்? மொட்டை அடிக்க முன் வந்திருக்க மாட்டார்கள். கதைக்காக தனது உடம்பை குறைத்து, முகத்தை மாற்றிக் கொண்டு நடித்ததால் அந்த படத்தில் 'சேது' என்ற கேரக்டர் தெரிந்ததே தவிர, விக்ரம் தெரியவில்லை. இப்படி உருமாற இப்போதுதான் ஹீரோக்கள் மெள்ள மெள்ள முன் வருகிறார்கள். இதற்கு இன்று கமல்ஹாசனையும், அன்று சிவாஜியையும் முன்னோடிகள் என்று சொல்லலாம். என்னைப் பொருத்தவரை ஒரு கதைக்கான ஹீரோவைத்தான் தேடுகிறேன். ஹீரோவுக்கான கதையை உருவாக்க முடியாது. அது எனக்குத் தெரியாது என்று வெட்கத்தை விட்டு ஒப்புக் கொள்கிறேன்.

யதார்த்தமாகவும், புதுமையாகவும் பாடலுக்கான சிச்சுவேஷனை வைப்பவர் சேரன் என்று பெயரெடுத்த நீங்களே, 'தேசிய கீதம்' படத்தில், ரம்பா டெல்லித் தெருக்களில் ஆடுகிற மாதிரி ஒரு பாடல் வைத்தீர்கள். ஏன் இந்த முரண்பாடு?

ஒரு பாடலைத்தான் இப்படி வைத்தேன். ஆனால் ரம்பா கவர்ச்சியாக நடிப்பவர், அவருக்கு யார் உங்களைப் பாவாடை, தாவணி போடச் சொன்னது என்று பலர் கண்டனக் கடிதம் எழுதினார்கள்! இப்படிக் கேட்பவர்களை உட்கார வைத்து, இப்படியெல்லாம் பிரச்னைகள் இருக்கிறது பாருங்கள் என்று காட்ட வேண்டும் என்றுதான் அந்தப் பாடல் வைத்தேன். டூயட்- கிளாமர் சாங் என்று பழகிய பெரும்பகுதி ரசிகர்களை விட்டுவிடாமல் அவர்களில் ஒருவனாக இருந்து கொண்டு, பிரச்னையைச் சொன்னால் ஏற்றுக் கொள்வார்கள். இதை விட்டுவிட்டு புரட்சி செய்ய வந்திருக்கிறோம் என்று நீங்கள் படமெடுத்தால் தலையில் துண்டை போட்டுக் கொண்டு போய்விட வேண்டியதுதான்.

இதையெல்லாம் மீறி 'தேசிய கீதம்' ஏன் தோல்வி அடைந்தது என்று நினைக்கிறீர்கள்?



'தேசிய கீதம்' பார்த்து விட்டு நல்ல படம்தானே ஏன் ஓடவில்லை என்று எல்லோரும் கேட்டார்கள். ஏன் ஓடவில்லை என்பது பலருக்கும் தெரியும். எனது நான்கு படங்களில் அதைத்தான் 'மாஸ்டர் பீஸ்' என்று சொல்லுவேன். ஏனென்றால் எனது உணர்வு, எனது வெறி, எல்லாம் அதுதான். அடிப்படை வசதிகளுக்காக எனது கிராமத்து மக்களோடு கைகோத்துக் கொண்டு, வீதிக்கு வந்து போராடுகிற இளைஞனாக நான் இருந்தேன். அதையேதான் படத்தில் பிரதி பலித்தேன். அந்தப் படம் தோற்று விட்டதாகச் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

ஆனால் அதே நேரத்தில் வெளி வந்த 'முதல்வன்' படம் கூட தேசிய கீதத்தின் கருத்தையே தான் எதிரொலித்தது. ஆனால் எப்படி வெற்றி

''தொழிற்சாலையிலே 'கிரேன்' ஆப்ரேட்டர் ரிடையர் ஆகும்போது என்ன சொன்னாரு?''

''விடை பெறு'கிரேன்'னாரு.

— தஞ்சை தாமு



பெற்றது?

உண்மைதான். நாட்டு மக்களின் பிரச்னைகளை, தேவைகளைப் புரிந்து கொள்கிற தலைவன்தான் தேவை என்பதை மிகவும் உணர்ச்சி பூர்வமாக, யதார்த்தமாக தேசிய கீதத்தில் சொல்லிவிட்டேன். இதே கருத்தை மிகவும் புத்திசாலித்தனமாக கையாண்டிருந்தார் ஷங்கர். இந்த கருத்தையும் எடுத்துக் கொண்டு, உப்புக்கருவாடு, ஷக்கலக்க பேபி பாடல்களை வைத்துக்கொண்டு, பிரமாண்டம், கிளாமர் இரண்டையும் கலந்து எண்டர்டெயின்மெண்டாக கொடுத்ததால் ஏற்றுக் கொண்டார்கள். நான் அப்படிச் செய்யவில்லை. 'நீ கருத்தையும் சொல்லு... ஆனால் எண்டர்டெயின்மெண்ட் வைத்துச் சொல்லு: ஏற்றுக் கொள்கிறோம். காசு கொடுத்து டிக்கெட் வாங்குகிற நாங்கள்தான் தீர்ப்பு சொல்லுவோம். நீ சொல்லக் கூடாது' என்கிறார்கள்.

பொதுவாகவே சேரன் கோபக்காரர் என்று எல்லோரும் சொல்கிறார்களே... அது நிஜம்தானா?

சினிமாவில் என்னை நல்லவன் என்று சொன்னவர்கள் மிகக் குறைவு. காரணம் வெளிப்படையாக, நேர்மையாக, பிறருக்குத் துரோகம் செய்யாமல், யாரையும் அழிக்காமல், ஒருவரிடம் கை கட்டி நின்று யாசகம் கேட்காமல், திறமையைச் சொல்லி எனக்கு சான்ஸ் கொடுங்கள் என்று கேட்பது இங்கே இருப்பவர்களுக்குப் பிடிக்கவில்லை. கை கட்ட வேண்டும், துதி பாட வேண்டும். முகத்துக்கு முன்பாக ஒன்றும், முதுகிற்கு பின்பாக ஒன்றும் பேச வேண்டும் என்பதை சினிமா உலகில் கடைபிடிக்கிறார்கள். ஆனால் எனது அம்மாவோ, எனது கிராம மக்களோ என்னை அப்படி வளர்க்கவில்லை. நியாயமாக கோபப்படுவது எப்படித் தவறாகும்...? அடுத்தவர்களை ஒரு போதும் நான் அவமதித்தது கிடையாது. ஆனால் சேரன் திமிர் பிடித்தவன் என்று சொல்கிறார்கள். மேலூர் டூரிங் தியேட்டரில், முன் வரிசையில் அமர்ந்து விசிலடித்துப் படம் பார்க்கிற அதே சேரனாகத்தான் இன்றும் இருக்கிறேன்.

இந்தமுறை தமிழுக்காக கிடைத்த எட்டு விருதுகளையும், கேயார் சண்டை போட்டு வாங்கி வந்திருக்கிறார் என்று சொல்லியிருக்கிறீர்கள்... அப்படியானால் தகுதியடிப்படையில் இந்த விருதுகள் கிடைக்கவில்லையா?

தகுதியான விருதுகளுக்கே நாம் சண்டை போட்டுத்தான் வாங்கி வரவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒவ்வொரு மொழிக்காரரும் தங்கள் படங்களுக்கே எல்லா விருதுகளும் கிடைக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். படத்தின் தரம் பற்றிக் கவலைப்படாமல், மொழி பேதத்தைதான் முன் நிறுத்துகிறார்கள். நான்கு தென்னக மொழிகள் சார்பில் எட்டுபேர் விருதுக் குழுவில் இடம் பெறுகிறார்கள். ஆனால் வடக்கிலிருந்து பதினான்கு பேர் இடம் பெறுகிறார்கள்.

ஒரு கதாநாயகனாக நடிக்கும் உங்களது முயற்சி என்னவாயிற்று?

கதையின் நாயகனாக இருப்பதே போதும் என்று நினைக்கிறேன். கம்பெனி கம்பெனியாக ஏறி வாழ்க்கையைத் தொலைப்பதை விட இது தான் சரியான வழி என்று இயக்கத்திற்குள் நுழைந்தேன். ஆனால் இங்கே வந்த பிறகு இதில் கிடைக்கும் ஆத்ம திருப்தி கதாநாயகனாக நடிப்பதில் இல்லை. அதில் பணம், புகழ் கிடைக்கும். இயக்குனராக இருந்தால், ஒரே சேரனை பத்து பாத்திரங்களுக்குள் பத்து விதமாகப் பார்க்க முடியும். அப்படியே நான் நடிக்க வந்திருந்தாலும் ஒரு பத்து படங்களுக்குமேல் தாக்குப் பிடித்திருக்க முடியாது. இப்போது கண்ணாடியின் முன்பக்கம் மட்டுமல்ல, பின்பக்கமும் பார்க்க கற்றுக் கொண்டிருக்கிறேன்.

சந்திப்பு: **ஜெயந்தன்**

படங்கள்: **ராஜன்**



எழுபத்து ஐந்தாம் அத்தியாயம்

விபரீத விளைவுகள்

அமரர் கல்கி

தஞ்சைபுரி அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி தர்ம சிங்காதனத்தில் வீற்றிருந்தார்.

அரண்மனைப் பெண்டிர்களில் முக்கியமானவர்கள் அவருக்கு இருமருங்கிலும் அமர்ந்திருந்தார்கள்.

சோழ நாட்டு அமைச்சர்களும் தனபதிகளும் அரசிளங் குமாரர்களும் சக்கரவர்த்தியின் முன்னிலையில் வணக்கமான பாவனையில் நின்று கொண்டிருந்தார்கள்.

பெண்டிர்களிலே மூத்த எம்பிராட்டியான செம்பியன்மாதேவியும், உடைய பிராட்டி வானமாதேவியும், இளையபிராட்டி குந்தவையும், கொடும்பாளூர் இளவரசி வானதியும் காணப்பட்டனர். அவர்களுடன் கலந்து நிற்பதற்குத் தயங்கிய பூங்குழலியும் சற்றுத் தூரத்தில் காணப்பட்டாள்.

ஆடவர்களிலே பெரிய பழுவேட்டரையரும், சின்னப் பழுவேட்டரையரும், முதன்மந்திரி அநிருத்தரும், சேநாதிபதி பெரிய வேளாரும், மிலாடுடையார் மலையமானும், இளவரசர் அருள்மொழிவர்மரும், புனர் ஜன்மம் பெற்ற மதுராந்தகத் தேவரும், பார்த்திபேந்திரப் பல்லவனும், முதன் மந்திரிக்குப் பின்னால் சற்று ஒதுங்கித் திருமலையும் இருந்தனர்.

சக்கரவர்த்தி சபையில் கூடியிருந்தவர்களைக் கண்ணோட்டமாகப் பார்த்துவிட்டு, "அழைத்தவர்கள் எல்

லாரும் வந்திருக்கிறார்களா? கடம்பூர் மன்னரைக் காணோமே?'' என்றார்.

''சம்புவரையரின் மகன் இப்போது தான் திரும்பி வந்தான். தந்தையும் மகனும் விரைவில் இங்கு வந்து சேருவார்கள்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''ஓ! கந்தமாறன் திரும்பி வந்து விட்டானா? என்ன செய்தி கொண்டு வந்தான்? தப்பி ஓடியவர்களைப் பிடித்துக்கொண்டு வந்து விட்டானா?'' என்று சுந்தர சோழர் வினவினார்.

''இல்லை, பிரபு! அவர்களைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் வந்தியத்தேவனைக் கொன்றுவிட்டதாகச் சொல்லுகிறான். இன்னொரு பைத்தியக்காரன் அகப்படவில்லையாம்! தப்பிப் போய் விட்டானாம்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

பெரிய பழுவேட்டரையர் இப்போது ஒரு ஹுங்காரம் செய்தார். அவர் ஏதோ சொல்லப் போகிறார் என்று மற்றவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் ஒன்றும் சொல்லவில்லை.

சக்கரவர்த்தி, ''நான் செய்த தவறினால் இன்னும் என்னென்ன விளைவுகள் நேருமோ, தெரியவில்லை! முதன் மந்திரி! என் மனத்தில் உள்ள எண்ணங்களை நீர் நன்கு அறிந்திருக்கிறீர். எனக்கும் என் குலத்துக்கும் மிகவும் வேண்டியவர்களை இங்கே இப்போது அழைத்திருக்கிறேன். எதற்காக அழைத்தேன் என்பதையும், என் கருத்தையும் நீர்தான் இவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். என்னைக் காட்டிலும் தெளிவாக உம்மால் சொல்ல முடியும் அல்லவா?'' என்றார்.

''ஆக்ஞை, சக்கரவர்த்தி!'' என்று முதல் அமைச்சர் கூறிவிட்டுச் சபையோரைப் பார்த்துச் சொன்னார்:-

''பல காரணங்களினால், சக்கரவர்த்தியின் உள்ளம் புண்பட்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அபிமன்யுவையும் அரவானையும் ஒத்த வீராதி வீரனான மூத்த மகனைச் சமீபத்தில் நம் மன்னர் பறி கொடுக்க நேர்ந்தது. இளவரசர் இறந்த காரணமோ இன்னமும் மர்மமாக இருந்து வருகிறது. மூன்று ஆண்டு காலமாக அந்த வீரத் திருமகனை நம் அரசர் பார்க்கவில்லை. காஞ்சியில் பொன் மாளிகை கட்டிவிட்டுத் தந்தையை அங்கே வந்து தங்கியிருக்க வேண்டும் என்று கரிகாலர் செய்திக்கு மேல் செய்தி விடுத்தார். ஆயினும் சக்கரவர்த்தி போகவில்லை. அதன் காரணம் நீங்கள் எல்லாரும் அறிந்ததே. இந்தத் தஞ்சை மாநகரில் சக்கரவர்த்தி சின்னப் பழுவேட்டரையரின் பாதுகாப்பில் இருந்து வந்தார். நாடு நகரங்களில் பல வித வதந்திகள் உலாவி வந்தன. அத்தகைய சந்தர்ப்பத்தில் சக்கரவர்த்தி தஞ்சையை விட்டுச் சென்றால், பழுவேட்டரையர்களிடம் அவருக்கு நம்பிக்கை குன்றி விட்டதாக யாரேனும் எண்ணக் கூடும் அல்லவா? அத்தகைய எண்ணத்துக்கு இடங் கொடுக்கச் சக்கரவர்த்தி விரும்பவில்லை. நம் அரசர் சொல்வதற்குத் தயங்கக்கூடிய ஒரு செய்தியை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். அதற்காக, இங்கே கூடியுள்ள மன்னர் குலத் தலைவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நம் அரசர் கோமான் சில காலமாக உடல் நோயுற்றுக் கால்களின் சக்தியை இழந்திருந்தார். அதனால் அவர் உள்ளம் நலிவுற்றிருந்தது. ஆனால் அதைக் காட்டிலும் அதிகமாக அவர் உள்ளத்தைப் புண்படுத்திய மனநோய் ஒன்று இருந்தது. சோழர் பெருங்குலத்துக்கு உற்ற துணைவர்களாயும், பரம்பரையாக அக்குலத்துடன் உறவு பூண்டவர்களாயும், இந்தப் பெரிய சோழ சாம்ராஜ்யத்தைத் தாங்கும் வைரத் தூண்களாயும் இருந்த நீங்கள் ஒருவரோடொருவர் வேற்றுமைப்பட்டுப் பகைமை பூண்டிருந்தது நம் சக்கரவர்த்தியின் உள்ளத்தைப் புண்படுத்தி உடல்நோயையும் வளர்த்து

வந்தது. யானை மேல் துஞ்சி வீர சொர்க்கம் அடைந்த இராஜாதித்தரின் தலைமையில் நீங்கள் அனைவரும் ஒருமுகமாகத் தக்கோலப் போர்க்களத்தில் சண்டையிட்டீர்கள். அந்தப் போர்க்களத்தில், இராஜாதித்தர் எதிர்பாராத வீர மரணம் அடைந்தபடியால் சோழ சைன்யம் தோல்வியுற்றது. ஆனால் உங்களுடைய வீரத்தினாலும்



உறுதியினாலும் ஒற்றுமையினாலும், இழந்த தொண்டை மண்டலத்தையும் கங்க மண்டலத்தையும் திரும்பக் கைப்பற்றினீர்கள். சேவூர்ப் போர்க்களத்தில் பாண்டியர்களை முறியடித்துப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றி நமது நேர் ஆளுகைக்குள் கொண்டு வந்தீர்கள். ஈழ நாட்டில் மகிந்தனைப் புறங்கண்டு புலிக்கொடியை உயர்த்தினீர்கள். இவ்வளவு அரும்பெரும் காரியங்களை, நீங்கள் அனைவரும் ஒருமைப்பட்டுச் சோழ சாம்ராஜ்யத்தின் நலமே உங்கள் நலம் என்று கருதி வந்ததினாலே சாதிக்க முடிந்தது.

''அத்தகைய நன்னிலைமை சில ஆண்டுகளாக மாறிவிட்டது. எக் காரணத்தினாலோ உங்களுக்குள் மன வேற்றுமை ஏற்பட்டு விட்டது. இரண்டு கட்சியாகப் பிரிந்து விட்டீர்கள். இந்தப் பிளவை நீக்க வேண்டும் என்று நம் அரசர் பெருமான் எவ்வளவோ பாடுபட்டார். தமக்குப் பிறகு அரசுரிமை யாருக்கு என்பது பற்றித்தான் உங்களுக்குள் வேற்றுமை என்பதை அறிந்தார். நீங்கள் யாரும் அதை நேர்முகமாகச் சக்கரவர்த்தியிடம் சொல்லவில்லை. ஆனாலும் இணையற்ற





அறிவாளியான நம் பேரரசர் அதை ஊகித்து அறிந்தார். அரசுரிமை விஷயத்தை உங்கள் எல்லாருடனும் கலந்து மனம் விட்டுப் பேசிச் சமரசமாகத் தீர்த்து வைக்க விரும்பினார். அவ்விதம் அதைத் தீர்த்து வைத்த பின்னரே காஞ்சிக்குச் செல்வது என்று எண்ணியிருந்தார். சிவஞான கண்டராதித்தப் பெருமானின் திருக்குமாரருக்கே இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை உரிமையாக்க எண்ணியிருந்தார். இதை ஆதித்த கரிகாலரையும் ஒப்புக் கொள்ளச் செய்யலாம் என்று நம்பியிருந்தார். அதற்கிடையில் எதிர்பாராத துயர சம்பவம் நிகழ்ந்துவிட்டது. கரிகாலர் கடம்பூர் மன்னரின் மாளிகைக்கு வருகிறார் என்று அறிந்தபோது சக்கரவர்த்தி மனம் பூரித்தார். இதன்மூலம் உங்களுக்குள் ஏற்பட்டிருந்த வேற்றுமை நீங்கி விடும் என்று எண்ணினார். கரிகாலர் சம்புவரையரின் திருக்குமாரியை மணந்துகொண்டால் முன்போல் நீங்கள் அனைவரும் ஒரு மனப்படுவீர்கள் என்றும் இராஜ்ய உரிமை விஷயத்தையும் சுலபமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் எண்ணினார். நானும் அவ்விதமே நினைத்தேன். உங்களில் பலரும் அவ்விதமே எண்ணியிருப்பீர்கள். நம் திருக்கோவலூர் மன்னர்கூட அதனாலேதான் ஆதித்த கரிகாலர் கடம்பூர் செல்வதற்குத் தடை சொல்லவில்லை. ஆனால் நம் எல்லாருடைய ஆசையும் பங்கம் உற்றது. கடம்பூர் அரண்மனையில் இளவரசர் கரிகாலர் அகால மரணம் அடைந்தார்...''

"அது எப்படி நேர்ந்தது என்பதைக் கண்டறியப் போகிறோமா, இல்லையா? இதைத் தெரிந்துகொண்டு மேலே நீங்கள் பேசுவது உசிதமாயிருக்கும்'' என்றார் திருக்கோவலூர் மலையமான்.

"ஆமாம்; அதைத் தெரிந்து கொள்ளாமல் மேலே எந்த யோசனையும் செய்வது சாத்தியமில்லை!'' 'என்றார் சேநாதிபதி.

''வீரப் பெருமக்களே! நடந்தது நடந்துவிட்டது. போனதைப் பற்றிக் கிளறிக் கொண்டிருக்க வேண்டாம் என்று சக்கரவர்த்தி கருதுகிறார்!'' என்றார் முதன்மந்திரி அநிருத்தர்.

"அது எப்படி முறையாகும்? சோழ குலத்தின் நீதி பரிபாலனம் உலகப் பிரசித்தியானது. இந்த ராஜ்யத்தில் ஒரு திக்கற்ற அனாதை உயிரிழந்தாலும் அது எப்படி நேர்ந்தது என்று விசாரிக்கப்படுகிறது. அதற்கு யாராவது காரணம் என்று ஏற்பட்ட பின் தக்க தண்டனை விதிக்கப்படுகிறது. அப்படியிருக்க, பட்டத்து இளவரசர் என்று முடிசூடிய இளங்கோவன் அகால மரணத்தை எவ்வாறு விசாரிக்காமல் விடுவது?'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

சுந்தர சோழர் பெருமூச்சு விட்டு, ''கொடும்பாளூர் மாமா! கேளுங்கள்! என் அருமை மகன் அகால மரணம் அடைந்ததில் என்னை விடத் துயரம் வேறு யாருக்காவது இருக்க முடியுமா? நானே விசாரணை வேண்டாம் என்கிறேன். ஏன்? இங்குள்ள யாரும் அதற்குப் பொறுப்பாளி அல்ல என்று நிச்சயமாக அறிந்துள்ளேன். நான் செய்த பாவத்தின் பயனாக என் மகனைப் பறிகொடுத்தேன். அதற்குப் பிராயச்சித்தம் என்ன உண்டோ சொல்லுங்கள்! செய்துவிடுகிறேன். வேறு காரணம் தேட வேண்டாம்!'' என்றார்.

"பிரபு! தாங்கள் இப்படிச் சொல்லுவதினால், குற்றத்துக்குப் பொறுப்பாளியான யாரையோ காப்பாற்ற விரும்புகிறீர்கள் என்று ஏற்படும். நாட்டு மக்கள் ஏற்கெனவே இளவரசரது மரணத்தின் காரணம் பற்றிப் பலவாறு பேசிக் கொள்கிறார்கள். உண்மையைக் கண்டுபிடித்து வெட்ட வெளிச்சமாக்கி விடுவதுதான் நல்லது. குற்றவாளி யாராயிருந்தாலும் உரிய தண்டனைக்கு ஆளாக வேண்டியதுதான்!'' என்றார் சின்னப்பழுவேட்டரையர்.

"நூற்றில் ஒரு வார்த்தை! அதுதான் நேர்மையான இராஜரீக முறை. இந்தப் பெருங்குற்றத்தை விசாரித்துத் தண்டியாவிட்டால், நாட்டு மக்களுக்கு நீதி பரிபாலனத்திலேயே நம்பிக்கை

குன்றிப் போய்விடும்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

"பெரியோர்களே! இதைப் பற்றி ஏன் இவ்வளவு யோசனையும் வாதப் பிரதி வாதமும்? இந்தச் சிறுவன் கூறுவது அதிகப் பிரசங்கமாக இருந்தால் மன்னித்து அருளுங்கள். குற்றவாளி தண்டிக்கப்பட்டு விட்டான்! இளவரசர் கரிகாலனைக் கொன்றவனும் என் சகோதரியின் வாழ்க்கையைப் பாழாக்கி அவளைப் பைத்தியமாக அடித்தவனுமான பாதகன் வந்தியத்தேவனை நான் என் கை வேலால் கொன்று விட்டுத் திரும்பினேன். இன்னும் என்னத்திற்கு விசாரணை?'' என்றான் கந்தமாறன்.

முதன்மந்திரி முதலில் பேசிக் கொண்டிருந்தபோதே கந்தமாறன் அங்கே வந்து விட்டான். அவன் வந்திருந்ததை அவன் குரலைக் கேட்ட பிறகுதான் மற்றவர்கள் கவனித்தார்கள்.

அவர்களில் பெரிய பழுவேட்டரையர் மெல்லிய குரலில், "மூடன்! நிர்மூடன்! கடம்பூர் சம்புவரையருக்கு இப்படிப்பட்ட பிள்ளை வந்து பிறந்தானே!'' என்று முணுமுணுத்தார்.

முதன்மந்திரி அநிருத்தர் "கந்தமாறா! வந்தியத்தேவனை நீ வேல் எறிந்து கொன்றது உண்மைதானா? அவனை நீ பார்த்தாயா? இரவு நேரத்தில் அல்லவா அவனை நீ துரத்திச் சென்றாய்?'' என்றார்.

"முதன்மந்திரி! உங்களுக்கு என் பேரில் எப்போதும் நம்பிக்கை இல்லையென்பதை அறிவேன். இரவாக இருந்ததினால் ஆளைத் தெரியாமல் போகுமா?''

"அவனும் வீரனாயிற்றே! உன்னுடன் சண்டை போடவில்லையா?''

"ஆமாம், என்னுடைய வீரத்திலும் தங்களுக்கு நம்பிக்கை கிடையாதுதான். ஆகையால் சக்கரவர்த்தியிடம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஓடியவர்கள் இரண்டு பேர். ஒருவன் சில வருஷங்களாக நம் பாதாளச் சிறையிலிருந்த பைத்தியக்காரன். அவன் என்னைத் தடுக்க யத்தனித்தபோது இன்னொருவன் ஆற்றின் அக்கரையை நெருங்கிக் கொண்டிருந்தான். வேல் எறிந்து அவனைக் கொன்றேன். அவன் வாணர்குலத்து வந்தியத்தேவனாகவே இருக்க வேண்டும்.

"இறந்து போனவனுடைய உடலை நீ உன்னுடன் எடுத்துவரவில்லையா?''

"நீர் இப்படிச் சந்தேகிப்பீர் என்று தெரிந்திருந்தால் வடவாற்று வெள்ளத்தில் இன்னும் கொஞ்ச தூரம் தேடிப் போயிருப்பேன். ஆனால் இந்த மந்திராலோசனை சபைக்கு வந்திருக்க முடியாது!'' என்றான் கந்தமாறன்.

"ஆமாம்; நீ வராமலிருந்தால் பெரு நஷ்டமாகியிருக்கும்!'' என்றார் தளபதி சின்னப் பழுவேட்டரையர்.

"தம்பி! வந்தியத்தேவனைத் தேடிப் பிடிப்பதில் உனக்கு என்ன அவ்வளவு சிரத்தை?'' என்று பெரிய வேளார் பூதி விக்கிரம கேசரி கேட்டார்.

"இதைக் கேட்கவும் வேண்டுமா? என்னுடைய வீட்டில் அந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்தது. உண்மைக் குற்றவாளி அகப்படாவிட்டால், என் பேரிலும் என் தந்தையின் பேரிலும் நீங்கள் சந்தேகப்பட மாட்டீர்களா?''

சுந்தர சோழர் தலையிட்டு, "பிள்ளாய்! கந்தமாறா! அப்படியெல்லாம் வேறு யார் சந்தேகப்பட்டாலும் நான் சந்தேகப்பட மாட்டேன். உன் தந்தைக்கு என்னிடமுள்ள பக்தி விசுவாசத்தை நான் அறியேனா? போகட்டும்! பெரிய சம்புவரையர் எங்கே?'' என்றார்.

"சக்கரவர்த்தி! எங்கள் குடும்பத்தின் அவமானத்தை நானே சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நான் வந்தியத்தேவனைக் கொன்றுவிட்டுத் திரும்பியதாக என் தந்தையிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அதை என் தங்கை மணிமேகலை கேட்டுக் கொண்டிருந்தாள். நான் கூறியதைக் கேட்டதும் அவள் என்னையே கத்தியால் குத்திக் கொல்ல வந்துவிட்டாள். அவளைச் சாந்தப்படுத்தி, அவளுடைய

வெறியைத் தணிக்க என் தந்தை முயன்று கொண்டிருக்கிறார். விரைவில் வந்து விடுவார். இந்த மந்திராலோசனை சபையில் என்ன முடிவாகிறதோ, அதைத் தாமும் ஏற்றுக் கொள்வதாக என்னிடம் சொல்லி அனுப்பினார்!'' என்றான் கந்தமாறன்.

''அப்பனே! உன் சகோதரி முன்னமேயே 'இளவரசரை நான்தான் கொன்றேன்!' என்று பித்துப் பிடித்தவள் போலச் சொல்லிக் கொண்டிருந்தாள் அல்லவா?'' என்றார் கிழவர் மலையமான்.

''ஆம், ஆம்! வந்தியத்தேவன் செய்த குற்றத்தை மறைத்து அவனைத் தப்புவிப்பதற்காகவே அவ்வாறு அவள் சொன்னாள். அப்போது அவள் முழுப் பைத்தியமாகியிருக்கவில்லை. இப்போது பைத்தியம் முற்றிப் போயிருக்கிறது. எங்கள் குலத்தின் துரதிர்ஷ்டம்!'' என்றான் கந்தமாறன்.

''இளஞ் சம்புவரையரே! வந்தியத்தேவர்தான் இளவரசர் கரிகாலரைக் கொன்றதாக அவ்வளவு தீர்மானமாய்ச் சொல்கிறீரே? அது எப்படி? நீரே உம் கண்ணால்





பார்த்தீரா? அல்லது பார்த்தவர்கள் யாரேனும் சொன்னார்களா?'' என்று முதன்மந்திரி கேட்டார்.

''அமைச்சர் ஐயா! கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? இளவரசர் இறந்து கிடந்த இடத்தில் அந்த வாணர் குல வீரன்தான் இருந்தான். அவன் முகத்தைப் பார்த்தாலே குற்றவாளி என்று எழுதி ஒட்டியிருந்ததுபோல் தெரிந்தது. அதுவோ பழுவூர் இளையராணியின் அந்தப்புரம். அங்கே இவன் வேறு எதற்காகப் போனான்? குற்றவாளியில்லா விட்டால், பாதாளச் சிறையிலிருந்து ஏன் தப்பித்து ஓடியிருக்க வேண்டும்?'' என்றான் கந்தமாறன்.

''பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடியவனைப் பிடித்துக் கொண்டு வந்து ஒப்புவிக்கும் பொறுப்பை முதன்மந்திரி ஏற்றுக் கொண்டார். அதை இந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்துகிறேன்'' என்றான் பார்த்திபேந்திரன்.

''பல்லவர் குலக் கோமகனே! நான் அவ்வாறு ஏற்றுக் கொண்டது உண்மைதான். ஆனால் இளஞ் சம்புவரையர் இவ்விதம் தாமே நீதிபதியாகி விசாரித்து முடிவு செய்து தண்டனையையும் நிறைவேற்றி விடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. வந்தியத்தேவரும் பழமையான வாணர்குலத்தில் தோன்றியவர். இவருடைய மூதாதையர் ஒரு சமயம் பெரிய இராஜ்யத்தையே ஆண்டார்கள். சோழர் குலத்துக்குப் பெண் கொடுத்து உறவு பூண்டார்கள். குறுநில மன்னர் குலத்தில் வந்தவர்கள் மீது குற்றம் ஏற்பட்டால், சக்கரவர்த்தியே தர்மாசனத்தில் வீற்றிருந்து விசாரித்து முடிவு செய்வதுதான் மரபு!'' என்றார் முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர்.

''ஐயா! சிறையிலிருந்து தப்பி ஓடியவனை உயிருள்ளவனாகப் பிடித்து வரலாம்; அல்லது உயிரற்றவனாகவும் பிடித்து வரலாம் என்பதும் மரபுதான்!'' என்றான் பல்லவர் குல வீரன் பார்த்திபேந்திரன்.

''வந்தியத்தேவனை உயிரற்றவனாகவும் இளஞ் சம்புவரையர் கொண்டு வரவில்லையே? வடவாற்று வெள்ளத்தில் விட்டு விட்டல்லவா வந்துவிட்டார்?'' என்றார் முதன்மந்திரி அநிருத்தர்.

அச் சமயத்தில் பெரிய சம்புவரையர் அந்த மந்திராலோசனை மண்டபத்தில் பிரவேசிக்கவே எல்லாருடைய கண்களும் அவர்பால் திரும்பின. அவர் முகத்தில் குடிகொண்டிருந்த வேதனையை அனைவரும் கவனித்தார்கள்.

கந்தமாறன் அவர் அருகில் சென்று மெல்லிய குரலில், ''மணிமேகலை எப்படி இருக்கிறாள்?'' என்று கேட்டான்.

சம்புவரையர் ''அப்படியேதான் இருக்கிறாள். உன் அன்னையை அவளுக்குக் காவல் வைத்துவிட்டு வந்தேன்!'' என்று உரத்த குரலில் சற்றுக் கடுமையாகவே கூறினார்.

சக்கரவர்த்தி சம்புவரையரைப் பார்த்து ''ஐயா! தாங்கள் தங்கள் செல்வக் குமாரியின் அருகில் இருப்பது அவசியமானால் அவ்வாறே செய்யலாம். நம்முடைய ஆலோசனையை நாளை வைத்துக் கொள்ளலாம்!'' என்றார்.

''இல்லை, பிரபுவே! அவள் அருகில் நான் இருந்து பயன் ஒன்றுமில்லை. என் குமாரன் கை வேலினால் உயிர் துறந்த வாணர்குல வீரன் வந்தியத்தேவன் மீண்டும் உயிர் பெற்று வந்தால் ஒருவேளை பயன்படலாம்!'' என்றார் சம்புவரையர்.

அவர் பேச்சில் தொனித்த வேதனை நிறைந்த துயரமும் மனக் கசப்பும் அந்தச் சபையில் சிறிது நேரம் மௌனம் குடிகொள்ளும்படி செய்தது.

முதன்மந்திரி அநிருத்தர், ''ஐயா! தங்கள் மாளிகையில் நடந்த விபரீதச் சம்பவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். இளவரசர் தங்கள் மாளி

கையில் அகால மரணம் அடைய நேர்ந்ததினால் தங்கள் உள்ளம் எவ்வளவு புண்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் எல்லாரும் உணர்ந்திருக்கிறோம். அதற்குத் தங்களை எந்த விதத்திலும் பொறுப்பாக்கச் சக்கரவர்த்தி விரும்பவில்லை. ஆனாலும் நாடு நகரங்களில் நானாவிதமான வதந்திகள் பரவாமலிருக்கும் பொருட்டு, இளவரசனின் மரணம் எவ்விதம் நேர்ந்தது என்று நிச்சயமாகத் தெரிந்தால் நல்லது அல்லவா? இந்தச் சபையில் கூடியுள்ளவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள். அதைப் பற்றித் தாங்கள் ஏதாவது தெரியப்படுத்துவதற்கு இருக்கிறதா? வாணர்குலத்து வந்தியத்தேவனால்தான் இளவரசரின் மரணம் நேர்ந்தது என்று நிச்சயமாகத் தெரிந்தால் நல்லது அல்லவா? இந்தச் சபையில் கூடியுள்ளவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள். அதைப் பற்றித் தாங்கள் ஏதாவது தெரியப்படுத்துவதற்கு இருக்கிறதா? வாணர் குலத்து வந்தியத்தேவனால்தான் இளவரசரின் மரணம் நேர்ந்தது என்று இளஞ்சம்புவரையர் சாதிக்கிறார். தங்களுடைய கருத்து என்ன?'' என்று கேட்டார்.

சம்புவரையர் சிறிது நேரம் திகைத்து நின்றார். பின்னர் நாலாபுறமும் பார்த்தார். அவருடைய பார்வை கந்தமாறன் பேரில் விழுந்ததும், "ஆம், ஆம்! இந்த மூடன் அவ்வாறுதான் அன்றைக்கும் சொன்னான். அதை நான் நம்பவில்லை. இன்றும் நம்பவில்லை. இவன் வார்த்தையைக் கேட்டு இளவரசர் கரிகாலரைக் கடம்பூர் மாளிகைக்கு வரும்படி அழைத்தேன். அதனால் இத்தனை விபரீத விளைவுகள் நேர்ந்துவிட்டன. எனக்கும் என் குலத்துக்கும் என்றும் அழியாத அபகீர்த்தி ஏற்பட்டுவிட்டது!'' என்றார்.

கிழவர் மலையமான் இரங்கிய குரலில், ''சம்புவரையரே! பதற வேண்டாம்! நடந்தது நடந்துவிட்டது! நல்ல எண்ணத்துடனேதான் தாங்கள் என் பேரப்பிள்ளையைத் தங்கள் மாளிகைக்கு அழைத்தீர்கள். கரிகாலனுடைய மரணத்துக்குத் தங்களைப் பொறுப்பாக்க இங்கே யாரும் எண்ணவில்லை. ஆகையினால்தான் உண்மையை அறிய விரும்புகிறோம்! அதற்குத் தாங்கள் உதவி செய்தால் நலமாயிருக்கும்!'' என்றார்.

''நான் என்ன உதவி செய்ய முடியும்? என் மகன் ஒன்று சொல்லுகிறான்; அதற்கு நேர்மாறாக என் மகள் இன்னொன்று சொல்லுகிறாள். இருவர் பேச்சையும் என்னால் நம்ப முடியவில்லை. எனக்கும் உண்மை தெரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டதுபோல் இருக்கிறது. உண்மையில் நடந்ததை அறிவதற்கு என்னைக் காட்டிலும் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையர் உதவி செய்யக்கூடும். அவரைக் கேளுங்கள்! அவர்தான் எல்லாவற்றுக்கும் மூல காரணம். அவர்தான் முதன்முதலில் மதுராந்தகத் தேவரை இரகசியமாகக் கடம்பூருக்கு அழைத்து வந்தார். என் மகளை அவருக்கு மணம் செய்து கொடுக்கும்படியும் சொன்னார். அதிலிருந்து என் குடும்பத்துக்குச் சனியன் பிடித்தது. அந்த மதுராந்தகத் தேவரே இப்போது மாயமாய் மறைந்து விட்டதாக அறிகிறேன்! பின்னர், பெரிய பழுவேட்டரையர் தமது இளைய ராணியை அழைத்துக்கொண்டு வந்தார். காஞ்சியிலிருந்து இளவரசரையும் வரப் பண்ணினார். இரண்டு பேரையும் என் மாளிகையில் விட்டு விட்டுப் போய்விட்டார். ஏன் போனார் என்று கேளுங்கள், அவருடைய இளையராணி இப்போது எங்கே போனார் என்று கேளுங்கள்...!''

இவ்விதம் சம்புவரையர் வெறி கொண்டவர் போல எதையெல்லாமோ பேசிக்கொண்டே போனார்.

சக்கரவர்த்தி குறுக்கிட்டு, ''போதும்! போதும்! நிறுத்துங்கள்! இதனாலேதான் நடந்துவிட்ட காரியத்தைப் பற்றி விசாரணை ஒன்றும் வேண்டாம்

என்று நான் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. ஏற்கெனவே உங்களுக்குள்ளே இருக்கும் வேற்றுமை போதாதா? புதிய பூசல்கள் வேறு வேண்டுமா? சம்புவரையரே! உங்கள் மாளிகையில் நடந்ததற்கு நீங்கள் பொறுப்பாளியல்ல. அதனாலேதான் உங்களை உடனே பாதாளச் சிறையிலிருந்து விடுவிக்கச் சொன்னேன். என் வீரப் புதல்வன் அகால மரணம் அடைந்ததற்கு என்னுடைய பழைய பாவங்கள்தான் காரணம். யார் பேரிலும் குற்றம் இல்லை. அதைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம். பெரிய பழுவேட்டரையரும் எதுவும் சொல்ல வேண்டியதில்லை!'' என்றார்.

அப்போது பெரிய பழுவேட்டரையர் சிம்ம கர்ஜனையைப் போல் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பெருங்குரலில் பேசினார்:- ''சோழர் குலக் கோமானே! கருணை கூர்ந்து மன்னிக்க வேண்டும். நான் பேசாமலிருக்கலாகாது. என் மனத்தில் உள்ளதைக் கூறியே ஆக வேண்டும். உண்மையை நான் அறிந்தபடி சொல்லியே ஆக வேண்டும். ஆம், பெருமானே! உண்மையை எதற்காகச் சொல்ல வேண்டும் என்றும், சொல்லாமலே என் பிரதிக்ஞையை நிறைவேற்றி விடலாம் என்றும் எண்ணியதுண்டு. ஒரு காலத்தில் நான் நம் வேளைக்காரப் படைக்குத் தலைவனாயிருந்தேன். சோழர் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆபத்து வருங் காலத்தில் காப்பாற்ற முடியாவிட்டால், என் தலையை நானே வெட்டிக் கொண்டு உயிர் விடுவேன் என்று பிரதிக்ஞை செய்திருந்தேன். ஆதித்த கரிகாலரைக் காப்பாற்ற என்னால் முடியவில்லை. ஆகையால் என் பிரதிக்ஞையை நிறைவேற்றியே தீர வேண்டும். அதற்கு முன்னால் எனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லிவிட விரும்புகிறேன். இல்லாவிட்டால் வீணான பலப்பல சந்தேகங்கள் ஏற்பட்டு வீண் பழிகள் சுமத்தப்பட ஏதுவாகும்!''

இவ்வாறு பெரிய பழுவேட்டரையர் கூறி நிறுத்திய போது அந்தச் சபையில் பரிபூரண மௌனம் குடி கொண்டிருந்தது. எல்லாருடைய உள்ளமும் ஒருகணம் கனிந்து உருகிவிட்டது.

சக்கரவர்த்தி தழதழத்த குரலில், ''மாமா! சற்று யோசியுங்கள்! எதற்காகத் தாங்கள் நடந்து போன காரியங்களைப் பற்றிப் பேச வேண்டும்? இறந்தவர்களின் உயிர் திரும்பி வரப் போவதில்லை. தாங்கள் மனமறிந்து சோழ குலத்துக்கு எந்தவிதத் துரோகமும் செய்திருக்க மாட்டீர்கள்! ஆகையால், நடந்து போனதை மறந்துவிட்டு இனி நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்!'' என்றார்.

''இல்லை, ஐயா! நடந்து விட்டதைப் பற்றி நான் பேசியே ஆக வேண்டும். சோழர் குலத்துக்கு நான் எவ்வளவு பெரிய துரோகம் செய்வதற்கிருந்தேன் என்று கூறியே தீர வேண்டும். தங்களுக்கும் எனக்கும் குலதெய்வமான துர்க்காதேவிதான் அவ்விதம் நேராமல் தடுத்தாள். அந்த அன்னை பரமேசுவரிக்கு என் காணிக்கையைச் செலுத்தியே தீர வேண்டும்! கருணை கூர்ந்து நான் சொல்லப் போவதைச் செவி கொடுத்துக் கேளுங்கள்!'' என்றார் பெரிய பழுவேட்டரையர். அவர் பேசுவதைத் தடை செய்ய முடியாது என்று கண்ட சக்கரவர்த்தியும் சும்மா இருந்தார்.

பின்னர், பெரிய பழுவேட்டரையர் தாம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சாலையோரத்தில் நந்தினியைச் சந்தித்து அவள் பேரில் மோகங் கொண்டது முதல் நடந்ததையெல்லாம் ஒன்றையும் மறைக்காமல் எடுத்துச் சொன்னார். தம் சகோதரர் சின்னப் பழுவேட்டரையர் அடிக்கடி எச்சரிக்கை செய்தும் தாம் பொருட்படுத்தாததைக் கூறினார். நந்தினியின்

தூண்டுதலினால் மதுராந்தகத் தேவருக்குச் சோழ சிங்காதனத்தை உரிமையாக்க எண்ணியதையும் அதற்காக மற்ற சிற்றரசர்களுடன் சேர்ந்து சதி செய்ததையும் கூறினார். நந்தினியின் மூடு பல்லக்கில் மதுராந்தகனை அழைத்துப் போனதைப் பற்றியும், சம்புவரையர் மாளிகையில் நள்ளிரவில் நடந்த கூட்டத்தைப் பற்றியும் கூறினார். முதன் முதலில், வந்தியத்தேவன் காரணமாகவே நந்தினியின் பேரில் தமக்குச் சந்தேகம் உதித்தது என்றும், அதிலிருந்து பாண்டிய நாட்டுச் சதிகாரர்களைப் பற்றி யோசனை தோன்றியது என்றும் தெரிவித்தார். ஆனாலும் அவ்வப்போது நந்தினியின் மோகமாகிய மாயை தம் அறிவை மறைத்து வந்தது என்று துயரத்தோடு எடுத்துச் சொன்னார். கடைசியாக, கொள்ளிடத்து உடைப்பு வெள்ளத்தில் சிக்கிக் கொண்டதனால் பாண்டிய நாட்டுச் சதிகாரர்களின் திட்டம் இன்னதென்று அறிந்து கொண்டதையும், விரைந்து திரும்பிக் கடம்பூர் சென்றதையும் கூறினார். வழியில் காளாமுக சைவரைப் போல் வேஷம் பூண்டதையும், இடும்பன்காரியின் உதவியினால் இரகசிய வழியில் சென்று அந்தப்புரத்தை அடைந்ததையும், யாழ்க் களஞ்சியத்தில் ஒளிந்திருந்து நந்தினிக்கும் இளவரசருக்கும் நடந்த சம்பாஷணையை ஒட்டுக் கேட்கும் ஆர்வத்தினால் ஒரு நிமிடம் தாமதித்ததையும், அதற்குள் இளவரசர் மாண்டு விழுந்ததையும் தெரிவித்தார். அவரைத் தாங்குவதற்காகத் தாம் பாய்ந்து சென்ற போது விளக்கு அணைந்ததையும், தம்மைப் பலர் சூழ்ந்து தாக்கியதையும், தாம் மூர்ச்சையுற்றதையும், பச்சை மலைக் குகையில் தமக்குப் பிரக்ஞை வந்ததையும், பின்னர் திரும்பி வந்ததையும் விவரித்தார்.

"சக்கரவர்த்தி! இவ்விதம் சோழர் குலத்துக்கு நான் பெருந்துரோகம் செய்தவனானேன். பாண்டிய நாட்டுச் சதிகாரர்களுக்கு என்னுடைய அரண்மனையிலேயே இடங்கொடுத்தேன். நம்முடைய பொக்கிஷத்திலிருந்து அவர்கள் சதிச் செயலுக்கு வேண்டிய பொருள் கொண்டு போக அனுமதித்தேன். தங்களையும், தங்கள் புதல்வர்கள் இருவரையும் ஒரே சமயத்தில் கொன்று விடுவதற்கு அந்தச் சதிகாரர்கள் திட்டமிட்டார்கள். தங்களைச் செவிடும் ஊமையுமான ஒரு தெய்வப் பெண்மணி தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினாள். பொன்னியின் செல்வரைக் கேவலம் அறிவற்ற மிருகமாகிய ஒரு யானை காப்பாற்றியது. நான் ஆதித்த கரிகாலரைக் காக்க முயன்று தோல்வியுற்றேன். அவருடைய அகால மரணத்துக்கு நானே ஆதியிலும் நடுவிலும் முடிவிலும் காரணமானேன். ஐயா! துர்க்கா பரமேசுவரியின் சந்நிதியில் நான் எடுத்துக் கொண்ட பிரதிக்ஞையை இதோ நிறைவேற்றுவேன்!" என்று கூறிவிட்டுத் தம் நீண்ட கரத்தில் பிடித்திருந்த வாளை வீசினார். அவருடைய நோக்கத்தை அறிந்து கொண்ட அனைவரும் திடுக்கிட்டுப் பிரமித்து நின்றார்கள். சிறிது சிறிதாக அவர் அருகில் நெருங்கி வந்திருந்த பொன்னியின் செல்வர் மட்டும் சட்டென்று பாய்ந்து பெரிய பழுவேட்டரையரின் வாள் ஓங்கிய கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டார்.

"ஐயா! பொறுங்கள்! வழிவழியாகச் சோழர் குலத்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின் போது பழுவேட்டரையர்கள்தான் கிரீடத்தை எடுத்துத் தலையில் வைப்பது வழக்கம். என் பட்டாபிஷேகத்தின் போதும் தங்கள் ஆகி வந்த கரத்தினால்தான் முடிசூட்ட வேண்டும். அதற்குப் பிறகு தாங்கள் விருப்பம் போல் செய்து கொள்ளலாம். அதுவரையில் பொறுத்திருங்கள்!" என்றார்.

இந்த வார்த்தைகள் சக்கரவர்த்தியையும் குறுநில மன்னர்களையும் வியப்புக் கடலில் ஆழ்த்தின என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?

(தொடரும்)

மரம் நடுவதன் பலன்

பலவிதமான மரங்களை நிழல் இல்லாத இடங்களில் உண்டாக்கி வளர்த்து, வழிப்போக்கர்களுக்கு நிழலுண்டாக்கியவன் தன் வம்சத்தில் இறந்தவர்களையும், இனி பிறப்பவர்களையும் பாவிகளாக இருந்தாலும் தூய்மைப்படுத்தப் பிதுரர்களுக்குப் ப்ரீதி உண்டாக்குபவனுவான். ஒருவன் இறந்த பிறகு அவனது புத்திரர் அவனைச் சாந்தியடையும்படி பலவித கிரியைகளைச் செய்வதுபோல் ஒருவன் வளர்த்த மரங்களும் அவனை சாந்தியடையச் செய்விக்கும். மரங்கள் மலர்களினுல் தேவகணங்களையும் பழங்களினுல் பிதுர்த் தேவர்களையும் நிழலினுல் அதிதிகளையும் பூஜிக்கின்றன. மலர், பழம் முதலியவற்றுடன் கூடி நின்று பூவுலகத்தில் இருப்பவர்களையும் திருப்தி செய்விக்கின்றன. கின்னரர், உரகர், இராக்ஷஸர், தேவர், கந்தருவர், ரிஷிகணங்கள் முதலிய யாவரும் விருக்ஷங்களை விரும்புகிறுர்கள். இகத்திலும் பரத்திலும் இம்மரங்கள் தம்மை வளர்த்தவனுக்குப் புத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றன. நீர்த்துறைகளை உண்டாக்குபவர்களும், மரங்களை நட்டு வளர்ப்பவர் களும் யாகங்களைச் செய்த வேதியர்களும் சத்தியவான்களும் ஒரு காலத்திலும் ஸ்வர்க்க லோகத்தை விட்டு நீங்க மாட்டார்கள்.

(சிவ மஹா புராணம்)

வோட்டுப் போட மாட்டோம்!



திருச்சி உப்பிலியபுரம் (ரிசர்வ்) சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாலகிருஷ்ணம்பட்டி கிராமவாசிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைப் புறக்கணிப்பு செய்யப் போவதாக அறிவித்து ஒட்டியுள்ள போஸ்டர்கள் துறையூர் பஸ் ஸ்டாண்டிலேயே நம்மை வரவேற்கின்றன.

தங்கள் கிராமத்துக்கு அடிப்படை வசதிகள் கேட்டுப் பலமுறை மனு கொடுத்துப் போராடிப் பார்த்தும் இதுவரை கிடைக்காமல் போனதால் அரசியல் கட்சி வேறுபாடின்றி, சாதி பாகுபாடின்றி அனைவரும் ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள், 'தேர்தல் புறக்கணிப்பு' செய்வோம் என்று.

பாலகிருஷ்ணம்பட்டி கிராமத் தலைவராக இருக்கும் தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த பி. காளிமுத்து சொல்கிறார்: "இந்த ஊர்ல ஒரு சின்ன ஆஸ்பத்திரிகூட இல்லீங்க. அவசர ஆத்திரத்துக்கு சீக்காளியை அனைச்சிட்டுப் போனா பாதி வழியில உயிர் போயிடுதுங்க. இப்ப சொல்லுங்க. நாங்க எப்பிடிங்க.. எதுக்காவங்க... வோட்டுப் போடணும்?"

பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி மன்றத் துணைத்தலைவராக இருப்பவர் தி.மு.க.வைச் சார்ந்த ம. பாரதிதாசன், மனம் திறந்து பேசுகிறார். "அய்யாத்துல தண்ணி கொல்லி மலையிலேர்ந்து கரைபுரண்டு ஓடி வருங்க. காடுகரை வேலைக்கு ஆத்தைத் தாண்டி போற ஆம்பளைங்களும் சரி, பொம்பளைங்களும் சரி, நீச்சலடிச்சித்தாங்க அடுத்த கரைக்குப் போவணும். ஒவ்வொரு வருசமும் ஒரு பத்துப் பேராவது நீந்திப் போவும்போது பலியாய்ட்டு இருக்காங்க. இதுக்காக நாங்க மாராடி ரோட்டுக்கு இணைப்பா ஆத்துல ஒரு பெரிய பாலமும், விசுவாம்பாள் சமுத்திர ரோட்டுக்கு இணைப்பா ஆத்துல ஒரு சின்ன பாலமும், கட்டித் தரச் சொல்லி மனு கொடுத்து ஓய்ஞ்சி போய்ட்டோம்ங்க. இதுல வயித்தெரிச்சல் என்னான்னா.. பி. மேட்டூர்ல வசிக்கிற மைனர் தியாகராஜன் (எங்க கட்சிக்காரர்தாங்க!) தி.மு.க ஒன்றியச் செயலாளர் மட்டுமில்லே.. மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராவும் இருக்காருங்க. பெரிய மிராஸ்தாரங்க அவுரு. கொல்லிமலை அடிவாரத்துல நெலமெல்லாம் இருக்கு. மாவட்ட ஊராட்சி மன்ற நிர்வாகத்துல அவுரு இருக்கறதால, பாலகிருஷ்ணம்பட்டி அய்யாத்துல பாலம் கட்டுறதா திட்டம் போட்டு தன்னோட அதிகாரத்த தவறாப் பயன்படுத்தி அவுரோட சொந்த விவசாய நெலமுள்ள பகுதியில ரோடு வசதிக்காக இதே அய்யாத்துல பொது ஜனங்களுக்குப் பயன்படாத மூணு எடத்துல பாலம் கட்டிக்கிட்டாங்க. மாவட்ட நிர்வாகத்துல கேட்டா 'அதான் உங்க ஊருக்கு மூணு பாலம் கட்டியாச்சேன்னு' சொல்றாங்க. இந்த அநியாயத்தை எங்குனை போயி சொல்றது?" என்கிறார் ஆதங்கத்துடன்.



• காளிமுத்து




• பாரதிதாசன்

கட்டுரை, படங்கள்: ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு







"என்னங்க?" முதலாளிகிட்டே கேட்டீங்களா?" என்றாள் சாந்தி ஆவலாக.

"உம்... 'மூணு மாசமாவது போயிட்டு வா'னு சொல்லிட்டாங்க."

ரவி, பாண்ட்டைக் கழற்றிவிட்டு வேட்டிக்கு மாறினான்.

"வினு எங்கே?"

"பக்கத்து வீட்டுல விளையாடறான்."

சாந்தி காப்பி கலக்க உள்ளே போக ரவி, நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

மூடிய கண்களிலும் வினுவின் முகம்தான் தெரிந்தது.

'சாந்தியாவது பரவாயில்லை. அட்ஜெஸ்ட் செய்து கொள்வாள். வினுதான் பாவம். ரொம்ப

ஒரு அப்பா, ஒரு மகன், ஒரு டாரிசு!

தவிச்சுப் போயிடுவான். அவன் பிறந்ததிலிருந்து ஒரு முறை கூட இவ்வளவு நாள் அவனை விட்டுப் பிரிந்ததில்லை.

ரவியின் அலுவலகத்தில் புதுசாக கம்ப்யூட்டர் வாங்கியிருந்தார்கள். அதற்கு ட்ரெயினிங் எடுத்துக் கொள்ள பெங்களூர் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க ரவியைத் தேர்ந்தெடுத்து விட்டார் மானேஜர்.

முதலில் டிரான்ஸ்ஃபர் என்றார்.

"சார்... என் வொய்ஃபுக்கு அடிக்கடி வீசிங் வந்துடும். பையனுக்கு இரண்டரை வயசுதான் ஆகுது. ஃபேமிலிய விட்டுட்டு..." என்று அழாத குறையாக கேட்கவும், 'சரி, மூணு மாசமாவது இருந்துட்டு வா' என்று சொல்லி விட்டார்கள்.

முகம் அலம்பி, காப்பி குடித்து முடிக்கவும்,


அனுராதா சேகர்

வினு ஓடி வந்தான். எலெக்ட்ரிக் ட்ரெயின் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது போல, வரும் போதே ஒரே தட... தட... கையில் சின்னதாய் மைலோ கிரிக்கெட் மட்டை. சட்டையில் பித்தான் கழன்றிருக்க, வெள்ளையாய் வெண்ணெய்த் தொப்பைத் தெரிந்தது. தலையெல்லாம் மண். முட்டியில் புது சிறல். மேட்ச் விளையாடிய விழுப்புண்!

"அப்பா" புயல் போல பாய்ந்து வந்து, ரவியின் கால்களைக் கட்டிக் கொண்டான்.

"ஏண்டா, அழுக்கு மூட்டை தடியா! இதென்னடா இவ்ளோ மண்?" சாந்தி திட்டிக் கொண்டே அவன் தலையைத் தட்ட, வினு அப்பாவுடன் பபிள்கம் போல ஒட்டிக் கொண்டான்.

"சரி... கடைக்குப் போயிட்டு வந்துடறோம். ஏதாவது வாங்கணுமா?"

"அப்பா, கோயிலுக்குப் போய் யானையைப் பார்க்கலாம்பா."

"போலாண்டா கண்ணா" வினுவின் தலையைக் கைகளாலேயே சீவி விட்டான்.

"அவனை இறக்குங்க... வேறே சட்டைய போட்டுக்கட்டும்."

வினுவே உள்ளே ஓடிப் போய், புது டிரஸ் கொண்டு வந்து நீட்ட, சாந்தி முறைத்தாள்.

"இது ஒண்ணுதான் உருப்படியா இருக்கு... இதையும் மண்ணுல புரட்டு."

சட்டையை மாட்டி, தலை சீவி, ஷூ போட்டு விட்டான் ரவி.

"தூக்கி, கண்ணாடிலே காட்டுப்பா."

"அழகு சொட்டறது போடா" சாந்தி சிடுசிடுத்தாள்.

'அவளுக்குக் கோபம் வினு மீது இல்லை. மூக்கால் அழுது, மானேஜர் கையைக் காலை பிடிச்சு, டிரான்ஸ்ஃபர் மாத்தாமல் புருஷன் வந்து நிற்கிறான். விலைவாசி இருக்கிற நிலையிலே இரண்டு குடும்பம், பெங்களூரிலும், சென்னையிலுமாய்க் காலந்தள்ள முடியுமா...?' என்று உள்ளே ஓடிக் கொண்டிருந்த எரிச்சல்தான் சிடுசிடுப்புக்குக் காரணம் என்பது ரவிக்குத் தெரியாமல் இல்லை.

"சரி, காய்கறி, பூ... வேறே ஏதாவது வேணுமா?"

"காப்பி பவுடர், சபீனா."

"சரி."

"சிக்கரி மிக்ஸ் பண்ணச் சொல்லுங்க."

"அம்மா, யானை பார்க்க நீயும் வர்றியாம்மா?"

"யானையும் வேணாம், பானையும் வேணாம். போடா!"

> **''தலைவர் புதிய பொருளாதாரக் கொள்கையைச் சரியா புரிஞ்சுக்கலைன்னு நினைக்கிறேன்...''**
>
> **''எப்படிச் சொல்றே?''**
>
> **''வாக்குச் சாவடிகளைத் தனியார் மயமாக்கணும்னு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்திருக்கிறார்!''**
>
> **– வந்தவாசி பா. ஜெயக்குமார்**

"அப்பா, தூக்கிக்கோ."

'கொஞ்ச தூரம் நட வினு' என்று எப்போதும் சொல்லும் ரவி, இன்றைக்கு வினுவைத் தூக்கி இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

'பாவம்... இரண்டொரு நாளில் பிரிய வேண்டும்' – மனம் ஈரத்துணியாய்க் கனத்தது.

"அப்பா, கோயில்ல யானை இருக்குமா?"

"ஓ..."

"அது பேரு கேசவன்தானே?"

"ஆமாம்."

போன தடவை யானைப்பாகன்கிட்டே கேட்டுப் பெயரைத் தெரிந்து வைத்திருந்தான்.

"கேசவனுக்கு வாழைப்பழம் தரட்டுமா?"

"ஓ.கே."

"அப்படியே, தோலை உரிக்காம படக்குன்னு முழுங்கிடுதே. தொப்பை வலிக்காதா?"

"யானை பெரிசு இல்லியா? அதனால வலிக்காது."

அதென்னவோ, யானை என்றால் அவனுக்கு தனி ஆர்வமிருந்தது.

டிஸ்கவரி சேனலில் யானையைப் பார்த்து விட்டால், டீவிக்குள்ளேயே புகுந்து விடுபவன் போல பரபரப்பான்.

"அப்பா... யானை பாருப்பா... குட்டி யானைக்கு ஷவர்லே குளிப்பாட்டுதுப்பா... அது கூட என்னை மாதிரி டர்ட்டி இல்லப்பா. மண்ணைப் போட்டுக்குது பார்" என்று கமெண்ட் அடிப்பான்.

பிள்ளையார் பார்த்தாலும் தனி மரியாதை!

'ஆனை உம்மாச்சி' என்று கோணல் மாணலாய்த் தோப்புக்கரணம் போடுவான்.

கோயிலில் அதிகக் கூட்டமில்லை. செருப்பு விட்டதுமே, ரவியிடமிருந்து வழுக்கிக் கொண்டு இறங்கி உள்ளே ஓடினான் வினு.

நல்லவேளை... யானை இருந்தது. பெரிய

நாமம் சாத்திய கேசவன். பெரிய சைஸ் புல்லுக்கட்டு ஒன்றை, விசிறி அடித்தபடியே விழுங்கிக் கொண்டிருந்தது. இலேசான ஆட்டத்துக்கு ஏற்ப, கழுத்து மணி 'கிணுகிணு' என்றது.

"அப்பா, கேசவனைச் சங்கிலியால் கட்டியிருக்காங்களே... வலிக்காதா?"

"வலிக்காது."

"இல்லப்பா, வலிக்கும்."

"............"

"காதை ஏன் ஆட்டிக்கிட்டே இருக்கு?"

"சரி வா... கண்ணா. சாமி கும்பிடலாம்."

"அப்பா, நீ துளசி கொண்டு வா. நா இங்கேயே இருக்கேன்."

"பார்த்தது போதும் வினு. இன்னொரு நாள் வரலாம்."

வலுக்கட்டாயமாக அவனைத் துக்கிக் கொண்டான்.

"பை... கேசவா" யானையை நோக்கி முத்தத்தைப் பறக்க விட்டான் வினு.

இரவு சாப்பாடு முடிந்ததும் வினு மறுபடி ஆரம்பித்தான்.

"அப்பா எனக்கு யானை பொம்மை வாங்கித் தாப்பா."

"ஏண்டா... ஏற்கெனவே ஒண்ணு இருக்கே."

"போம்மா... அது நல்லாவே இல்ல... எனக்கு அசல் யானை மாதிரி பொம்மை வேணும்."

வினு நச்சுப் பிடிக்கிறானே என்று கொலுவுக்கு வைக்கிற மாதிரி யானை பொம்மை ஒன்றை போன வாரம்தான் வாங்கித் தந்தாள் சாந்தி.

ஆனால் அதை அவன் முதல் பார்வையிலேயே ரிஜெக்ட் செய்து விட்டான்.

"அய்யய்யே! யானை இப்படியா வெள்ளையா இருக்கும். கால் எல்லாம் சிவப்பா இருக்கு. எனக்கு வேண்டாம். நெஜோ யானை மாதிரி ஒரு பொம்மை வேணும்" என்று சொல்லி விட்டான்.

"அப்பா... நாளைக்குக் காலைலே வாங்கலாமா?"

"சரி... இப்ப சமர்த்தா தூங்குவியாம்."

வினுவுக்குக் கழுத்து வரை போர்த்தி விட்டு, கால்களைப் பிடித்து விட்டான் ரவி.

ஒரே ஒரு நிமிஷம் கண்ணை மூடிக் கொண்டவன், மறுபடி கண்ணைத் திறந்து,

"அப்பா, யானைக்குட்டி எப்படியிருக்கும்?" என்றான்.

"உம்... உங்கம்மா மாதிரி" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, சாந்தியின் இடுப்பைக் கிள்ளினான் ரவி.

ரவிக்கு பெங்களூர் பிடித்திருந்தது. வேலை கூட சிரமமில்லை. ஆனால் வினுவின் ஞாபகம்தான் அரித்தெடுத்தது. மூன்று மாதம் லீவு கூட எடுக்க முடியாமல், ஊருக்குப் போக முடியாமல் ட்ரெயினிங் டைட்டாக இருந்தது. எப்போதாவது எதிர் வீட்டு போனில் சாந்தியுடன் பேசுவான். இரவு பத்து மணிக்கு மேலே குவார்டர் சார்ஜில் பேசுவதால், பெரும்பாலும் வினு தூங்கி விட்டிருப்பான்.

பாவம், குழந்தை! சாந்திக்குக் கற்பனை போதாது. அவன் சரமாரியாய்க் கேட்கும் கேள்விகளுக்கு, ரசனையாய்ப் பதில் தர மாட்டாள்.

"போடா! நச்சு நச்சுன்னு" என்று தள்ளி விடுவாள். கோயிலுக்குக் கூட்டிப் போவாள். ஆனால் யானையிடம் கூட்டிப் போய் வேடிக்கைப் பார்க்க விடமாட்டாள். முகப்பில் இருந்த யானை சிற்பத்தில், சறுக்கு விளையாட்டு ஆட அனுமதிக்க மாட்டாள்.

"டிராயர் கிழிஞ்சுடும்டா" என்பாள். வினுவுக்கு முகம் தொங்கிப் போயிடும்.

வினுவின் ஞாபகத்திலேயே நாட்களைக் கரைத்துக் கொண்டிருந்தான் ரவி.

ரவி சென்னைக்குத் திரும்பும் நாள். காந்தி பஜார், ஜெயநகர் காம்ப்ளெக்ஸ் என்று தேடி... தேடி... வினு கேட்ட மாதிரியே பெரிய யானை பொம்மை கிடைத்து விட்டது.

ஃபாரின் ஃபைபர் துணியில் தைக்கப் பட்டிருந்தது அந்த பொம்மை. கரும்சாம்பல் நிறம். பெரிய தும்பிக்கை. சின்ன வால்; ஆட்டினால் அசைந்தது. விரல்களும், கழுத்து மடிப்பும் தத்ரூபம். நாமம் மட்டும் போட்டுவிட்டால், அப்படியே கேசவன் யானையேதான்!

ரவிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

விலை ஐந்நூறு ரூபாய்... ரொம்ப



''இந்தப் படம் பூரா ஓடுற பஸ்லேயே எடுத்திருக்காங்களே... ஏன்?''
'''கதை நகரவே மாட்டேங்குது'ன்னு யாரும் சொல்லக் கூடாதாம்...''
- தஞ்சை தாமு

அதிகம்தான். ஆனால் வினுவின் முகம் காட்டப் போகும் மலர்ச்சிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தரலாம் என்று முடிவு செய்து விட்டான்.

"ஹைய்யா! கேசவனாப்பா? சூப்பர்!" என்று குரங்கு போல குதிப்பான்.

"யூ ஸிகோ" என்று கத்திக் கொண்டே யானை மீது விழுந்து ஒரு குத்து விட்டு, டபிள்யூ. டபிள்யூ. எஃப் ஃபைட் பண்ணி... துவம்சம்தான்! ரவியின் கற்பனை விரிந்து கொண்டே போனது.

சரியாக ஐந்து மணிக்கெல்லாம் பஸ் பாரிமுனை வந்து விட்டது.

ரவி வீட்டுக்கு வந்த போது வினு தூங்கிக் கொண்டிருந்தான்.

சாந்தி குளித்துவிட்டு பளிச்சென்று இருந்தாள்.

காய்கறி, சந்தன ஊதுபத்தி, நைட்டி என ஏதேதோ வாங்கியிருந்தான். அதுக்கெல்லாம் பேசாமலிருந்தவள், யானை பொம்மையைப் பார்த்ததும் சலித்துக் கொண்டாள்.

"அவன் கேட்டான்னு இவ்ளோ பணம் போட்டு வாங்கியிருக்கீங்களே. அரை மூட்டை அரிசி வாங்கியிருக்கலாம்..."


"போனா போகுது விடு. குழந்தை ஆசையா கேட்டான்."

"எப்படியோ போங்க!"

வினு தூங்கிக் கொண்டிருந்த கட்டில் மீது ஏறி, குழந்தையை அணைத்துக் கொடுத்துப் படுத்தான் ரவி. பூ போன்ற கன்னத்தில் மிருதுவாக முத்தமிட்டான்.

இரவெல்லாம் பஸ் பிரயாணம், சரியான தூக்கமில்லை. அப்படியே தானும் தூங்கி விட்டான் ரவி.

ஜன்னலில் மஞ்சளாய் வெளிச்சம் சுள்ளென்று பட்டதும்தான் விழிப்பே வந்தது.



ரவி எழுந்து, பீரோ மீது ஒளித்து வைத்திருந்த யானை பொம்மையைத் தூக்கிக் கொண்டு மெள்ள அடி மேல் அடி வைத்து சமையலறைக்குப் போனான்.

"வினுக்குட்டி!"

"அப்பா!" ஓடி வந்து தழுவிக் கொண்டான்.

"இங்க பாரு.... அப்பா, வினுக்குட்டிக்கு என்ன கொண்டு வந்திருக்கேன்."

முதுகுக்குப் பின்னால் மறைத்துப் பிடித்திருந்த யானை பொம்மையைத் தலைக்கு மேலே கரகம் போல வைத்துக் கொண்டான்.

"டண்... டடாங்க்.... டன்... டடாங்க்" விளம்பரப் பாணியில் செய்து, யானையை வினுவுக்குக் காட்டியபோது...

"உய்.... ய்....ய்..." என்று பெரும் இரைச்சலோடு விமானம் ஒன்று பறந்து சென்றது.

வினுவின் கவனம் சட்டென்று விலகி...

"அப்பா... பிளேன்பா... உய்...ய்" என்று கையை விமானம் பறப்பது போல ஆக்ஷன் செய்து கொண்டே, தெருவுக்கு ஓடினான்.

"டேய்... வினு... தோ பார்றா. யானை... கேசவன்டா. உனக்குப் பிடிக்குமே. சூப்பர் யானை... எலிஃபென்ட்..."

ரவியின் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் உற்சாகங்கள் எதுவும் வினுவைப் பாதிக்கவேயில்லை.

வாசலுக்கு ஓடின வினுவின் பின்னாலேயே ரவி போனான்.

"அப்பா... இது ஜெட் பிளேன்பா. பாத்தியா? அமெரிக்கா போகுது."

"அப்பா... ராத்திரி லைட்டெல்லாம் போட்டுக்கிட்டு போகும்பா...."

"சரி, பிளேன் இருக்கட்டும். இதே பார்... யானை."

"போப்பா... யானை சுத்த போர்... ப்ளேன்தாம்பா ஜாலி... எப்படிப்பா விழாம போகுது?"

"..............................."

"அப்பா.. எனக்கு ப்ளேன் பொம்மை வாங்கித் தாப்பா. ப்ளீஸ்." ○

‘தேன் கூடு’ பகுதிக்கு பேசாமல் ‘தேன் வீடு’ என பெயர் வைத்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அவ்வளவு வரவேற்பு. புதிய எழுத்தாளர்கள் கொம்பு சீவிக் கொண்டு களத்தில் குதித்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. சளைக்காமல் எழுதிக் குவியுங்க.

மண்ணும், மழையும்!

மழை பெய்யும்போது ‘கம்’மென்று வரும் மண்வாசனைக்குக் காரணம் ‘ஆக்டினோமைசிட்டிஸ்’ எனப்படும் நுண்ணுயிர்கள் ஆகும். மழை நீர் மண்ணில் விழுந்தவுடன் மண்ணில் காணப்படும் இந்த நுண்ணுயிர்கள் மழை நீருடன் உயிர் வினையில் ஈடுபடுவதால் ஏற்படுவதே மண் வாசனை. இன்னொரு சுவாரசியமான விஷயம், பெரும்பாலான ஆன்ட்டிபையாடிக்குகளை உருவாக்குபவையும் இந்த ஆக்ட்டினோமைசிட்டிஸ் தான்.



அப்ப, மண்வாசனைக்கு இவர் காரணமில்லையா?



சரக்குப் பூச்சி!



அரக்கு என்று நம்மால் ‘சீல்’ வைப்பதற்கும் தங்க நகைகளின் உட்புறம் அடைப்பதற்கும் பயன்படும் பொருள் உண்மையில் ‘லாக் இன்செக்ட்’ எனப்படும் ஒருவகைப் பூச்சியின் உடலில் சுரக்கும் திரவமே. இந்தப் பூச்சிகளை வளர்த்து அவற்றின் உடலிலிருந்து வெளிப்படும் இந்த அரக்கை பிரிப்பது குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது. இந்தப் பூச்சி வளர்ப்பிற்கு ‘லாக் கல்சர்’ என்று பெயர். தரத்திற்கு ஏற்ப சிவப்பு மற்றும் கறுப்பு வண்ணங்களில் அரக்கு கிடைக்கிறது.

- மு. வித்யா, தண்டராம்பட்டு

கமலுக்கு வாத்தியார்!

"சோழர் காலத்தில்தான் சண்டைக் கலைகள் விரிவடைந்தன" என்கிறார் மஞ்சா ஸ்டைல் மாஸ்டர் இராஜேந்திரன். 'இந்தியன்' படத்துக்காக கமல்ஹாசனுக்கு வர்மக் கலையைக் கற்றுத் தந்தவர் இவர்.

வர்மக் குத்து நாட்டுக் குத்து, ஆளடி வரிசை, பிடி வரிசை அடி வரிசையென பல சண்டைக் கலைப் பிரிவுகளை மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் மாணவர்களுக்கு மாதம் ஒரு தடவை இலவசமாகக் கற்றுத் தருகிறார். தமிழகத்தில், மன்னர் காலத்தில் இந்தச் சண்டைக் கலைகள் விருத்தியாகாமல் அருகிப் போன சமயத்தில், அண்டை மாநிலமான கேரளாவின் திருவாங்கூர் சமஸ்தானம் இக்கலைகளை விரும்பி கற்கச்செய்து, அதை 'களரி பையட்' ஆக்கிவிட்டதாம்.

- இரா. கல்யாண சுந்தரம்.



பால் கோவா

பால், பிளாஸ்டிக் பைகளில் விநியோகமாகிறது. பாலை எடுத்துக் கொண்டு பையைத் தூக்கி எறிந்து விடுவதால் சுற்றுப்புறச் சூழலுக்கு பங்கம் ஏற்படுகிறது. இதற்கு முடிவு கட்ட கோவாவில் புதிய முறையை அமுல் படுத்தியுள்ளனர். 100 காலி பிளாஸ்டிக் பால் கவர்களைக் கொண்டு வருபவர்களுக்கு ½ லிட்டர் பால் இலவசம்! இந்த முறையில் பால் பெற பால் பூத்துகளில் பலர் க்யூவில் நிற்பதைக் காணலாம். இந்த காலி பால் பாக்கெட்டுகளை பிளாஸ்டிக் பொருட்கள் தயார் செய்பவர்களுக்கு விற்று விடுகிறார்கள்.



- மஞ்சுதேவன், ஸ்ரீராம்பூர்



இத்தனை கணபதியா?

காரைக்குடி நகர் சிவன் கோவில் கிழக்குக் கரையில் அஷ்ட கணபதி, சாம்ராஜ்ய கணபதி, விஜயகணபதி மற்றும் வலம்புரி விநாயகர் உட்பட 108 விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

- பா. குணா

விளையாட்டுக்குக் கும்பிடு!

காலில் அடிபட்டதால் ஒருவர் அரசியலில் குதித்திருக்கிறார் என்றால் நம்புவீர்களா..?

ஜோதிர்மயி சிக்தர். மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீராங்கனை. ஆசிய தடகளப் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றவர்.



இப்போது அரசியலில் குதித்திருக்கிறார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சட்டசபைத் தேர்தலில், இவர் போட்டியிடப் போகிறார். தொகுதிகூட தயார்! நதியா மாவட்டத்தில் ரானாகாட் தொகுதி.

மிகவும் ஏழை குடும்பத்திலிருந்து வந்தவர் ஜோதிர்மயி... அப்பா பள்ளிக்கூட ஆசிரியர். கூடப் பிறந்தவர்கள் ஏழு பேர். இரண்டு வேளை சாப்பாடு என்பதே ரொம்ப அரிய விஷயம்.

"விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டால், பரிசுகள் தருவார்கள்; அதைவிட விசேஷம், உணவுப் பொட்டலம் கிடைக்கும். இதுவே நான் விளையாட்டு வீராங்கனையாக உருவாவதற்கு அடித்தளமிட்டது'' என்கிறார்.

2000 ஆண்டு சிட்னி ஒலிம்பிக்ஸில் கலந்துகொண்டு, தங்கம் வெல்வது என்பது ஜோதிர்மயியின் லட்சியம். ஜோதியின் பயிற்சியாளர், அவரது கணவர் அவதார் சிங்தான். அவரும் ஓர் அதலெட் என்றாலும் தம்மை விட ஜோதிர்மயி திறமைசாலி என்பதால், தமது தடகள வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட்டு, தம் மனைவியை ஒலிம்பிக்ஸுக்கு அனுப்பத் தீவிர பயிற்சியளிக்கத் துவங்கினார்.

ஒருநாள், பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது, ஜோதிக்குக் காலில் அடிபட்டது. துரதிருஷ்டவசமாக படுத்த படுக்கையானார். இனி அவரால் ஓட முடியாது. கலங்கி நின்ற அவரை கணவர்தான் சமாதானப்படுத்தினார். அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. மார்க்சிஸ்ட் கட்சியில் சேர்ந்து விட்டார். "இன்று விளையாட்டுக்கு அரசாங்கம் உரிய முக்கியத்துவம் தருவதில்லை; விளையாட்டுத் துறையின் சார்பில், சட்டமன்றத்தில் இனி குரல் கொடுப்பேன்'' என்கிறார் ஜோதிர்மயி!

— மானஸா

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்



குவிஸ் போட்டி – 25

இந்த வார 'க்விஸ்' விமானங்களைப் பற்றியது. சிந்தித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். அடுத்த வாரத்தோடு போட்டி முடிந்து விடும். எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா–சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன் – 25

1) 'ஏர் இந்தியா'வின் பிரபல சின்னம் யார்?
2) தனது முதல் போயிங் விமானத்தை (போயிங்–707) ஏர் இந்தியா நிறுவனம் வாங்கி இயக்கத் தொடங்கியது எந்த வருடத்தில்?
3) ஏர் இந்தியாவின் முதல் சர்வதேசப் பயணம் 8.6.1948 அன்று தொடங்கியது. மும்பையிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் எந்த நகரத்துக்குச் சென்றது?
4) அந்த மும்பை விமான நிலையத்தின் அப்போதைய பெயர் சான்டா க்ரூஸ் விமான நிலையம். அதன் இப்போதைய பெயர் என்ன?
5) ஏர் இந்தியா நிறுவனத்தின் முதல் தலைவர் (சேர்மேன்) யார்?
6) இந்த ஆண்டு மார்ச் நான்காம் தேதியிலிருந்து வாரத்திற்கு ஏழு கூடுதல் ஃப்ளைட்களை விடத் தொடங்கியிருக்கிறது ஏர் இந்தியா. எந்தப் பகுதிக்கு?

விடைகள்:

1)..
2)..
3)..
4)..
5)..
6)..



"மாஃபியா கூட்டத்தை மீண்டும் அனுமதிப்பதா...?"

– பிரசார பீரங்கி ப. சிதம்பரம்

"ஜெயலலிதா ஆட்சி மீண்டும் தமிழ்நாட்டில் வர அனுமதிக்கக் கூடாது என்று நான் சொல்வதற்கு அந்த ஆட்சியில் நடந்த ஊழல் மட்டும் காரணமல்ல; அந்த ஊழலுடன் கைகோத்து வந்த ஆணவம், அகந்தை, அராஜகம், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவையும் முக்கியக் காரணங்கள். இந்தப் புத்தாயிரம் வருடத்தில், இருபதாம் நூற்றாண்டுக் களங்கத்தை மீண்டும் அரங்கேற அனுமதிக்கக் கூடாது" – ப.சிதம்பரத்தின் கொஞ்சு தமிழ், கூட்டத்தினரின் மனத்தில் பசுமரத்தாணியாய்ப் பதிகிறது!

ப. சிதம்பரத்தின் முதல் பிரசாரக் கூட்டம் நடந்த இடம் அம்பத்தூர் பஸ் நிலையம். ஐந்து மணி கூட்டத்துக்கு, 'டாண்' என்று நாலு ஐம்பதுக்கே மேடையில் இருந்தார் சிதம்பரம்.

"கூட்டம் எப்படி என்று செல்ஃபோனில் கேட்டு, தாமதமாக வரும் தலைவரல்ல இவர். போட்டிருக்கிற நேரத்துக்குப் போயாக வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பவர்" என்றார் ப. சிதம்பரத்தின் அமைப்பாளர் ரங்கநாதன். மேடையில் அமர்ந்ததும் எங்கிருந்துதான் அந்தக் கூட்டம் வந்ததோ தெரியவில்லை.

மேடையின் எதிரே மாலை சூரியன் கள்ளென்று அடிக்க "எனக்கு சின்னத்தை நினைவு படுத்துவதற்காக சூரியனுக்கு எதிராக மேடை போட்டிருக்கிறார்கள் போலும்" என்று வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளரான நடிகர் நெப்போலியனுக்காக வாக்கு கேட்டார் ப. சிதம்பரம்.

தமிழகம் முழுக்க சுமார் நூறு கூட்டங்கள். 19 நாட்கள் இடைவிடாத பிரசாரம். எல்லா பகுதிகளிலும் சிதம்பரம் கூட்டத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யச் சொல்லி அறிவாலயத்திலிருந்து உத்தரவுகள் பிறந்துவிட்டன.

"இந்தத் தேர்தலில் எங்கள் சபையில் இரண்டு நட்சத்திரப் பேச்சாளர்கள்தான். ஒருவர் கலைஞர். தெற்கு நோக்கி அவர் தமது பயணத்தைத் துவங்கியிருக்கிறார். மற்றொருவர் சிதம்பரம். வடக்கு நோக்கி இவர் பயணம் துவங்கியிருக்கிறது. எந்த இயக்கத்தையும் சாராத இருபது சதவிகித நடுநிலை மக்களின் வோட்டை சிதம்பரத்தின் பேச்சு தரப்போவது உறுதி" என்று உற்சாகத்துடன் சொன்னார் அம்பத்தூர் கழகத் தொண்டரான ராமகிருஷ்ணன்.

ஆவடி நோக்கி விரைந்தது ப.சிதம்பரத்தின் கான்வாய். அங்கேயும் பஸ் நிலையம் அருகேதான் கூட்டம்.

''நான் சொல்வதைக் கவனமாகக் கேட்கணும்'' என்று துவங்குகிறார் ப.சிதம்பரம். ''கலைஞர் ஐந்து வருட காலம் நல்லாட்சி கொடுத்திருக்கிறார். டைடல் பார்க், கார் தொழிற்சாலைகள், எண்ணூர் துறைமுகம், குளச்சல் துறைமுகம், மற்றும் இந்தியாவுக்கே வழிகாட்டும் நாங்குநேரி தொழிற் பூங்கா. இந்தியாவில் மூன்று மாநிலங்கள்தான் வளர்ச்சியில் போட்டியிடுகின்றன. மகாராஷ்ட்ரம், குஜராத் மற்றும் தமிழ்நாடுதான். ஒவ்வொரு மாதமும், இந்த மூன்று மாநிலங்களுக்குள் ஒன்றுதான் வளர்ச்சியில் முன்னணியில் இருக்கிறது. ஜெயலலிதா அவரது ஆட்சியில் நடந்த எந்த சாதனைகளைச் சொல்வார்? நூற்றுக் கணக்கில் வாங்கிய செருப்புகளைச் சொல்வாரா? பட்டுப் புடைவைகளைச் சொல்வாரா? மகாபலிபுரம் வரை மைல் கல்லுக்கு ஒரு பங்களா வாங்கியதைச் சொல்வாரா? இன்றைய இளைஞர்களை யாரும் ஏமாற்ற முடியாது. மாஃபியா கூட்டத்தை மீண்டும் அனுமதிக்கக் கூடாது'' என்று முழங்கினார் ப.சிதம்பரம். கூட்டம் சிந்தாமலும், சிணுங்காமலும் அவரது பேச்சைக் கேட்டது.

''தி.மு.க ஆட்சியில் குறைகளே இல்லை என்று சொல்ல மாட்டேன். ஆனால், அது போன்ற குறைகளைக் கலைஞரிடம் எடுத்துச் சொல்லி சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது'' என்றார் சிதம்பரம்.

"நம்முடையது அணி; ஆனால் அவர்கள் அமைத்திருப்பது பிணி'' என்று சிதம்பரம் சொன்னவுடன்...

''அ.இ.அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைப் படித்தேன். முதல் வரியிலேயே '1991-96ல் நடத்தியது போன்று லஞ்ச லாவண்யமற்ற அரசை நடத்திக் காட்டுவோம்' என்று போட்டிருக்கிறார்கள்'' என்று சிதம்பரம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே கூட்டத்தில் அலை, அலையாகச் சிரிப்பு.

ஆவடி ராணுவத் தளவாட தொழிற்சாலையில் வேலை பார்க்கும் நவநீதன், ''ஸார்... தி.மு.க போட்டுக் கொடுக்கும் மேடைகளில் இதே போன்று இரண்டு,





மூன்று மாதம் சிதம்பரம் பேசினாரென்றால், கழக இளைஞர் அணியில் பாதி, அவர் பின்னால் போகும் வாய்ப்பிருக்கிறது'' என்று குறும்புடன் சொன்னார்.

ஆவடியைத் தொடர்ந்து திருத்தணி. இடைவெளி அதிகம். ஒரு மணி நேரப் பயணம். அங்கு கழக வேட்பாளர் சிவாஜியை எதிர்த்துப் போட்டியிடுபவர் பா.ம.க வேட்பாளர்.

''தி.மு.க சாதிக் கூட்டணி அமைத்திருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறார்கள். அந்தப் பக்கம் இருந்தால் சாதியில்லா கூட்டணி; இந்தப் பக்கம் இருந்தால் சாதிக் கூட்டணியா? இதெல்லாம் இந்தத் தேர்தலில் பிரச்னையே இல்லை. ஆறு கோடியே இருபது லட்சம் பேர் கொண்ட தமிழகத்தைத் தலைமை தாங்கி நடத்த, நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு நபரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமா என்பதுதான் நம் முன் உள்ள பிரச்னை. உங்களுக்குத் தெளிந்த நீரோடை வேண்டுமா, சாக்கடை வேண்டுமா? நல்லாட்சி தந்த தெளிந்த நீரோடையாகக் கலைஞர் இருக்கிறார். மறக்க வேண்டாம். 'திருத்தணி முருகன் வழித் துணை வருவான்' என்று என் தந்தை அடிக்கடி சொல்லுவார். நல்லாட்சி தொடர அவன் நிச்சயம் அருள்வான்'' என்று முடித்தார் ப.சிதம்பரம். திருத்தணியில் சிதம்பரத்தின் பேச்சுக்கு, கூட்டத்தினரிடையே இருந்து உற்சாகமான குறுக்கீடுகள்.

''நம்முடையது அணி; ஆனால் அவர்கள் அமைத்திருப்பது பிணி'' என்று சிதம்பரம் சொன்னவுடன் ''இல்ல ஸார், அது நாட்டைப் பிடித்த சனி'' என்று கமெண்ட் வந்தது!

... "இல்ல ஸார், அது நாட்டைப் பிடித்த சனி" என்று கமெண்ட் வந்தது! ❞

நான்காவது கூட்டம் அரக்கோணத்தில். ''தமிழ்நாட்டை மட்டும் ஜெயலலிதா பாழ்படுத்தவில்லை. அவரது செயல்களால் இந்திய நாட்டுப் பொருளாதாரத்தையே பின்னோக்கிச் செல்ல வைத்தார்! அவர் வாஜ்பாய் அரசைப் படுத்திய பாட்டில் மத்திய அரசின் நிலைப்பாடு கேள்விக்குறியாகி வளர்ச்சி கடிகாரத்தின் முள் பின்னோக்கித் தள்ளப்பட்டது. இப்போது உடல் நலமில்லாத மூப்பனாரை அவர் படுத்துகிற பாடு...! அரங்கேற்றுகிற அவமானங்கள்... இது தேவைதானா...? கொஞ்சம்கூட தன்னைத் திருத்திக் கொள்ளாத ஜெயலலிதாவுக்கு ஏன் வோட்டுப் போட வேண்டும்?'' என்று கேட்டார் ப.சிதம்பரம்.

''சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா ஜூன் 12ம் தேதி நீதிமன்றம் செல்ல வேண்டும். துரதிருஷ்டவசமாக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல்வராகி விட்டாலும் நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட அவமானம், தலைகுனிவு தமிழகத்திற்கு வேண்டுமா?'' மெய்யாகவே உருகிக் கேட்டார் சிதம்பரம்.

— ப்ரியன் ஸ்ரீநிவாசன்
படங்கள்: பேஜர் மூர்த்தி



எதற்குமே அசைந்து கொடுக்காத கேசவ்வை, அனுமந்துவின் அந்த வார்த்தைகள்தாம், புரட்டி எடுத்து அவரது ஆணவத்தையும், அகம்பாவத்தையும் தூள் தூளாக்கியது.

''இந்த கண்டத்திலே இருந்து நீங்க தப்பிக்கணும்னா எதையுமே உங்களுக்குன்னு சேர்த்து வெச்சிக்காதீங்க. அவசியமான தினப்படி அயிட்டங்களை எல்லாம் அரசாங்கத்துக்கிட்டே ஒப்படைச்சிடுங்க. இருக்கற வீடு, வாசல், காடு, சம்சாரத்தோட நகைகள் எல்லாத்தையும் ஒப்படைச்சிடுங்க. நூறு பேர் டெபாசிட் செஞ்சிருந்தா அறுபது பேருக்காவது திருப்பிக் கொடுக்கப் பாருங்க.''

''என் கெளரவம், பேரு எல்லாம் என்ன ஆவது?'' — கேசவ், அடக்க மாட்டாத துக்கத்துடன் கேட்க, அனுமந்து ஒரே வார்த்தையில் சொல்கிறார்.

''உங்க கெளரவமும், பேரும் இந்த சொத்துல இல்லே. காவி வேட்டி கட்டிக்குங்க... கழுத்து நிறைய ருத்ராட்ச மாலை போட்டுக்குங்க... பொண்ணுக்குத்தான் இத்தனை நல்ல மாப்பிள்ளை கிடைச்சிருக்கே... அப்புறம் என்ன? மிச்சத்தை ஒங்க பொண்ணு மாப்பிள்ளையே பார்த்துப் பாங்க.''

''இதெல்லாம் நடக்குமா?''

—அவர் இழுக்க, அனுமந்து முதுகில் தட்டிச் சொல்கிறார்...

''என் கையால காவி வேஷ்டி

இனிமேல் ஆரம்பம்





யும், ருத்ராட்ச மாலையும் வாங்கிக்குங்க... காடு மலைக்கெல்லாம் போக வேண்டாம். பெண்டாட்டி சமைச்சுப் போடுறதைச் சாப்பிட்டுட்டு, அக்கடான்னு கோவில் குளத்துக்குன்னு போயிட்டிருங்க... எல்லாம் தானா நடக்கும்."

வீட்டுக்குக் காவி வேட்டியும், ருத்ராட்ச மாலையுமாய்த் திரும்பிய கேசவ்ராமைப் பார்த்து, கல்பகத்துக்கு அடக்க மாட்டாத சிரிப்புத்தான் வருகிறது.

சுஜாதான் அம்மாவை ரகசியமாகக் கண்டித்தாள்.

"அமெச்சூர் நடிகை மாதிரி அழ வேண்டிய சீன்லே சிரிக்கறியே... இப்ப நீ அழணும்."

"போடி... இவரைக் கல்யாணம் பண்ணிக்கிட்ட இத்தனை வருஷத்துலே இன்னிக்குத் தான் நான் சந்தோஷமா இருக்கேன். அதை நீ தடுக்காதே."

கல்பகம் அவசரமாய் உள்ளே போய் ஃப்ரிஜ்ஜைத் திறந்து வைத்துக் கொண்டு, தனது சிரிப்பை ஃப்ரீஸருக்குள் பத்திரப்படுத்தினாள்.

இதற்குள் சுஜா, "மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் நாளைக்கு இங்கே வருகிறார்கள்" என்று கூற, கேசவ் "அடடா.... அவர்கள் வரும்போது சொந்த வீட்டில் இருந்துவிட்டு, கல்யாணத்தின்போது பரதேசியாய்த் தெருவில் நின்றால் எப்படி இருக்கும்!" என்று அங்கலாய்க்க, அதற்கு கேதாரி கொஞ்சம்கூட அலட்டிக் கொள்ளாமலேயே சொன்னார்...

"நீங்க வேற... இதெல்லாம் ஒரு சினிமாவுல நடக்கற மாதிரி, சீரியல்லே நடக்கற மாதிரி, மனசை உருக்கற க்ளைமாக்ஸ். சினிமான்னா இந்த இடத்துல -தாரோட வாழை மரத்தைக் காட்டிட்டு, அடுத்த சீன்லே சிம்பாலிக்கா வெட்டி சாய்ச்ச மாதிரி காட்டிடுவாங்க. மெகா சீரியல்னா- இந்த ஒரு சீனையே நாற்பது எபிசோடுக்கு இழுத்துட்டுப் போவாங்க... அதுதான் வித்தியாசம்."

மறுநாள் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் பெண் யாரென்று தெரியாமலேயே வந்து இறங்குவது போல இறங்கியதும் கேசவ்வின் முகத்தைப் பார்த்துவிட்டு ஈசுவரன் படா ஸ்டைலாக முகத்தை முறுக்கிக் கொண்டு 'இவனோட பொண்ணா... இவன் பொண்ணை என்னோட எதிரியோட புள்ளைக்குக் கூட கட்டி வைக்க சம்மதிக்க மாட்டேன்...' இப்படிச் சொல்லி முறுக்கிக்

அனுராதா ரமணன்

"தொகுதி பங்கீட்டுல எங்களுக்கு அஞ்சு தொகுதிதான் கிடைச்சது. யார் யாருக்கு தர்றதுன்னே புரியல!"

"அதுக்கென்ன இப்போ?"

"உங்க கட்சிக்கு ஒதுக்கினதுல ரெண்டு தொகுதி கடன் கொடுத்தீங்கன்னா அடுத்த எலக்‌ஷன்ல திருப்பி தந்துடறேன்!"

- கொங்கணாபுரம் வே. செந்தில்

கொள்ள, அஜய், அப்பாவுடன் சேர்ந்து 'அதானே... சமீபத்துல கூட இவர் என்னை அவமானப்படுத்தி அனுப்பிட்டாரு... நீங்க வாங்கப்பா போகலாம்' என்று ஏகத்துக்கு விறைத்துக் கொள்ள, சொல்லி வைத்தது போல சுஜாவும், கல்பகமும் 'ஓ'வென அழ, பிரமை பிடித்தாற் போல் நின்ற கேசவ்வை, கேதாரி அதட்டினார்...

"சரியாப் போச்சு. இவங்களை ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமா? சரி, உங்களுக்குள்ளே எந்த விதமான சண்டையோ பூசலோ எனக்குத் தெரியாது. போய் சாஷ்டாங்கமா அவங்க காலிலே போய் விழுங்கோ. இல்லே குறைஞ்ச பட்சம் அவருடைய ரெண்டு உள்ளங்கையிலேயும் முகத்தைப் புதைச்சுட்டு 'கரகர'ன்னு அழுங்கோ... இதெல்லாம் உங்களுக்கு நான் சொல்லித் தரணுமா... இப்போ உங்க பொண்ணு கல்யாணம் நடக்கறதைவிட- நீங்க இந்த இக்கட்டிலே இருந்து வெளியே வர்றதுதான் முக்கியம். அதுக்கு இந்த மாப்பிள்ளையை விட்டா வேற கதி மோட்சம் கிடையாது."

அவ்வளவுதான். கேசவ்ராம் 'அண்ணா' என்று பாய்ந்து ஓடிப்போய் ஈஸ்வரனை இறுகக் கட்டிக் கொண்டார்.

"ஐய்யோ... அவ்வளவு இறுக்கமா கட்டிக்காதீங்கோ... தாங்க மாட்டார். நானே இவரைப் பத்திரமா பூப்போல வெச்சிட்டிருக்கேன். உங்க பொண்ணை எங்க பையன் கல்யாணம் பண்ணிக்கணும். அவ்வளவு தானே? விடுங்கோ... நான் அவர்கிட்டே பேசறேன்."

- இப்படிச் சொல்லிய மீனாட்சி, கணவரையும் மகனையும் இழுத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த அறைக்குள் போய் கதவை சாத்திக் கொண்டாள்.

ப்ரீத்தியும், கேதாரியும் தான் அவ்வப் பொழுது காரா பூந்தியும், மில்க் ஷேக்குமாய் உள்ளே போய் கொடுத்து, அங்கே நடக்கும் வாக்குவாதங்களை இங்கே வந்து சொல்லி, ரன்னிங் காமன்ட்ரி கொடுத்து, கேசவ்வின் இதயத்துடிப்பைக் கூட்டிக் கொண்டிருந்தனர்.

கடைசியில் ப்ரீத்தி 'சக்ஸஸ்' என்று வின்சென்ட் சர்ச்சில் மாதிரி... ஏன் நம்ம ஊர் புரட்சித் தலைவி மாதிரி இரட்டை விரலை உயர்த்திக் காட்டிக் கொண்டே வெளியே வந்தபோது- கேசவ் வியர்க்க விறுவிறுப்பாக சோபாவில் அப்படியே மல்லார்ந்தே விட்டார்.

சுஜா, அஜய் திருமணம் சென்னையில் படு அமர்க்களமாக நடக்கிறது. கல்யாணத்திற்கான முழுப் பொறுப்பையும் ப்ரீத்தியும், கேதாரியும்தான் பார்த்துக் கொண்டார்கள் என்பதை சொல்லத் தேவையே இல்லை. அதற்கு ஒரு வாரம் முன்பே-கேசவ் தனது சொத்துக்களை எல்லாம் அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டுக் கட்டிய வேட்டித் துண்டுடன் கல்பகத்தையும் அழைத்துக் கொண்டு சென்னையிலேயே ஈசுவரனுக்குச் சொந்தமான ஒரு வீட்டில் குடி புகுந்துவிட்டார். இப்பொழுது எதற்கெடுத்தாலும் 'அண்ணாவைக் கேட்டுக் கொள்ளுங்கோ' என்று ஈசுவரனைக் கை காட்டி விடுகிறார். கேதாரியை அந்தண்டை இந்தண்டை நகர விடுவதில்லை. அவர் மீது அளப்பரிய மரியாதை, வாத்சல்யம் எல்லாம் வந்து விட்டது.



அஜய்யின் அலுவலகத்தைச் சேர்ந்தவர்

எட்டுக்குப் பிறகு ஒரு முத்து!

எட்டுக் குழந்தைகளை ஏற்கெனவே பெற்ற தாய். அவற்றில் மூன்று குழந்தைகள் செவிடு, இரண்டு குருடு, ஒன்று மனவளர்ச்சி பெறாதது. அந்தத் தாய்க்கும் பால்வினை வியாதி. இந்த நிலையில் அவருக்குக் கருத்தடை ஆபரேஷன் செய்வதை நீங்கள் ஆதரிப்பீர்களா? 'ஆம்' என்றால் இசை மேதை பீதோவன் பிறப்பதை நீங்கள் தடை செய்திருப்பீர்கள்!

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா
தகவல்: எல்.ஆர். ராஜாமணி

களுக்குத் தான் இந்தத் திருமணம் படுபயங்கர ஷாக்.

'அதெப்படி இந்தப் பிள்ளையாண்டான் இவளை லவ் பண்ணிட்டு எவளையோ கல்யாணம் பண்ணிக்கறான்...!

– இப்படி சீனிவாச ராகவனும், உன்னி மேரியும் சின்னடைப் பிய்த்துக் கொள்ளாத குறைதான்.

திருமண வரவேற்பில் ப்ரீத்தி பம்பரமாய்ச் சுழலுவதைப் பார்த்த ஈகவரன்–மீனாட்சி தம்பதியருக்குக் கண்களில் நீர் திரையிடுகிறது. எங்கேயோ, எதற்கோ ஓடிக் கொண்டிருந்த ப்ரீத்தியின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்திய மீனாட்சி- 'அடுத்தது உன் கல்யாணம்தான்' என்று சொன்ன போது... கேதாரி மேல் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொள்வது போல தனது கண்ணீரையும் துடைத்துக் கொண்டார்.

மாலையும் கழுத்துமாய் நின்று கொண்டிருந்த அஜய், ப்ரீத்தியிடம் தழுதழுத்த குரலில் சொல்கிறான்...

"ப்ரீத்தி, என்னை விடவும் நல்லவனா... எல்லாத் தகுதியும் உடையவனா... உனக்கு ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து விட்டுத்தான் மறு காரியம்."


"ஸ்டாப்... ஸ்டாப்... ராத்திரி ஃபர்ஸ்ட் நைட்டை வெச்சுட்டு இந்த மாதிரி சபதமெல்லாம் எடுக்காதீங்க. எப்படி எங்க அப்பாவால அவரோட முதல் காதலை– காதலிச்ச கல்யாணம் செஞ்சுக்கட்டவளை– மறக்க முடியலையோ... எப்படி உங்களாலே, உங்க முதல் காதலை மறக்க முடியலையோ... அப்படித்தான் எனக்கும். ஆனா, எப்படி நீங்க உங்க காதலை ஒதுக்கி வெச்சுட்டு முன்னுக்கு வர்றது தான் ஒரே குறின்னு முயற்சி பண்ணி இந்த நிலைமைக்கு வந்தீங்களோ, அதுபோல் நானும் கண்டிப்பா முன்னுக்கு வருவேன். அப்போ என்னையும் ஒருத்தன் ஈமெயிலில் 'ஐ லவ் யூ' சொல்லி குழப்புவான். அப்போ அவன்கிட்ட என் கதையைச் சொல்லி, 'ஸாரிப்பா'ன்னு சொல்லி கையை விரிப்பேன். அதெல்லாம் இனிமேல்தானே ஆரம்பமாகணும்."

அவள் கலகலவென சிரிக்க – டைனிங் ஹாலில் விஸ்தாரமான இலைகளின் முன்பு உட்கார்ந்திருந்த உன்னிமேரியும், சீனிவாச ராகவனும் இந்தக் காட்சியை பார்த்துவிட்டு, இலையில் பரிமாறியிருக்கும் அயிட்டங்களைக் கூட மறந்து ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கிறார்கள்.

"உன்னிமேரி அதைப் பார்த்தியா... அந்தக் கல்யாணப் பொண்ணு, பக்கத்திலேயே நிக்கறா. இவனானா இவகிட்டே ஈஷிட்டு நிக்கறான். எப்படி சிரிக்கறாபாரு... ஆமா... நாளைக்கு அந்தப் பொண்ணுக்கும் அஜய்க்கும் நடுவுலே இவளால பிரச்னை வராதுங்கறே?"

"வராமயா போகும்? இனிமேல் தானே ஆரம்பமாகணும்... இல்லேன்னா நாம எதற்கு இருக்கோம்?"

உன்னிமேரி பாதாம்கீரை ஒரு கை பார்த்தபடி சொல்கிறாள்.



(நிறைந்தது)



சுமி சூப்பர் மார்க்கெட்!

தமிழ்ப் புத்தாண்டு 'இலக்கியச் சிந்தனை' கூட்டத்துல உங்க அபிமான சுமியை நார் நாராகக் கிழிச்சிருக்காங்க... பாரம்பர்யம் மிக்க கல்கி பத்திரிகைல இப்படி ஒரு பகுதியான்னு ம.ரா.போ. குருசாமி ஆதங்கப்பட்டிருக்கார்.

எனக்கும் சரி, உங்களுக்கும் சரி, திஸ் அட்டாக் இஸ் நத்திங் நியூ. ஆனா ஒண்ணு, தமிழை டைல்யூட் பண்றதுக்காக வரிஞ்சு கட்டிக்கிட்டு இந்த காலம் நான் எழுதலைன்றதை சத்தியமாச் சொல்ல முடியும். ஃபன்னுக்காக மணிப்ரவாளத்துல இரண்டு பக்கம் வெளிவருது. இதனால் தமிழுக்கே ஆபத்து வந்துட்ட மாதிரி ஏன் பலபேர் அலறணும்ன்றதும் சத்தியமா புரியலை! நல்ல தமிழ் இந்த இரண்டு பக்கத்துக்கு வெளியில நிறைய வளர்ந்துகிட்டிருக்கு. அதை அப்பப்போ அடையாளம் காண்பிக்க முயற்சி பண்ற சுமி எப்படி தமிழ் விரோதியா இருக்க முடியும்?



தினமணி மாணவர் மலர் பார்த்தீங்களா...? அட்டை அழகாயிருக்கு. உள்ளே, என்ன படிக்கலாம்னு யோசிச்சுக்கிட்டிருக்கற ஸ்டூடண்ட்ஸுக்கு நிறைய ஹெல்ப் கிடைக்கும். பட், மத்த ரீடர்ஸுக்கு அதிகமில்லை. தினமணி வாசகர்கள் மூலமா நிதியுதவி பெற்று மேல்படிப்பு முடிச்சு டாக்டராகியிருக்கற ராமகிருஷ்ணனோட மினி ஃப்ளாஷ் பேக் டச்சிங்கா இருக்கு. 1200க்கு 1116 மார்க் எடுத்து, மெடிகல் சீட் கிடைச்சும் படிக்க வசதியில்லே... தினமணிக்கு எழுதிப் போடும்படி ராமமூர்த்தின்ற பெரியவர் வழிகாட்டியிருக்கார். 1.25 லட்சம் நிதி சேர்ந்து இப்போ ராமகிருஷ்ணன் டாக்டராயிட்டார்; எழுபதஞ்சாயிரம் ரூபாய் மேல் படிப்புக்காக முதலீடும் செஞ்சு வைச்சிருக்கார்.

திரும்பவும் பிளஸ் டூ ரிசல்ட் வரப்போகுது. ஆகவே உதவத் தயாராயிருக்கறவங்க தினமணியை ஊன்றிப் படிக்கலாம்.




• சங்கீதா

பிளஸ் டூ பருவத்துக் காதல் எப்படியிருக்கும்...? யுகபாரதியோட 'அந்நியர்கள் உள்ளே வரலாம்' தொகுப்பைப் படிச்சுப் பாருங்க...! (ராஜேஸ்வரி புத்தக நிலையம், 8, முத்து கிருஷ்ணன் சாலை, சென்னை – 17.) திகட்டற தித்திப்பு; சொட்டச் சொட்ட செண்டிமெண்ட்! காதலுக்கு ஒரே யொரு பரிமாணம்தான் இருக்குன்ற முடிவோட எழுதியிருக்கற கவிதைகள்! புக்கோட கெட் அப்பும் ரொம்ப மோசம். பொருத்தமில்



லாத, கத்திரிக்கோல் போட்ட, படங்களை வைச்சு இப்படிப் பம்மாத்துப் புத்தகம் போடக் கூடாது. குரோ அப் யுகபாரதி! அடுத்த தொகுப்புல காதலோட கம்பீரம், நளினம், வலி, வஞ்சனை ஆழம் எல்லாத்தையும் சொல்ல முயற்சி பண்ணுங்க, இல்லாட்டி சினிமாவுக்கு மட்டும் பாட்டெழுதற கவிஞரா மாறிடுவீங்க.

'இலக்கியச் சிந்தனை'ல என்னைத் திட்டின தால நான் யுகபாரதியைப் பின்னி வாங்கிட்டேன்னு நாளைக்கு யாராவது சொல்லு வாங்க... சொல்லட்டும். சும்மா பாராட்டிக் கிட்டிருக்கறதுக்கு ஒரு சுமி தேவையில்லை.



சும்மா பாராட்டுறதுக்கா சுமி...?


ரொம்ப வித்தியாசமான ஒரு புத்தகம்- இங்கிலீஷ்- சாரி-ஆங்கிலத்துல! பெங்குவின் வெளியிட்டிருக்கிற 'Everybody Loves a Good Drought. எழுதினவர் சில வாரங்களுக்கு முன்னாடி நான் குறிப்பிட்ட பத்திரிகையாளர் சாய்நாத். பதிமூணு 'அவார்ட்' வாங்கியிருக்கற சாய்நாத் இதுல தன் போட்டோவை ஒரு இடத்துல கூட போட்டுக் கலை! இந்தியாவுல வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கறவங்க அரசாங்க அமைப்பாலும் திட்டங்களாலும் எப்படி ஏமாத்தப்படறாங்கன்ற கரண்டல் சரித்திரம். படிக்கறபோது முதல்ல அதிர்ச்சி அப்புறம் ஐயோ! ஐயோ!ன்னு மனசு அடிச்சுக்குது- இந்த ஜன நாயக கேலிக் கூத்து இன்னும் எத்தனை நாளைக்கு? இதை எப்படி மாத்துவோம்னு பதறுது. (ஏழைகள் போராடி ஜெயிச்ச சம்பவங்களுக்கும் சில பக்கங்கள் உண்டு இந்த புக்ல. உம்: புதுக்கோட்டை மாவட்டத்துல அறிவொளி இயக்கம் அடைஞ்ச வெற்றி) இத்தனைக்கும் சாய்நாத் எழுத்து நடையில மருந்துக்குக்கூட அலங்காரம் கிடையாது. ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் ஸ்ட்ரெய்ட் ஃப்ரம் தி ஸோல்!

'**ஸோ**ல் ஸ்டர்ரிங்'னு சொல்ல முடியாது. ஆனா சங்கீதா சிவகுமார் (சில பேர் 'சங்கீதா கிருஷ்ணா'ன்னும் வேற சிலர் 'சங்கீதா சிவகுமார்(கிருஷ்ணா)'ன்னும் போடறாங்க) பாட்டு நிறைய இம்ப்ரூவ் ஆகியிருக்கு. பெரீ......ய்ய கர்சீஃப்ல மூக்கைத் துடைச்சுக்கிட்டு ஜல தோஷத்தோட பாடினாலும் 'ஹம்சத்வனி' சபாவில் அவங்க பாடின பூர்வி கல்யாணியும் தோடியும் சுவாரஸ்யமாயிருந்தது. குரல்ல இருக்கற நாச்சுரல் சக்திக்கு, இன்னும் நிறைய கார்வை குடுத்துப் பாடினா ஆலாபனைக்கு அழகு கூடும்; ஃபினிஷ் எல்லாம் இன்னும் நீட்னெஸ்ஸோட கருதிலேருந்து விலகாம வரணும். அது சங்கீதாவுக்கு எட்டாத விஷயமில்லே.

அதே மாதிரி 'ஹம்சத்வனி'க்கும், ஸ்டேஜ்ல இன்னொரு ஃபேன் வைக்கறது எட்டாத விஷயமில்லே... சங்கீதா கச்சேரில அஞ்சு ஆர்டிஸ்ட்ஸ் ஒரே பெடஸ்டல் ஃபேன்- அதுவும் ஆஸிலேட் பண்ணலை.. அவஸ்தைப் பட்டாங்க. அப்புறம் அந்த மும்மூர்த்தி படங்கள்..... அதைக் கண்ணுக்குத் தெரியறாப் போல அழகா வைக்கலாமே. சும்மா சேர்ல உட்கார வைச்சு வேடிக்கை பாக்கற மாதிரி இருக்கு!

— சுமி

குறைந்த ரிஸ்க், அதிக லாபம்!



கடந்தகால வளர்ச்சி வருங்காலத்தில் ஏற்படலாம் ஏற்படாமலும் போகலாம்

யூடிஐ பாண்ட் ஃபண்ட்

காலவரம்பற்ற கடன்திட்டம் • வரிச்சிக்கனம் • வரிக்கழிவு இல்லை/வருவாய் விநியோக வரி இல்லை • என்ஏவி அடிப்படையில் விற்பனை/மறுகொள்முதல்

ஒவ்வொரு தேவைக்கும் தகுந்த ஃபண்ட் - உங்கள் திட்டத்தை தேர்ந்தெடுப்பீர்

மாதாந்திர பணம் எடுக்கும் திட்டம்

- வரிவிலக்கு பெற தகுதி உள்ள நபர்கள்/ அமைப்புகளுக்கு உகந்தது
- குறைந்தபட்ச முதலீடு ரூ.30,000/-
- 6 மாதங்களுக்கு பின்பு மாதாந்திர பணம் எடுக்கும் வசதி
- ஒவ்வொரு அரை–ஆண்டிலும் பின்தேதியிட்ட மாதாந்திர காசோலைகள் முன்னதாகவே வழங்கப்படும்.

ரோல்ஓவர் திட்டம்

- வரி விலக்குப் பெற்ற தொடர்ச்சியான பண வருவாய் அல்லது வருமான அங்கீகாரம் தேவைப்படும் அமைப்புகளுக்கு உகந்தது
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 5,000/-
- மூலதன மதிப்புயர்வை வருமானம்/ அல்லது எவ்வித நஷ்டம்/கட்டணங்கள் இன்றி லாபம் ஆக பெற வசதி
- எப்போது விற்பனை செய்யப்பட்டாலும் எவ்வித விற்பனை கட்டணமும் இல்லை

ரெகுலர் திட்டம்

- தொடர்ச்சியான வருமானம் தேவைப்படாத, அதிக லாபம் பெற விரும்பும் நபர்களுக்கு உகந்தது
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 5,000/ -
- ஒத்திவைக்கப்பட்ட விற்பனை கட்டணம் முதலீடு செய்த 3 மாதங்களுக்குள் செய்யப்படும் மறுகொள்முதலுக்கு 1% எனவும் 3 முதல் 6 மாதங்களுக்குள் செய்யப்படும் மறுகொள்முதலுக்கு 0.5% எனவும் விதிக்கப்படும்

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொலைபேசி : 203 1818. வருகை தருக: www.unittrustofindia.com

அமைப்பு விதித்தொகுதி: யூடிஐ சட்டம் 1963–ன் [illegible]

தென் மண்டல அலுவலகம் : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738185. • திருச்சி தொ.பேசி: 760060. **சிறிய கிளை அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிறிய கலெக்ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621 **யூடிஐ பாங்க்**: அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231085. • ராயபுரம் தொ.பேசி: 2492184/85/86 • தி.நகர் தொ.பேசி: 8239134–35.

எய்ட்ஸை தடுப்பீர் - அனைவரையும் நேசிப்பீர். 06/24-2001 C TAM B



மல்லுக்கட்டிய மனசாட்சி!

மாறன் விலகல் பற்றி கலைஞரிடம் கருத்து கேட்டபோது, ''அவரது வீட்டு முகவரி வேண்டுமானால் தருகிறேன். போய் விசாரித்துக் கொள்ளுங்கள்'' என்று பதில் சொல்லியிருக்கிறார்! அந்தப் பதிலில் பொதிந்திருக்கும் எரிச்சலைப் பாமரனும் உணர்ந்து கொள்ளலாம்.

ஏற்கெனவே மதுரையிலிருந்து கொண்டு அழகிரி நடத்தும் 'அரசியலால்' கடுப்படைந்திருக்கிறார் கலைஞர். இப்போது 'மனசாட்சியான' மாறன் விலகல்.

''ஜாதிக் கட்சிகளை அணியில் சேர்த்ததை மாறன் கடுமையாக எதிர்த்த போதிலும் தி.மு.க. அணியின் பலத்தை அதிகரிக்க அவரிடமிருந்து யோசனைகள் ஏதும் வரவில்லை'' என்கிறார்கள் கழகப் பிரமுகர்கள். முதலியார்கள் பெரும்பாலும் தி.மு.க. ஆதரவாளர்கள்தான். அப்படியிருக்க புதிய நீதிக் கட்சியைச் சேர்த்தது தவறு என்பது அவர் வாதம்.

''இதையெல்லாம்விட முக்கியமாக, சற்குண பாண்டியன் உட்பட நான்கு அமைச்சர்களுக்குச் சீட்டு கொடுக்கக் கூடாது என்று சொல்லப்பட்டதாம். ஆனால் மற்ற எல்லா அமைச்சர்களுக்கும் சீட்டு கொடுக்கும்போது சற்குணம் என்ன பாவம் செய்தார்?'' என்று ஆலிவர் சாலை ஆதரவு காட்டவே, சற்குணம் இடம் பிடித்து விட்டாராம்.

மாறனின் சிஷ்யர் ஆர்.எஸ். பாரதி, ஆலந்துரில் போட்டியிடலாம் என்று தொகுதியை 'செட் அப்' செய்து கொண்டிருந்த பாரதிக்கு, அத்தொகுதி எம்.ஜி.ஆர். கழகத்துக்குக் கொடுக்கப்பட்டதில் அதிர்ச்சி. மாறனுக்கும் வருத்தம். அதே போன்று தாம்பரம் தொகுதியில் தற்போதைய எம்.எல்.ஏ. வைத்தியலிங்கத்துக்கு முதலில் சீட்டு மறுக்கப்பட்டு ஸ்டாலின் ஆதரவாளர் ஆர்.எஸ்.ராஜா என்பவருக்குக் கொடுக்கப்பட்டதாம். இதற்காக டி.ஆர். பாலு சிபாரிசின் பேரில் மாறன் முட்டி மோதி மீண்டும் வைத்தியலிங்கத்துக்குச் சீட்டு வாங்கிக் கொடுத்தார் என்கிறார்கள். வேட்பாளர் பட்டியல் வெளியிட்ட அன்று மதியம் இரண்டரை மணிக்கு 'முரசொலி' வெளியூர் பதிப்பில் அச்சிடுவதற்காக லிஸ்ட் இரகசியமாகக் கொடுக்கப்பட்டது. அதில் ஆர்.கே. நகரில் பலராமன், பூங்கா நகரில் கோ.சி. நடராஜன், திருவல்லிக்கேணியில் நிர்மலா சுரேஷ் ஆகியோர் பெயர்கள் இடம் பெற்று இருந்தன. மாறன் முதல்வரைச் சந்தித்த பின், இந்தப் பெயர்கள் மாற்றப்பட்டனவாம். குறிப்பாக நிர்மலா சுரேஷ் விஷயத்தைப் பொருத்தவரை கலைஞர் விடாப்பிடியாக இருந்தும் அவரை எடுத்துவிட்டு எஸ்.ஏ.எம். உசேனைப் போட வேண்டியதாகிவிட்டதாம்.

இவர்களைத் தவிர இன்னமும் பதினைந்து பெயர்களை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையைக் கலைஞர் ஏற்க வில்லை என்கிறார்கள். மாறனின் கோபத்துக்கு அதுவும் ஒரு காரணம்.

வேட்பாளர்கள் தேர்வு பற்றிய வருத்தம் ஒரு பக்கம் இருந்தாலும் 'வருமானத்துக்கு மீறிய சொத்து சேர்த்து விட்டார்' என்று போடப்பட்டிருக்கும் வழக்கு வேறு மாறனுடைய முடிவுக்குக் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள்.

''அவரது உடல்நிலை காரணமாக நாங்கள் கூட்டணி, வேட்பாளர் தேர்வு போன்ற விஷயங்களில் அவரைத் தொந்தரவுப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அவரோ தம்மை அலட்சியப்படுத்துவதாக எடுத்துக் கொண்டார்'' என்கிறார் முக்கிய கழகப் பிரமுகர்.

இப்போது தலைமைக்கும் மாறனுக்கும் பொதுவான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. விவகாரத்தை ஊதிப் பெரிதாக்காமல் தேர்தல் வரை அடக்கி வாசிக்க வேண்டுமென்பதுதான் அது.

- நமது நிருபர்

குன்றையொன்று

கஷ்யப பிரஜாபதிக்கும் அதிதிக்கும் ஏற்கெனவே இந்திரன் புதல்வனாயிருக்கிறான். தேவதைகளெல்லாம் அவர்களின் புத்ரர்கள். அதே கஷ்யப அதிதிக்கு ச்ரவண நட்சத்திரம் துவாதசி திதி அன்றைக்கு பகவான் ஆவிர்பவித்தான். அப்போது ஸ்தோத்திரம் பண்ணுகிறாள் அதிதி, பகவானைப் பார்த்து...

எப்பேர்ப்பட்டவன் அவன்!

"சிரவணமங்களா! நாமதேயா!"

ஸ்தோத்திரம் பண்ணிய உடனேயே அவன் வாமனனாக ஆவிர்பவித்தான். அப்படி அவன் அவதாரம் பண்ணிய நட்சத்திரம்தான் சிரவண நட்சத்திரம்.

ஏற்கெனவே இந்திரன் அதிதியினுடைய கர்பத்திலிருந்து தோன்றியதனாலே இந்திரனுக்குத் தம்பியாகிறான் பரமாத்மா!

உபேந்திர இந்திரா வரஜ: - இந்திரனுக்குத் தோழன் அவன். இந்திரனுக்குக் கஷ்டம் வந்தால் அவன் விட்டுக் கொடுக்க மாட்டான். இந்திரன் மாத்திரமில்லை; இந்திர சந்ததியினரையும் அவன் காத்தான்.

கோவிந்த பட்டாபிஷேகம் நடக்கிறபோது இந்திரன் வந்து பிரார்த்தனை பண்ணிக் கொண்டான்.

'என் பிள்ளையை நீ ரக்ஷிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான்.

கேட்டுக் கொண்டவர்களையெல்லாம் ரக்ஷித்தவன் அந்த பரமாத்மா.

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்,
அன்று ஞாலம் அளந்த பிரான், பரன்
சென்று சேர் திருவேங்கட மா மலை
ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே.

நம்மாழ்வார் மிக அழகாகச் சொல்கிறார். உருகி உருகிச் சொல்கிறார். உரலில் கட்டுண்டது எப்படியோ அப்படி குன்றெடுத்த தோளினானையும் பாடுகிறார். திருமங்கையாழ்வார் அந்த கோவர்தன கிரிதரனிடம் திரும்பத் திரும்ப ஈடுபடுகிறார். 'குன்று குடையாய் எடுத்தாய் அடி போற்றி' என்று ஆண்டாள் பாடுகிறார். குன்றெடுத்ததை எல்லோருமே கொண்டாடுகிறார்கள்.

எத்தனை சின்ன குழந்தை அது! பர்வதமோ பிரும்மாண்டம்! பெரிய்ய்ய பர்வதம். அந்த சின்ன குழந்தை அதைத் தூக்கிப் பிடித்துக் கொண்டுவிட்டதே! கல்மாரி பொழிகிறது. மேலேயிருந்து மழையானது - அப்படியே கல் மழையாகப் பொழிகிறது. ஏழு நாட்களுக்கு அடாத மழை! அத்தனை பசுக்களையும் இடையர்களையும் அத்தனையையும் காப்பாற்றினான் பரமாத்மா - அதைக் குடையாய்ப் பிடித்து.

ஆழ்வார்... 'ஐயோ! கை வலிக்காதோ, அந்தக் குழந்தை எத்தனை நாள்தான் தூக்கிப் பிடித்துக் கொள்ளும் இந்த மலையை...?' என்று ரொம்ப வருத்தப்படுகிறார்.

'நெரி கட்டிக் கொள்ளாதோ?' என்று கவலை.

கல்லும் கரைந்துவிட்டதாம் அந்த மழையிலே! கோவர்த்தன கிரிக்கே மனசிலே ஒரு வியசனம் வந்துவிட்டது. 'ஐயோ! இந்தக் குழந்தையை இப்படி நாம் சிரமப்படுத்துகிறோமே... இது நம்மைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறதே! நம்மைத் தூக்கிப் பிடிக்கும்படியாய்ப் பண்ணிவிட்டோமே! மஹா பாவி ஆகிவிட்டோமே! என்ன பண்ணுவது? என்ன பண்ணுவது' என்று அதற்கே ரொம்ப வருத்தமாம்.

என்ன பண்ணிற்று அந்த கோவர்த்தன கிரி...? தான் ஒரு காரியம் பண்ணாவிட்டால் தனக்குப் பிராயச்சித்தமே இல்லை என்று தீர்மானம் பண்ணிற்று. 'அடுத்த ஜன்மத்திலே இந்த கிருஷ்ணனே இன்னொரு அவதாரம் பண்ணப் போகிறான் திருவேங்கடமுடையானாக... அதனாலே நாமே ஏழு பர்வதமாக

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

மாறி அவனைத் தாங்குவோம் என்று, ஏழு நாள் தன்னைத் தாங்கியவனைத் தாங்கி நிற்கும் ஏழு மலையாய் மாறிப் போய் விட்டது. இப்போது அது பகவானைத் தாங்கிக் கொண்டு நிற்கிறது.

பகவான் பண்ணிய காரியத்துக்காக மலையும் - அசித் பொருளும் கூட உருகுகிறது. மனம் படைத்த நாம் உருக வேண்டாமோ...?

அதனால்தான் சாஸ்திரம் அழகாகச் சொல்கிறது. விஷ்ணு தர்மத்தில் சொல்கிற போது சொல்கிறது : விசித்ரா தேக சம்பத்தி :



- அதாவது இந்த தேகமாகிற சம்பத் ஒரு பெரிய ஐச்வர்யம். இதை பகவான் நமக்குக் கொடுத்திருக்கிறான்; விசேஷமாக கொடுத் திருக்கிறான். மீதி ஜந்துக்களையெல்லாம் பார்த்தால், அவை ரொம்ப சிரமப்படுகின் றன. ஆனால் நமக்கு மட்டும் இவ்வளவு அழ கான சரீரத்தைக் கொடுத்திருக்கிறான் பக வான்.

எதற்காக இதைக் கொடுத்திருக்கிறான்..? ஈச்வராய நிவேதிதௌ! -விசித்ரா தேக சம்பத்தி : ஈச்வராய நிவேதிதௌ.

அழகான தேக சம்பத்தை எதற்குக் கொடுத்திருக்கிறான் என்றால், அந்த எம்பெருமானுக்கு அது நிவேதனம் ஆக வேண்டும் என்பதற்காக.

சரீரம் நிவேதனம் ஆகவேண்டும் என் றால் என்ன அர்த்தம்..? சரீரம் அவன் திருவடிக்கே! அவனுக்கே கைங்கர்யம் பண்ண வேண்டும். அவனிடத்திலே ஈடுபட வேண்டும். நா படைத்து என்ன பயன்? அவன் திருநாமத்தைச் சொல்ல வேண்டும். இல்லையானால் அது நாக்கே இல்லை.

காற்றடைக்கப்பட்ட ஒரு பறையைத் தட்டினால் ஓசை வரும். அதைப்போல் எத்த னையோ சப்தங்கள் நாம் பேசுகிறோம். அதெல்லாம் பேச்சல்ல; பகவான் திருநாமத் தைச் சொல்ல வேண்டும். அதைத்தான் குலசேகர ஆழ்வார் - 'ஜிஹ்வே கீர்த்தய கேசவம்' என்றார்.

'ஹே ஜிஹ்வே!' என்று நாக்கைக் கூப்பிடு கிறார். நாம் ஒவ்வொரு இந்திரியத்தையும் அப்படித்தான் கூப்பிட வேண்டும். தியாக பிரும்மம் 'ஓ மனஸா' என்று அழைக்கிறார். 'முன்புற்று எழுந்த என் நெஞ்சே!' என்றார் நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியிலே...

அவரைக் காட்டிலும் அவருடைய மனம் முன்னே எழுந்ததாம், எம் பெருமானி டத்திலே ஈடுபடுவதற்கு. திருமங்கையாழ்வார் 'நல்லை நெஞ்சே!' என்றார்.

இந்த நெஞ்சை - மனஸை - எவ்வளவு ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள் பாருங்கள்! இல்லையானால், மனம் வேறு விதத்தில் போய்விட்டதானால் என்ன பண்ணுவது!

அந்த மனஸைத் தட்டிக் கொடுக்க வேண் டும். நம் வயம் பண்ண வேண்டும். நம் பக்கம் இழுக்க வேண்டும். மனம்தான் பந்தத்துக்குக் காரணம்; மனம்தான் மோக்ஷத்துக்கும் காரணம்!

மனஸ் என்பதைப் பற்றி 'சங்கல்ப சூர்யோதயம்' என்கிற நாடகத்திலே சுவாமி தேசிகன் சொல்கிறார்.

நம் மனஸ் இருக்கிறது பாருங்கள்... அதுதான் ராவணன்! வணங்கல் இல் அரக் கன் அல்லவா ராவணன்! அது மாதிரி மனஸ் யாருக்கும் வணங்காது! அவ்வளவு கொடுமைமிக்கது இது. ராவணனை மாதிரியே... ஆகவே அதை வையக் கூடாது. 'என் மனமே! நல்லை நெஞ்சே! உன் மாதிரி உண்டா...?' என்று தோத்திரம் பண்ண வேண் டும் சிறிது நேரம். அப்படி ஸ்தோத்திரம்

அருள்வாக்கு

சாதாரணமாக எல்லா ஜனங்களுக் குமே தெய்வ சிந்தனை இருக்கத்தான் வேண்டும். மனுஷ்ய ஜீவன் அந்தப் பெயருக்கு லாயக்காக இருக்க வேண்டு மானால் தனக்கு ஜீவ சக்தியைக் கொடுத்த ஸ்வாமியைச் சிந்தித்து, அவன் அருள் வழிகாட்டுகிறபடிதான் ஜீவனம் நடத்த வேண்டும். இந்த(தெய்வ)சிந்தனை நாமே பண்ணுவதாக இருந்தால், நம் முடைய சித்தம் ஓடுகிற தாறுமாறான ஓட் டத்தில் உருப்படியாக ஒன்றும் தேறாது. அது மாத்திரமில்லாமல் நமக்கு ஸ்வாமி யைப் பற்றி சொந்த அனுபவமாக என்ன தெரியும்? நமக்குத் தெரியாதவரைப் பற்றி நாம் என்னத்தைச் சிந்திக்க முடியும்? இங்கே, அப்படித் தெரிந்து கொண்ட பெரியவர்கள் பாடிய ஸ்தோத்திரங்கள்-

பண்ணினால்தான் அது நம் வயமாகும். அப்புறம்தான் அதைக் கட்டுப்படுத்த முடியும். அதை ஸ்தோத்திரம் பண்ணி நம் வழிக்குக் கொண்டு வர வேண்டும். மனசினாலேதான் எல்லாமே சித்திக்கிறது என்பதால், ஈச்வராய நிவேதிதௌ என்பதில் மனஸையும் வாக்கையும் செயல்படுத்திச் சரீரத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இங்கேயும் மனஸைத்தான் முதலில் சொல்லியிருக்கிறது. மனஸுக்குப் பிறகுதான் வாக்கு.

ஒருத்தர் வாக்கால் அர்ச்சனை பண்ணிக் கொண்டேயிருக்கிறார்; ஆனால் அவர் மனம் எங்கேயடாயிருக்கிறது என்று பார்த் தால், டெல்லியிலே சுற்றிக் கொண்டிருக் கிறது. அன்று அவர் டெல்லிக்குப் புறப் பட்டுப் போயாக வேண்டும். அங்கே போய் என்னென்ன பண்ண வேண்டும் என்ற

நினைவோடேயே இங்கே அவர் அர்ச்சனை பண்ணிக் கொண்டிருக்கிறார். அப்படி மனம் ஈடுபடாமல் செய்து என்ன பலன்? மனஸ் சம்யோகம் ரொம்ப முக்கியம். அதனால் தான் மனஸை முதலில் சொன்னது.

ஆகையினாலே, 'விஷ்ணவே நம:' என்று அர்ச்சனை பண்ணுகிறபோது 'ஈச்வராய நிவேதிதெள' என்று அவன் அளித்த இந்த்ரிய சம்பத்தையும் அவனுக்கே அர்ப்பணித்து, வாக்கையும் உரக்க சொல்லிக் கொண்டு மனசை மட்டும் ஈடுபடுத்தாமலிருந்தால் பிரயோஜனம் உண்டா?

ஒருத்தர் சிரித்துக் கொண்டே மந்திரம் சொல்கிறார்... பலனே இடையாது என்று சொல்லிவிட்டது வேதம். வேறு ஒருத்தருக்குப் பெரிதாகக் கொட்டாவி வருகிறது. அதை அடக்க வேண்டும்; இல்லாவிட்டால் எழுந்து போய் கொட்டாவி விட்டுவிட்டு ஆசமனீயம் பண்ணிவிட்டு பிராணாயாமம் பண்ணிவிட்டு அப்புறம் வந்துதான் கோஷ்டியிலே உட்கார வேண்டும்.

கொட்டாவியை விட்டுக் கொண்டே ஒருத்தர் மந்திரத்தைச் சொல்வாரானால் அந்தக் கொட்டாவியும் சேர்ந்தே அந்த மந்திரத்தைக் கேட்கிறதாம்! இப்படி கொட்டாவி விட்டுக் கொண்டு மந்திரம் சொல்வது, ஏப்பம் விட்டுக்கொண்டு மந்திரம் சொல்வது, தூங்கிக் கொண்டு மந்திரம் சொல்வது, சிரித்தபடி மந்திரம் சொல்வது எதுவுமே கூடாது. அவ்வாறு செய்பவர்கள் எல்லாம் அடுத்த ஜன்மத்திலே கழுதையாகப் பிறப்பார்கள்! தெரு நாயாய்ப் பிறப்பார்கள்! -மனு ஸ்ம்ருதியிலே சொல்லியிருக்கிறது.

இந்த இரண்டு ஜன்மாவையும் நினைத்துக் கொண்டால் யாராவது அப்புறம் இப்படிப் பண்ணுவார்களா? அப்புறமும் பண்ணினால் பிராரப்தம் விடுமா!

அதே மாதிரி, 'ஈச்வராய நிவேதிதெள' என்று ஈடுபட்டு இருப்பவர்களைப் பரிகாசம் பண்ணக் கூடாது. அப்படிப் பரிகாசம் பண்ணுகிறவர்கள் அடுத்த ஜன்மத்திலே ஆந்தையாகப் பிறப்பார்கள். - மனு ஸ்ம்ருதியிலேதான் இதையும் சொல்லியிருக்கிறது.

ஆந்தைக்கு இரவில் கண் தெரியும். பகலில் தெரியாது. பகலில் காக்கை வந்து அதன் தலையிலே கொத்தும். 'போன ஜன்மத்திலே அத்யயனம் பண்ணி, இதரானைப் பரிகாசம் பண்ணினாயே! ஏன் பண்ணினாய்? ஏன் பண்ணினாய்!' என்று குத்துமாம்.

அப்படி காக்கையால் குத்தப்படும் படியான அவஸ்தை ஆந்தை ஜன்மாவுக்கு! உத்தமமான மனித ஜன்மாவை அடைந்த ஒருவன் பிற்பாடு மறுபடியும் ஹீன ஜன்மாவுக்குப் போகலாமோ...?

(வளரும்)



தமிழ் முதலான ப்ரதேச பாஷைகளில் இருக்கிற துதிகளுந்தான்-நமக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட ஓடி வருகின்றன. பல காலமாக அவற்றை, ஸ்வாமியை சொந்தத்தில், நேரில் தெரிந்து கொண்ட எத்தனையோ பேர் சொல்லிச் சொல்லி அவற்றுக்கு தெய்விக சக்தி கூடிக் கொண்டே வந்திருக்கும். அவற்றைச் சொல்வதே, அதாவது, 'ஸ்தோத்ர பாராயணம்', 'துதி ஓதுதல்' என்பதே நம்முடைய சித்தத்தை ஸ்வாமியிடம் சேர்த்து வைக்கும்.

நம் தேசம் செய்த பாக்கியம், இம்மாதிரி ஸ்துதிகள் ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்துக் கணக்கு வழக்கு இல்லாமலிருக்கின்றன. நம் தேசத்திலும் இந்தத் தமிழ் நாட்டில் பிறந்தவர்களின் பாக்கியம் இங்கே தோன்றிய நம் முன்னோர்கள் நம்முடைய தமிழ் பாஷையில் துதிகளை அப்படியே கொட்டி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஜனங்கள் அவரவரும், தாங்களே படித்துப் பாராயணம் பண்ணலாம். குருமுகமாகக் கற்றுக் கொண்டுதான் பண்ணணும் என்று கண்டிப்பு இல்லை. அனுபவம் கண்ட குரு எடுத்து வைத்துப் பண்ணினால் அது ரொம்ப விசேஷந்தான்; ஸந்தேஹமேயில்லை. ஆனால் அப்படிக் கட்டாயமாக விதி இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



கிராமிய ஜோதிகா காமெடி ஜோதிகா!



விமர்சனங்களுக்குப் புரட்டுகள்!

டும்... டும்... டும்...

கல்யாணம் பாதியில் நின்றுபோக, கலக்கத்தோடு பிரிந்த, மாதவன் - ஜோதிகா இருவரும், சென்னை ஸ்பென்சர் சந்திப்பில் கைபிடிக்கிறார்கள் என்று ஒரேவரியில் கதை சொல்லிவிடலாம்.

இதை, இடைவேளைக்குக்கூட, நாம் எழுந்து போக மனமில்லாதபடி, இரண்டரை மணி நேர படமாகக் கொடுத்து அசத்தியிருக்கிறார் அறிமுக இயக்குனர் அழகம் பெருமாள்.


சென்னையில் சட்டம் படித்தபடி கூலாக ஊர் சுற்றும் திருநெல்வேலி மாதவனுக்கு உள்ளூர் ஜோதிகாவைக் கொண்டு கால் கட்டு போட முடிவெடுக்கிறார்கள்.

ப்ளஸ் டூ முடித்துவிட்டு மேலே படிக்க ஆசைப்படும் கிராமத்து ஜோதிகாவைக் கட்டிக் கொள்ள மாதவனுக்கும் விருப்பமில்லை. இதனால் இருவரும் கூட்டணி அமைத்து, நிச்சயமான திருமணத்தை நிறுத்த முயற்சி செய்கிறார்கள். ஆனால் எல்லாம் கஜினி முகமது கதையாகிவிட, போனால் போகிறது கல்யாணம் செய்து கொள்வோம் என்று முகூர்த்த நேரத்திற்கு முன்பு முழு மனசுடன் முடிவெடுக்கிறார்கள்.

இந்த முறை, சின்ன பிரச்னை பெரியவில்லனாகி திருமணம் நின்று போகிறது. இரண்டாவது பாதியில் சென்னையில் சந்தித்துக் கொள்ளும் இருவருக்குள்ளும் காட்டுப் பூ மாதிரி காதல், மனமன வென்று மண்டி விடுகிறது. இதை நறுக், சுருக் காட்சிகளோடு, கச்சிதமான திரைக் கதையில் காமெடி கலந்து கொடுத்திருக்கிறார்கள்.

நண்பர்கள் - நண்பிகளோடு கும்மாளம் போடும் ரொமாண்டிக் மாதவனை, பழைய படங்களின் ஜோரக்ஸ் மாதவனாக பார்ப்பது போன்ற உணர்வைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் திருமணத்தை நிறுத்த அவர் போடும் திட்டங்கள் ஒவ்வொன்றும் பணால் ஆகும் போது பரிதாப மாதவனாகவும், "ஒரு பெண்ணைப் பார்த்து, காதல் வசப்பட்டு, அவள் இல்லை என்றால் நான் இல்லை என்ற உணர்வு வர வேண்டும். அது இப்போது எனக்கு வந்து விட்டது" என்று ஜோதிகாவைப் பார்த்து 'ஐ லவ் யூ' சொல்லும்போது, அசத்தல் மாதவனாகவும் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால் உமன் ஆஃப் த மேட்ச் ஜோதிகாதான்! பாவாடை தாவணியில், படிய வாரிய தலையுடன், கண்ணுக்கு மையெழுதி, குறுகுறு விழிகளோடு, துருதுரு கிராமத்துப் பெண்ணாக



குட்டு!

காதல் கதையாகவும் இல்லாமல், கிராமத்துக் கதையாகவும் இல்லாமல், பாப்பாவுக்குப் பாட்டி சொல்லும் கதையாகவும் இல்லாமல் எல்லாமே சேர்ந்ததாய் ஒரு கதையைச் சொல்லி படுத்திய சிங்கிதம் சீனிவாச ராவுக்கு...

ஸ்டைல் ஜான்

அமெரிக்காவிலிருந்து ஆலய ஆராய்ச்சிக்காக தமிழகம் வரும் ஜான்மேக் கன்சிக்கு நம்மூர் ஜோதிகாமீது காதல். அம்மையாரும் அவரைக் காதலிக்கிறார். அம்மன் மூக்கிலிருக்கும் அபூர்வ மூக்குத்தி தொலைந்து போய்விட, இவர்களின் சர்வதேசியக் காதலுக்கு சத்தியசோதனை. முடிவில் மூக்குத்தி கிடைத்துவிட காதல் கைகூடுகிறது.

இந்த வழக்கமான காதல் கதைக்கு கதாநாயகன் ஒரு வெள்ளைக்காரர் ப்ளஸ் திகட்ட திகட்ட கிராஃபிக்ஸ்

வந்து எல்லோரையும் வசீகரித்து விடுகிறார்.

ஜோதிகாவின் தந்தையாக வரும் மலையாள நடிகர் முரளி, மாதவனின் தந்தையாக வரும் டெல்லி குமார், டாக்டராக வரும் பாஸ்கர் ஆகிய மூவரும் நடிக்காமல் பாத்திரங்களாகவே மாறிவிட்டார்கள். ஒரு டஜன் நகைச்சுவை நடிகர்கள் என்றாலும் கதையோட்டத்தைப் பாதித்துவிடாத அளவான, இயல்பான காமெடிக் கலவை.

இரண்டாவது பாதிக்கு மணிவண்ணன் பாத்திரம் மகாபலம். 'ஏலே... வாலே' என்று கிட்டத்தட்ட எல்லா பாத்திரங்களும் அட்சர சுத்தமாய் நெல்லைத் தமிழ்ப் பேச, ஏதோ திருநெல்வேலி கிராமத்திற்குளேயே திசை மாறிப் போய்விட்ட உணர்வு.

பின்னணி இசையில் பின்னியிருக்கும் கார்த்திக் ராஜா ட்யூன்களில் கிராமியத்தைக் கோட்டை விட்டு விட்டார்.

மணிரத்னத்தின் சாயலைத் தவிர்த்தால் இயக்குனர் இன்னும் தனி முத்திரை பதிக்கலாம்.

● அபவ் ஆவெரெஜ்



ஷொட்டு!

சிஷ்யர் அழகம்பெருமாள் இயக்கும் முதல் படத்துக்காக வித்தியாசமான காதல் கதையைக் கொடுத்து உதவியிருக்கும் மணிரத்னத்துக்கு...

விமர்சனங்கள் : விஷுவல்தாசன்

கலக்கல். குறிப்பாக இடைவேளைக்குப் பிறகு ஜான் ஐந்து அங்குல வில்லிபுட் விட்டில் ஜானாக மாறிய கலகலப்பில் களைகட்டி விடுகிறது படம்.

ஜடாமுடி, கோவணம் சகிதம் குகை முனியாக வரும் பிரகாஷ்ராஜ், எண்ணி ஐந்தே காட்சிகளில் பத்து வரி டயலாக் பேசும் 'கால பைரவன்' கேரக்டரில் கனகச்சிதம்.

ஜான் மெக்கன்சியாக நடித்திருக்கும் பெண்ட்லிக்கு ரொமான்சைவிட, நகைச்சுவை நன்றாகவே வந்திருக்கிறது.

ஜோதிகா மீண்டும் இதில் மிடில் கிளாஸ் மெழுகு பொம்மை. அவரை ஒவ்வொரு பிரேமிலும் இன்னும் அழகாகக் காட்டியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு படம்பிடித்திருக்கிறார் சினிமாட்டோகிராபர் திரு. ஆலய குருவாக அசத்தியிருக்கும் அனுபம்கெர், பாலிவுட்டை மறந்துவிட்டு, ஆசிரமம் அமைத்துவிடலாம். அத்தனை தத்ரூபம்!

படத்தில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தியிருக்கிறார் அறிமுக இசை அமைப்பாளர் பிரவீன்மணி. பாடல்கள், பின்னணி இசை இரண்டிலுமே தனித்துவம்.

அறுபது வயதிலும் இருபது வயது இளமையோடு இயக்கியிருக்கும் சிங்கீதம் சீனிவாசராவின், திரைக் கதைக்குக் கைகொடுத்திருப்பது பெண்டா மீடியாவின் லேட்டஸ்ட் கிராபிக்ஸ் உத்திகள்.

'பாரதி', 'நிலாக்காலம்' கொடுத்து கலைச் சேவை புரிந்த மீடியா ட்ரீம்ஸ், இந்த முறை கையைச் சுட்டுக் கொள்ள வேண்டாம் என்று நிர்வாகப் பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கக் கூடும்.

இந்தக் கோடை விடுமுறைக்குக் குட்டி பசங்க காமிக்ஸ் புத்தகங்கள் வாங்கும் செலவை மிச்சப்படுத்திவிட்டது விட்டில் ஜான்.

● ஆவரெஜ்



"அதோ..! அந்த ஆள்தான் ஸார்..." பேரர் க்ரே நிற சபாரி அணிந்த அந்த நபரை வருணுக்குக் காட்ட, வருண் வேக நடை போட்டு அவரை நெருங்கினான். முதுகைக் காட்டியபடி செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த அந்த நபரை நெருங்கி "எக்ஸ்க்யூஸ் மீ" என்று சொல்லி அவருடைய தோளைத் தொட்டான்.

அவர் திரும்பினார்.

"எஸ்..."

வருண் தன் கையில் வைத்திருந்த அந்தத் துண்டுச் சீட்டை அவரிடம் நீட்டினான்.

"இதுக்கு என்ன அர்த்தம்?"

அவர் தயக்கமாய் அந்த துண்டுச் சீட்டை வாங்கிப் பார்த்தார்.

"என்ன இது...?"

"நீங்க எனக்குக் கொடுத்துவிட்ட லெட்டர்"

"நான் கொடுத்துவிட்டேனா...?" அவர் திகைத்து திணறிக் கொண்டிருக்கும்போதே பேரர் வேக வேகமாய்ப் பக்கத்தில் வந்தவன், தவிப்பான குரலோடு ஏறிட்டான்.

"ஸாரி... ஸார்...! அந்த லெட்டரை இவர் தரலை. இவர் மாதிரியேத்தான் அவரும் க்ரே நிற சபாரி போட்டிருந்தார். அதனால்தான் ஏமாந்துட்டேன்..."

வருண் கோபமாய் எரிச்சலாய் பேரரைப் பார்த்தான். "அப்படீன்னா... இவர் கிடையாதா?"

மூடுபனி

"இல்ல ஸார்... கிட்டத்தட்ட இவரைப் போலவே அந்த ஆளும் இருந்ததாலே ஏமாந்துட்டேன். ஒரு நிமிஷம் இங்கேயே இருங்க ஸார். நான் டூ வீலர், ஃபோர் வீலர் பார்க்கிங் வரை போய்ப் பார்த்துட்டு வர்றேன்..."

அவன் வேகமாய் வெளியேறிப் போக, "இரு... நாங்களும் வர்றோம்..." என்று சொல்லிக் கொண்டே



வருணும் பார்வதாவும் பேரரைப் பின் தொடர்ந்து போனார்கள்.

ஹோட்டலின் பார்க்கிங் பகுதியில் ஒரு பத்து நிமிஷத் தேடல். பின், பேரர் தன் முன் நெற்றியைச் சொறிந்தபடி அவர்களுக்கு முன்பாய் வந்து நின்றான்.

"ஸாரி... ஸார்... அவர் கிடைக்கலை. இந்த லெட்டரைக் கொடுத்ததுமே புறப்பட்டு போயிட்டார் போலிருக்கு... அது ஏதாவது தப்பான லெட்டரா

16

ஸார்?"

வருண் பேரருக்குப் பதில் சொல்லாமல் பார்வதாவின் பக்கம் திரும்பினான்.

"எனக்குச் சாப்பிடணும்ங்கிற எண்ணமே போயிருச்சு பார்வதா. நான் வீட்டுக்குக் கிளம்பறேன். நீ வேணும்னா சாப்டுட்டு வா..."

"எனக்கும் வேண்டாம். உங்களை உங்க வீட்ல ட்ராப் பண்ணிட்டு நான் வீட்டுக்கே போய்ச் சாப்பிட்டுக்கிறேன்."

பேரரின் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் திணித்துவிட்டு இருவரும் காருக்கு வந்து உட்கார்ந்தார்கள். பார்வதா காரைக் கிளப்பிக் கொண்டே கேட்டாள்.

"என்ன வருண்! லெட்டரைப் பார்த்தும் அப்செட் ஆயிட்டீங்க போலிருக்கு..."

"இப்படியொரு லெட்டரை நான் எதிர்பார்க்கலை. யாரோ என்னோட நடவடிக்கைகளை நோட் பண்றாங்கன்னு நினைக்கிறேன். இப்பக்கூட

நிலவு

ராஜேஷ் குமார்

"அந்த கிளினிக்ல கட்ற பல் ரொம்ப இயற்கையா இருக்கும்..."
"நிஜமாவா...?"
"ஆமா! செட் பல்லுக்குக்கூட சொத்தை பிடிக்கும்னா பாருங்களேன்!"

- வி. சாரதி டேச்சு

இந்தக் காரை ஃபாலோ பண்ணிட்டு வரலாம்."

"சரி... உங்க அடுத்த ஸ்டெப் என்ன வருண்...?"

"உன்னோட கேள்வி எனக்குப் புரியலை."

ஒரு சிக்னலின் சிவப்பு விளக்கு காரை நிறுத்த, பர்வதா அம்பாசிடர் காருக்குப் பின்னால் போய் மெல்ல நின்றாள்.

"லெட்டர்ல உங்களை மிரட்டியிருக்காங்க... இல்லையா...?"

"ஆமா..."

"அந்த மிரட்டலுக்கு உங்க பதில் என்ன..? லெட்டர்ல இருக்கிற மிரட்டலை வேதவாக்கா எடுத்துக்கிட்டு கீர்த்திவாசன் விவகாரத்திலிருந்து விலகிக்கப் போறீங்களா... இல்லை அந்த லெட்டரை இக்னோர் பண்ணப் போறீங்களா...?"

வருண் மெல்லப் புன்னகை செய்தான்.

"பர்வதா...! உனக்கு நான் ஒரு விஷயத்தைச் சொன்னா நீ ஆச்சர்யப்படுவே!"

"எங்கே... ஆச்சர்யப்பட வையுங்க பார்க்கலாம்..."

சிக்னல் பச்சைநிற அம்புக்குறியைக் காட்ட, கார் ஊர்ந்தது. வருண் சொன்னான்.

"என்னோட வாழ்க்கையில் நான் எதுக்காகவும் சரி... யாருக்காகவும் சரி, பயப்பட்டது கிடையாது. முதுகெலும்பு இல்லாத ஒருவன் எழுதிய இந்த மொட்டைக் கடிதத்தைப் பொருட்படுத்தப் போறதில்லை."

"மைகாட்... லெட்டரைப் பார்த்ததும் எங்கே ஜகா வாங்கிக்குவீங்களோன்னு பார்த்தேன்..."



"நோ.. நோ.. எனக்குச் சவால்கள் பிடிக்கும். மறைமுக எதிரிகளோடு புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தி நிழல் போல் செல்ல ரொம்பவே பிடிக்கும். தயானந்த் எனக்குக் கொடுத்திருக்கிற இந்தப் பணத்துக்கு இப்பத்தான் மதிப்பு கூடியிருக்கு..."

அண்ணாசாலையின் அகலத்துக்குள் இப்போது கார் நுழைந்தது.

"வருண்..! நீங்க இப்படி தைரியமாய் பேசறப்ப எனக்குச் சந்தோஷமாயிருக்கு. இந்த விஷயத்தை பாஸ் தயானந்த்கிட்டே சொன்னா அவர் ரொம்ப சந்தோஷப் படுவார்."

"இப்படியொரு லெட்டர் எனக்கு வந்தது பற்றி தயானந்த் ஸார்கிட்டே சொல்லலாமா, வேண்டாமா?"

"கண்டிப்பா அவர்கிட்டே சொல்லணும். எந்த விஷயமும் மறைக்கப்படறது அவருக்குப் பிடிக்காத ஒண்ணு. நாளைக்குக் காலையில் நான் அவர்கிட்டே பேசிக்கறேன்."

கார், போக்குவரத்து குறைந்து போயிருந்த அண்ணாசாலையில் வேகம் பிடித்து சிக்னல்களில் சிக்கிக் கொள்ளாமல் சிந்தாதரிப் பேட்டைக்குள் நுழைந்தது. சோகையான கார்ப்பரேஷன் ட்யூப்லைட் வெளிச்சத்தில் சிந்தாதரிப்பேட்டையின் குறுகலான தெருக்கள் குளித்துக் கொண்டிருக்க, வருண், பர்வதாவிடம் திரும்பினான்.

"கார் என் வீடு வரைக்கும் வர வேண்டாம் பர்வதா. இப்படியே ஓரமா நிறுத்திக்க..."

"ஏன் உங்க வீட்டுக்கு நான் வரக் கூடாதா?"

"அது வீடு கிடையாது. ஒரு சின்ன ரூம். பார்க்க ஒண்ணுமே இல்லை..."

பர்வதா தலையைச் சாய்த்து மெல்லப் புன்னகை செய்தாள்.

"ஓ.கே... காரை இதே இடத்தில் இப்படி ஓரமா நிறுத்தட்டுமா...?"

"ம்..."

கார் ரோட்டோரமாய் ஒதுங்கி நிற்க, வருண் கீழே இறங்கினான். பர்வதா கேட்டாள்.

"நாளைக்கு எங்கே பார்க்கலாம்?"

"நீதான் சொல்லணும்."

"இது என்னோட விசிட்டிங் கார்டு. நாளைக்குச் சாயந்தரம் ஆறு மணியிலிருந்து ஏழு மணிக்குள்ளே என் வீட்டுக்கு வந்துருங்க. கீர்த்திவாசனை எப்படி ஸ்மெல் பண்ணலாம்ங்கிறதைப் பத்தி பேசிக்கலாம்."

"நான் இனிமே தயானந்த் ஸாரைப் பார்க்க வேண்டாமா...?"

"வேண்டாம்... பட்... நீங்க பார்க்க விரும்பினா எப்ப வேணும்னாலும் போய்ப் பார்க்கலாம். பை... த... பை... உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கலாமா?"

"தாராளமா..."

"உங்க காதலி ஜெனிஃபரை தினசரி மீட் பண்ணுவீங்களா... இல்லை வாரத்துல குறிப்பிட்ட நாட்கள் மட்டுந்தானா?"

"அநேகமாய் தினசரி..."

"ஜெனிஃபர் கிட்ட எல்லா விஷயங்களையும் பத்தி பேசுவீங்களா?"

"இதுக்கும் பதில் அநேகமாய்."

"கீர்த்திவாசன் விவகாரத்தைப் பத்தியும் சொல்வீங்களா...?"

"மாட்டேன்..."

"ஏன்...?"

"இதெல்லாம் அவளுக்குப் பிடிக்காது. ஜெனிஃபர் ரொம்பவும் சென்ஸிடிவ் டைப்... இப்படிப்பட்ட குறுக்கு வழிகளில் நான் பணம் சம்பாதிக்கிறதை விரும்பமாட்டா."

"ஓ... கே வருண்..! இட் ஈஸ் கெட்டிங் லேட். நாளைக்கு என்னோட வீட்ல மீட் பண்ணும்போது மத்த விஷயங்களைப்பத்தி பேசிக்குவோம்... குட்நைட்..."

"குட்நைட்..."

வருண் கையசைத்துவிட்டு நடக்க ஆரம்பிக்க எதிர்த்திசையில் பர்வதாவின் கார் சிவப்பு விளக்குகளைக் காட்டியபடி சீறிப் போயிற்று.

வருண் நடந்தான். சிந்தாதரிப்பேட்டையின் குறுகலான தெருக்கள் சாக்கடை வாசனையோடு வெறிச்சோடிப் போய்த் தெரிய, அண்ணாச்சி தன் மளிகைக் கடையைப் பலகைகளால் சாத்திக் கொண்டிருந்தார். வருணைப் பார்த்ததும் சிரித்தார்.

"என்ன தம்பி... சினிமாவுக்கா போய்ட்டு வர்றீங்க..."

"ஆமா..." ஒரே வார்த்தையில் பேச்சை முடித்துக் கொண்டு நடைபோட்டான்.

"கடை நாளைக்கு லீவு... சிகரெட் வேணுமா தம்பி...?"

"வேண்டாம்... போன வாரமே சிகரெட் பிடிக்கறதை விட்டுட்டேன்..."

"அட...!" அண்ணாச்சி வியந்து கொண்டிருக்கும்போதே வருண் பக்கத்துக் குறுக்குத் தெருவில் நுழைந்து தன்னுடைய அறையை நோக்கிப் போனான். ட்யூப்லைட் கண்ணை மூடியிருந்தது. இருட்டில் நடந்து நெருக்கியடித்து உட்கார்ந்திருந்த வீடுகளுக்கு மத்தியில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த அந்த அறைக்கு முன்பாய் வந்து நின்றான். பெரும் நிசப்தமும் பார்ட்னர்ஷிப் போட்டிருக்க வருண் கையில் இருந்த கரன்ஸி நிரம்பிய ப்ரீப்கேஸைக் கீழே வைத்துவிட்டு - பூட்டைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட -

முதுகில் அந்த தொண்டைக் கனைப்புச் சத்தம் கேட்டது.

"க்க்கும்..."

வருண் திகைப்பாய்த் திரும்பினான்.

ஜெனிஃபர்.

....

யமுனா மனோன்மணியைக் கலக்கமாய் ஏறிட்டான். குரல் தொண்டையில் இடறியது.

"அது... வந்து... வந்து..."



"டாக்டர்! இந்த பேஷண்ட்க்குதான் வயித்துல ஆபரேஷன் பண்ணியாச்சே. அப்புறம் எதுக்கு கழுத்துல ஆபரேஷன் பண்றீங்க..?"

"இது விழாக்கால விசேஷ தள்ளுபடி..!"

- இடைப்பாடி மாணிக்கவாசகம்

"உன் சமத்துவ உணர்வை நினைச்சா புல்லரிக்குது கமலா!"

"என்ன சொல்றீங்க?"

"சாம்பார், ரஸம், பொறியல், கூட்டுனு எதிலுமே உப்பு இல்லே!"

- உ. ராஜாஜி

மனோன்மணி இடது பக்கமாய்த் தலையைச் சாய்த்துப் புன்னகை செய்தாள்.

"நான் லாயர்! என்கிட்ட பொய் சொல்லக்கூடாது. இன்ஸ்பெக்டர் பால் பாண்டியன் இதே ஏரியாவில் சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர். என்னோட க்ளையண்ட்லை ஜாமீன்ல எடுக்கிறதுக்காக ரெண்டு மூணு தடவை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனபோது பழக்கம். உனக்கு எப்படி அவர் பழக்கம்...?"

"எ..எ..எனக்குப்... பழக்கமில்லை..."

"பின்னே...?"

"என் கணவர்க்குத் தெரிஞ்சவர். வீட்ல எல்லாரும் சௌக்யமான்னு கேட்டார்..."

"அவ்வளவுதானா...?"

"ஆமா..."

மனோன்மணியின் புன்னகை பெரிதாகியது.

"நீ இவ்வளவு அழகா பொய் சொல்லுவேன்னு எனக்குத் தெரியாது."

"பொய்யா?"

"ம்... அக்மார்க் பொய். அவர் சௌக்ய மான்னு கேட்டதுக்காகவா அவரோட காலில் விழப்போனே?"

மனோன்மணி எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாள்.

"என்ன யமுனா! பேச்சையே காணோம். இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் ஒரு கண்டிப்பான போலீஸ் அதிகாரி. அதுவும் இல்லாமே அவர் ஒரு நாத்திகவாதி. கோயில் குளத்துக்குக் காரணம் இல்லாமே வர மாட்டார். உன்னைப் பார்த்து 'வீட்ல எல்லாரும் சௌக்யமா'ன்னு கேட்கிறதுக்கும் நீ அதுக்குப் பதில் சொல்றதுக்கும் ஒரு அரை நிமிஷ நேரம் போதும். ஆனா... நீ பத்து நிமிஷம் பேசியிருக்கே. பேசப் பேச கண்ணுல தண்ணி. திடீர்னு அவரோட கால்ல விழப் பார்த்தே. ஒரு இன்ஸ்பெக்டரோட கால்களில் குற்றவாளி விழறதைப் பார்த்துத்தான் எனக்குப் பழக்கம். நீ எதுக்காக அவர் கால்ல விழணும்?"



யமுனா யோசித்தாள்.

'மனோன்மணி ஒரு லாயர். இவளிடம் உண்மையைச் சொன்னால் இந்த இக்கட்டிலிருந்து விடுபட வழி கிடைக்குமா, இல்லை விவகாரம் பெரிதாகி வீதிக்கு வந்துவிடுமா?' முகம் உஷ்ணமான வியர்வையில் நிரம்பி நெற்றியின் மையத்தில் இருந்த குங்குமப் பொட்டு இளகி ஒரு சின்னக் கோடாய் வழிந்தது.

மனோன்மணி அவளுடைய தோள் மேல் கையை வைத்தாள். "நீ ஏதோ பிரச்னையில் மாட்டிக்கிட்டு இருக்கேன்னு எம் மனசுக்குப் படுது. சரியா...?"

"அது... வந்து..."

"உனக்கு விருப்பம் இல்லேன்னா சொல்ல வேண்டாம். ஆனா ஒரு விஷயம். நீ இப்படித் தனியா வந்து ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைச் சந்தித்துப் பேசற விஷயம் உன்னோட வீட்ல யாருக்காவது தெரியுமா?"

"யாருக்கும் தெரியாது."

"யாருக்கும் தெரியாமே உன்னால இந்தப் பிரச்னையை டீல் பண்ண முடியுமா?"

"ஏ... என்னால..."

"கண்டிப்பா முடியாது. இந்த போலீஸ்காரன்களைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். ஒரு ரெண்டு நிமிஷம் அப்படி உட்கார்ந்து யோசனை பண்ணு. அதுக்குள்ளே நான் நவக்கிரஹ சன்னதியைச் சுத்திட்டு வந்துடறேன்."

மனோன்மணி கிளம்பி கோயிலுக்குப் பின்பக்கம் இருந்த நவக்கிரஹ சன்னதியை நோக்கிப் போக, யமுனா தன் உடம்பில் ஓடுகிற மொத்த ரத்தமும் வற்றிவிட்ட உணர்வோடு அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தாள்.

(தொடரும்)

கோடிட்ட இடத்தைச் சிரிப்பால் நிரப்பினால்

ரூ.100/- பரிசு!


படிச்சதுமே 'பக்'னு சிரிப்பு வர்ற மாதிரி பதில் எழுதி அனுப்புங்க. கண்டிஷன் தெரியுமா?... அஞ்சல் அட்டையில தான் எழுதணும். ஓர் அட்டையில் ஒரு ஜோக் மட்டுமே இடம் பெறணும். முகவரியில் 'இமார்ப் பரிசுப் போட்டி'னு எழுதுங்க... ஆசிரியர் தீர்ப்புதாங்க ஃபைனல்! ரெடி ஸ்டார்ட்!




நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : உங்க புத்திசாலித்தனம் நூறு வாட் பல்பு கணக்கா பளிச்சிடும். அரைச்ச மாவையே அரைக்காம புது முயற்சிகள் செய்வீங்க. முயற்சி எல்லாம் வெற்றிதான். வி.ஐ.பி.ங்க 'போதும் போதும்'ங்கற அளவுக்கு உதவி மழை பொழிவாங்க. டீ-பார்ட்டி, மூன்லைட் டின்னர், பாக்கேஜ் டூர்னு கலக்கப் போறீங்க. இது ஒரு ஹாலிடே ஸ்பெஷல் வாரம். துட்டுக்கு ஒரு குறைச்சலும் வராது. அப்புறம் என்ன? என்ஜாய் பண்ண வேண்டியதுதானே?



ரிஷபம் : ரொம்ப உஷாரா இருக்க வேண்டிய வாரம். வேகாத வெய்யிலில் அலைய வேண்டி வரும். நேரம் காலம் தெரியாமே உடம்பு படுத்தி எடுக்கும். உடம்பு படுத்தற பாடு போதாதுன்னு மனசு வேறே 'நமநம'ன்னு குடைஞ்சுக்கிட்டே இருக்கும். புது முயற்சிகளை எல்லாம் நினைச்சுக்கூட பார்க்காதீங்க. சண்டை, சச்சரவுன்னு எதிலேயும் மாட்டிக்காதீங்க. எதிலேயும் நிதானமா யோசிச்சு நடந்துக்கங்க.



மிதுனம் : உங்க மனசில நல்ல எண்ணங்கள் உண்டாகும். அதுக்கு ஆதாயம் இல்லாமல் போய்டுங்களா? புருஷன் - பெண்டாட்டி உறவில் சலசலப்பு இருந்துக்கிட்டே இருக்கும். எந்த விஷயத்திலேயும் விட்டுக் கொடுத்து போய்டுங்க. கோபத்தையும் பதட்டத்தையும் குறைச்சுக்கங்க. பேச்சும் செயலும் நிதானமா இருக்கிற மாதிரி பார்த்துக்கங்க. பயணமெல்லாம் இப்ப வேண்டாமே!




கடகம் : இது உங்களோட 'சாதனை' வாரம். உங்களோட சாமர்த்தியத்தாலே பல சாதனைகளை செஞ்சு வி.வி.எஸ். லக்ஷ்மண் லெவலுக்கு உயர்ந்திடப் போறீங்க. எதிரிகள் எல்லாம் ஜூட் விட்டுடுவாங்க. கோர்ட், வழக்கு விஷயத்தில் 'ஜெ'க்கு கிடைக்குதோ இல்லையோ உங்களுக்கு ஜெயம்தான். பிரச்னைகள் எல்லாம் 'எங்கே?'ன்னு தேடுகிற அளவுக்கு மாயமாய் மறைஞ்சு போய்டும். கணவன் மனைவி இரண்டு பேரும் எம்.ஜி.ஆர். சரோஜாதேவி கணக்கா ஒருத்தர் மேல் ஒருத்தர் அன்பைப் பொழிவீங்க! அப்புறம் என்ன, நல்லி, குமரன், தங்கமாளிகைன்னு ஒரு ரவுண்டு வர வேண்டியதுதானே.



சிம்மம் : 'எல்லாத்துக்கும் ஒரு முகராசி வேணும்!'னு அடிக்கடி சலிச்சுக்கிட்டீங்களே, உங்களோட முகராசி இந்த வாரம் ஜோரா இருக்கு போங்க. அதோட, அரசியல்வாதிங்களைப் பார்த்துப் பார்த்து உங்க பேச்சாற்றலை வேறே வளர்த்துக்கிட்டீங்களா, இரண்டுமாகச் சேர்ந்து உங்களை எங்கேயோ கொண்டு போய் நிறுத்தப் போகுது. எடுத்த காரியத்தைக் காரைக்கால் அம்மா கணக்கா தலைகீழா நின்னாவது முடிச்சிடுவீங்க. ஆனா போட்டியும் பொறாமையும் கொஞ்சம் ஜாஸ்தி ஆயிடும். பக்குவமா சமாளிங்க. உங்களுக்குத் தெரியாததா? கெட்ட பழக்கங்களுக்கு மட்டும் இடம் கொடுத்திடாதீங்க. பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் 'டபுள்' உஷாரா இருங்க!



கன்னி : உங்களோட திறமையும் சாமர்த்தியமும் எல்லார் கண்ணையும் உறுத்துகிற மாதிரி வெளிப்படப்போகுது. வெளிநாட்டுத் தொடர்பால் பலன் அடையப் போறீங்க. ஃபாரின் டூரைக் கூட எதிர்பார்க்கலாம். பணத்தைப் பொறுத்தவரை நோ ப்ராப்ளம்! கொடுக்கல் வாங்கலில் எல்லாம் லாபமோ லாபம்தான். 'டும்டும்டும்' கேட்கப்போகுது. அட, தியேட்டரில் இல்லீங்க, வீட்டில்தான். பழைய வேண்டுதல்களை நிறைவேத்தறேன்னு ஆன்மீக டூர் கிளம்ப சான்ஸ் இருக்கு. ஆனா எந்தக் காரியத்தையும் எடுத்தேன், கவிழ்த்தேன்னு அவசரமா செய்யாதீங்க. பதட்டப்படாம நிதானமா செய்யுங்க. சொந்தக்காரங்க கொஞ்சம் பிரச்னை பண்ணுவாங்க, உஷாரா இருங்க.




துலாம் : உங்க துணிச்சலும் தன்னம்பிக்கையும் 'ஜிங்'ன்னு உயரப் போகுது. எடுத்த காரியத்தை முடிக்காம கீழே வைக்கமாட்டீங்க. அதில் வெற்றியும் அடைவீங்க, அதுதான்


ஏப்ரல் 25 முதல் மே 1 வரை

அக்னிசர்மா பக்கம்


விசேஷம். சொத்துப் பட்டியல் நீளப் போகுது. வீடு, நிலம், வாகனம் ஏதாவது ஒண்ணு கண்டிப்பா வாங்கப் போறீங்க. சின்னச் சின்னத் தடங்கல்கள் வரத்தான் செய்யும். நிதானமா சமாளியுங்க. வீண் செலவுகள் வேற ஏற்படும். எண்ணி எண்ணி மெட்ரோவாட்டர் கணக்கா செலவழியுங்க.




விருச்சிகம் : உங்களுடைய ரகசிய ஆசை எல்லாம் நிறைவேறப் போகுது. உங்க செயல்பாட்டின் ஸ்பீடு சும்மா சோழாவரம் ரேஸ் கார் கணக்கா பறக்கப் போகுது. அப்புறம் என்ன, வெற்றி மேல் வெற்றி தான். பிரமோஷன், இன்கிரிமெண்ட் எல்லாம் இதோ வந்துக்கிட்டே இருக்கு. எல்லாம் பாராட்டுற மாதிரி நிறைய காரியம் செய்வீங்க. வர்ற லெட்டர்களையும் ஈமெயில்களையும் விடாமல் படியுங்க. நல்ல செய்தி ஒண்ணு கண்டிப்பா உண்டு. வீண் வாக்குவாதம், சண்டை சச்சரவு எதிலேயும் மூக்கை நுழைக்காதீங்க.




தனுசு : இத்தனை நாள் நீங்க உழைச்சதோட பலனை இப்பத்தான் அனுபவிக்கப் போறீங்க. எதிர்ப்புகள் எல்லாம் மாயமா மறைஞ்சுடும். விளையாட்டு, கேளிக்கை, உல்லாசம்னு ஈடுபாடு ஜாஸ்தியாகும். கவலைகளை எல்லாம் மூட்டை கட்டி வெச்சிட்டு ஜாலியா டூர் போங்க. ஆனா உடம்பை மட்டும் ஜாக்கிரதையா பார்த்துக்கங்க. ஒரு நாள் போல ஒரு நாள் இருக்காது. அதே மாதிரி, கோபம், பதற்றம் இதை எல்லாத்தையும் கன்ட்ரோல் பண்ணுங்க. சுவிட்ச் உங்ககிட்டே தானே இருக்கு? அதிர்ஷ்ட வாய்ப்பு ஒண்ணு அடிக்கப்போகுது. எல்லா போட்டிகளிலும் ஒண்ணு விடாமே கலந்துக்கங்க.



மகரம் : உங்களுடைய புத்திசாலித்தனமும் சாமர்த்தியமும் வெளிப்படப் போகுது. பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். எதிரிகள் காணாமல் போய்டுவாங்க. வீட்டில் நல்ல காரியம் ஒண்ணு நடக்கப் போகுது. ஆனால் எதிலேயும் அகலக்கால் வைக்காதீங்க. எதிர்பார்க்காத இடத்திலிருந்து செலவுகள் முளைக்கும். கைப் பொருள்களைப் பத்திரமா பாதுகாத்துக்கங்க. தொலைஞ்சு போயிட்டா 'அம்மா'ன்னாலும், 'அப்பா'ன் னாலும் வராது.



கும்பம் : உங்கள் பேச்சாற்றலைப் பார்த்து எல்லாரும் மூக்கிலே விரல் வைக்கப் போறாங்க. வாழைப்பந்தல் ரெடி பண்ணுங்க. வீட்டில் சுபகாரியம் ஒண்ணு நடக்கப் போகுது. நண்பர்கள், உறவினர்கள், சகோதர, சகோதரிகள் 'யாமிருக்க பயமேன்'னு கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவாங்க. ஆன்மீக விஷயங்களில் திடீர்னு ஆர்வம் அதிகமாகும். பலன், மனசு தெளிந்த நீரோடையா இருக்கும். ஆனால் அலைச்சல், உழைப்பு இதெல்லாம் கன்னா பின்னான்னு ஜாஸ்தியாயிடும். அதனாலே உடம்பை கொஞ்சம் நல்லாவே கவனிச்சுக்கணும்.



மீனம் : வி.ஐ.பி.ங்க தொடர்பு கிடைக்கும்போது, 'லபக்'னு பிடிச்சு பாக்கெட்டுக்குள்ளே போட்டுக்கங்க. நன்மை உங்களுக்குத்தான். சில வீரதீர செயல்கள் செஞ்சு 'ஹீரோ' ரேஞ்சுக்கு உயரப் போறீங்க. ஆன்மீக விஷயங்களில் நாட்டம் ஜாஸ்தியாகும். கடவுளோட அனுக்கிரஹத்தால், எடுத்த காரியங்களை எப்படியாவது முடிச்சிடுவீங்க. பெண்கள், நகை, நட்டு, புடவை, பட்டுன்னு வாங்கப்போறாங்க. ஆனால், உடம்பைப் பத்திரமாக பார்த்துக்கணும். உஷ்ணம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் வரலாம்.

85—வது நாவலை எழுதிக் கொண்டிருக்கும் தனுசு ராசிக்காரரான ரமணி சந்திரனுக்கு இந்த வாரம் என்ன பலன்னு படித்துத் தெரிஞ்சுக்குங்களேன்!





ஆச்சி மனோரமா

"நிறுத்து நாடகத்தை!" என்றார் அண்ணா

அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி இருவருமே திரைப்படங்களில் மட்டுமில்லாமல், தமது நாடகங்களாலும் மக்கள் மனத்தைக் கிளர்ந்தெழச் செய்தவர்கள். சினிமாவைப் போலவே, நாடகங்களிலும் அவர்கள் எழுதிய வசனங்கள், வரிக்கு வரி, ரசிகர்களின் கை தட்டலை வாங்கும் காந்த சக்தி படைத்தவை.

அப்படிப்பட்ட நாடகங்களில் ஒன்றுதான் 'மணி மகுடம்.' கலைஞர் எழுதிய அந்த நாடகத்தில், எஸ்.எஸ்.ராஜேந்திரன் நடித்தார். அந்த சமயத்தில்தான், 'மணி மகுடம்' நாடகத்தில் நடிப்பதற்காக, சென்னைக்கு வரவழைக்கப்பட்டேன்.

நாடகத்தில், எனக்கு புரட்சிகரமான கருத்துகள் கொண்ட, எதையும் துணிச்சலுடன் சமாளிக்கிற, தைரியசாலி கேரக்டர். ஏற்கெனவே நாடக அனுபவம் கொண்டவள் என்பதால் கலைஞரின் முறுக்கேறிய வசனங்களை நன்றாகப் பாடம் செய்து கொண்டு, மேடையில் பிளந்து கட்டுவேன். எஸ்.எஸ். ராஜேந்திரனின் நடிப்பும், வசன உச்சரிப்பும் நாடறிந்த விஷயமாயிற்றே! நாடகக் காட்சிகளை, மக்கள் மெய்மறந்து ரசித்துக் கை தட்டுவார்கள்.

வட சென்னையில் அப்போது பிரபலமாக விளங்கிய செயின்ட் மேரீஸ் அரங்கில்தான் 'மணி மகுடம்' நடைபெற்றது. ஒரு முறை நாடகத்துக்கு சிறப்பு விருந்தினராக வந்தவர் யார் தெரியுமா? அறிஞர் அண்ணா!

நாடகம் பார்த்த அண்ணா, பொதுவாகப் பாராட்டினார் என்றாலும், என்னைப் பற்றி அவர் குறிப்பிட்ட ஒரு சில வரிகள் எனக்கு இன்னமும் நன்றாக நினைவில் இருக்கின்றன. "இந்த நாடகத்தில் வந்தாரே மனோரமா, அவரைப் போன்ற ஒரு பெண், நம் கட்சியில் இருந்தால், நமது கட்சி, தமிழக மக்களின் பேராதரவை, வெகு சுலபமாகப் பெற்றுவிட முடியும்" என்றார் உறுதியாக.

அதற்குப் பிறகு தாம் ஓய்வாக இருக்கிற நாட்களில் 'மணி மகுடம்' நாடகம் இருக்கிறது என்றால் தவறாமல் அண்ணா, நாடகத்தைப் பார்க்க வந்து விடுவார்.

'விடை கொடு தாயே!' என்று ஒரு நாடகம். இந்த நாடகத்தை எழுதியவர் முரசொலி சொர்ணம். அதுவும் நறுக்குத் தெரித்தாற் போன்ற சூடான வசனங்கள் கொண்ட அற்புதமான நாடகம். அதில் கதாநாயகியாக நடித்தேன். சித்திக் கொடுமையால் துன்பப்படும் ஒரு பெண், கயவன் ஒருவனால் வஞ்சிக்கப்படுகிறாள். அதன்பின், அவள் தனது வாழ்க்கையை எப்படி எதிர்கொண்டு ஜெயிக்கிறாள் என்பதுதான் கதை. அதில் நடித்துக் கொண்டிருந்த நான், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குப்பின், சினிமாவில் ரொம்ப பிசியாகிவிட்டதால், தொடர்ந்து நாடகத்தில் நடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. நாடகத்தில் நடிப்பதைத் தற்போதைக்கு நிறுத்திக் கொண்டு விடலாம் என முடிவு செய்து, அதை நாடகக் கம்பெனியிலும் நான் சொல்லிவிட்டேன்.

அவர்களும் என்னுடைய நிலைமையைப் புரிந்து கொண்டு, என் கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்து கொண்டார்கள். வேறு ஒரு நடிகை 'விடைகொடு தாயே' நாடகத்தில் கதாநாயகியாக நடிக்கத் தொடங்கினார்.

அதன்பின் ஒரு நாள், அறிஞர் அண்ணா, அந்த நாடகத்தைப் பார்த்தார். மறுநாள், நாடகத்தை எழுதிய முரசொலி சொர்ணத்தைத் தம்மை வந்து பார்க்கும்படி சொல்ல, சொர்ணம், அடுத்த நாள், அண்ணாவை அவரது வீட்டில் சந்தித்திருக்கிறார்.



"இதுவரை நான் நாடகத்தால்தான், நடிக்கிறவர்களுக்குப் பெயர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நேற்று உங்கள் நாடகத்தைப் பார்த்தபோது, என் கருத்தை நான் மாற்றிக் கொண்டு விட்டேன். நாடகத்தால், நடிகர்கள் இல்லை. நடிக்கிறவர்களால்தான் நாடகத்துக்குப் பெயரும், புகழும் கிடைக்கிறது. 'மனோரமா'வால் இனி இந்த நாடகத்தில் நடிக்க முடியாது என்றால், இந்த நாடகத்தை இனிமேல் போடாதீர்கள். நிறுத்தி விடுங்கள்" என்று அண்ணா சொன்னாராம்.

நாடகத்தில் நடித்தபோது அதைப் பார்த்துவிட்டு அண்ணா பாராட்டியது ஒரு விதம் என்றாலும், நான் நடிக்க முடியாத சூழ்நிலையில் அவர் குறிப்பிட்ட வார்த்தைகள் எனக்குக் கிடைத்த மிக உயர்ந்த பாராட்டு என்று நான் இன்றைக்கும் நினைக்கிறேன்.

'சந்திரமோகன்' அண்ணா எழுதிய நாடகம். அதற்கு 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்று இன்னொரு தலைப்பும் உண்டு. அதிலே கதாநாயகனின் பெயர் சந்திர மோகன். கதாநாயகியின் பெயர் இந்துமதி. அதில் சத்திரபதி சிவாஜியும் ஒரு கதாபாத்திரம். இந்த நாடகத்தில் சந்திர மோகனாக கே.ஆர்.ராமசாமியும், சிவாஜியாக ஈ.வி.கே. சம்பத்தும், இந்துமதியாக நானும் நடித்தோம்.

இதில் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு கால கட்டத்தில், இந்த கதாபாத்திரங்களில் வெவ்வேறு நபர்கள் நடித்திருக்கிறார்கள். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், இந்த நாடகத்தில் சிவாஜியாக நடித்துக் கொண்டிருந்தபோது, அவரது நடிப்பைப் பார்த்து வியந்துபோன தந்தை பெரியார் அளித்த பட்டம்தான் 'சிவாஜி' (ஒரு கட்டத்தில், எஸ்.எஸ். ராஜேந்திரன் சந்திரமோகனாக நடிக்க, நடிகர் முத்துராமன் சிவாஜி கேரக்டரில் நடித்திருக்கிறார்)



சிதம்பரத்தில் 'சிவாஜி

கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகம் போட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போதுதான், எனக்கு அண்ணாவுடன் நாடகத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது.

அன்றைய நாடகத்திலும் கதாநாயகன் சந்திரமோகனாக கே.ஆர்.ராமசாமியும், சிவாஜியாக ஈ.வி.கே. சம்பத்தும், இந்துமதியாக நானும் நடிக்க, அண்ணா, 'காகபட்டர்' என்ற கேரக்டரில் நடித்தார். காகபட்டர் ஒரு மடாதிபதி. வழக்கம் போலவே, அன்றைய தினமும், எங்கள் நாடகத்தை மக்கள் கைத்தட்டி ரசித்து மகிழ்ந்தார்கள்.

“இது நாள் வரை, நான் எழுதிய வசனத்தை நீங்கள் பேச, நான் பார்வையாளர்களில் ஒருவனாக அமர்ந்து ரசித்திருக்கிறேன். ஆனால், இன்றைய தினம், உங்களுடன் மேடையில் நடிக்கிற வித்தியாசமான அனுபவம் எனக்குக் கிடைத்தது” என்று குறிப்பிட்டார் அண்ணா.

சிதம்பரத்தில் நடந்த அந்த ஒரு நாடகத்தில் மட்டுமே அண்ணா நடித்தார். அதற்கு முன்பும் சரி, அதற்குப் பின்பும் சரி, அண்ணா என்னுடன் நடிக்கவில்லை. வேறு எந்த நாடகத்திலாவது அவர் நடித்திருக்கிறாரா என்பதும் எனக்கு நினைவில் இல்லை.



மணி மகுடத்தை யடுத்து, கலைஞர் எழுதிய நாடகம் 'உதயசூரியன்.' மேடையேறியது முதலே, மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்ற நாடகம் அது. அந்த நாடகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் கலைஞரின் வசனங்கள் தான்.

நாடகத்தின் கதாநாயகனாக நடித்தவர் யார் என்று சொன்னால், ஆச்சரியப்படுவீர்கள். கலைஞரேதான்! காங்கிரஸ் கட்சியின் பால் அபிமானம் கொண்ட இளைஞராக கலைஞர் கதாபாத்திரமும். திராவிடக் கட்சியின் மீது அபிமானம் கொண்ட இளம் பெண்ணாக எனது கதாபாத்திரமும் உருவாக்கப்பட்டிருந்தன.

அதில் ஒரு குறிப்பிட்ட காட்சியை என் ஆயுளுக்கும் மறக்க முடியாது. காங்கிரஸ் கட்சி அபிமானியான இளைஞர் கலைஞரை பேசிப்பேசியே மனத்தை மாற்றி, அவரையும் திராவிட அனுதாபியாக மாற்றுகிற காட்சிதான் அது.

கலைஞர் இடையே என்னை மடக்குகிறார் போல கேள்விகள் கேட்பார். நான்தான் தொடர்ந்து, பேசிக் கொண்டே இருப்பேன். இந்தக் குறிப்பிட்ட காட்சிதான் நாடகத்துக்கே ஜீவநாடி போல. இந்தக் காட்சி மட்டுமே நாடகத்தில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு வரும்படி அமைக்கப்பட்டிருந்தது. அந்த ஒரு மணி நேரத்தில் ஐம்பது நிமிடத்துக்கு நானேதான் பேசிக் கொண்டிருப்பேன் என்று சொல்லலாம். வரிக்கு வரி கை தட்டல் தான். ரொம்ப சந்தோஷமாக இருக்கும். இன்று ஆயிரம் சினிமாவில் நடித்து, பல பாராட்டுக்களைப் பெற்றுவிட்டாலும்கூட நாடகத்தில் நடிக்கிற கால கட்டத்தில் குறிப்பாக 'உதய சூரியன்' நாடகத்தில் அந்தக் காட்சியில் நடிக்கிறபோது, ரசிகர்கள் கொடுத்த கரகோஷம் அளித்த சந்தோஷத்துக்கு எதுவும் இணையாகாது.

கலைஞர் எழுதிய வசனத்தை அந்த நாடகத்தின் ஒரு காட்சியில் அவரிடமே பேசி, நான் கை தட்டலைப் பெற்றேன். இதுபோன்ற அபூர்வமான வாய்ப்பு எத்தனை பேருக்குக் கிடைக்கும்? அதுவும் நாடக ஒத்திகைகளின்போது உச்சரிப்பு, வசனப் பரிமாற்றம் இவற்றில் கலைஞர் அளித்த பயிற்சி, திருத்தங்கள், சரியாய்ச் செய்தபோது. அளித்த பாராட்டு எல்லாம் என்றும் என் நெஞ்சில் நிற்பவை.

நான் கலைஞரின் வசனங்களை அமர்க்களமாய்ப் பேசி கை தட்டல் வாங்கினேன் என்றாலும்கூட, அப்போது எனக்கு அரசியல், கட்சி, கொடி போன்ற விஷயங்களையெல்லாம் புரிந்து கொள்கிற வயசோ, மனப்பக்குவமோ இல்லை. கொடுத்த வசன பாடத்தை மனப்பாடம் செய்து, மேடையில் நன்றாக நடித்து, பாராட்டு பெற்ற ஒரு கலை உலக மாணவியாகத்தான் இருந்தேன்.

(அடுத்த வாரம் : ஜெயலலிதா)

படம் : **யோகா**

காலை நேரம்



பொய் லோலர்கள்
புரட்டு தாசிகளை
அரவணைக்கும் நேரம்.

சத்தியத்தின் தலைகளை
கோவலர்களாய்
கொலை வாட்கள்
காணும் நேரம்.

வாக்குச் சீதைகள்
அசோகவனம் புக்க
அரசியல் மாரீச
பொன்மான்கள்
உலவும் நேரம்.

துரியோதனர்கள்
தருமர்களாக
அரிதாரம் பூசி
பொய் முகங்களுடன்
இளிக்கும் நேரம்.

சகுனிகளும் கூனிகளும்
அரிச்சந்திரர்களாய்
பவனி வரும் நேரம்

உலோபிகள்
கர்ணப் பிரபுக்களாய்
காட்சி அளிக்கும் நேரம்.

இந்திரஜித்துக்களின்
பிரம்மாஸ்திரங்கள்
நம்மை மயக்கும் நேரம்.

இது,
தேர்தல் நேரம்.

கே.பி. பத்மநாபன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Anywhere. Anytime.



- 91% on-time performance
- Convenient connections
- Extensive network with our airline partners

एअर-इंडिया AIR-INDIA

Contact Air-India or your travel agent for details. Visit our website at www.airindia.com